அறைவு 03 இயம் 47 June 06 - 12, 2015

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

மலைமுரசு
MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்

பக்கங்கள் : 20 விலை : 30.00

SPONSOR VISA
IELTS
@
VBC
Veal Business College
026 2227622 - 07702 03 201



HELLO MOBILE WORLD
122, NC Road
Trincomalee
0777154663 - 0712674050

# கிழக்கில் கரையோர மாவட்டம்

## சனாதிபதியிடம் பஷீர் கோரிக்கை



முஸ்லிம்களின் கரையோர மாவட்டத்திற்கான சட்ட ரீதியான அங்கீகாரத்தை தற்போதைய பாராளுமன்றம் கலைக்கப் - படுவதற்கு முன்பாக பெற்றுக்கொடுக்க முன்வருமாறு ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாண முஸ்லிம்களுடன் தொடர்புபட்ட விடயங்களை தெளிவுபடுத்தும் வகையில் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் பஷீர் இக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.....

21

## கூட்டுவன்புணர்வின் பின் பெற்றோல் ஊற்றி எரிப்பு

### திருகோணமலையில் வெளிவராத சம்பவம்

கூட்டு வன்புணர்வின் பின்னர் இளம் தாயொரு வரைக் கொலை செய்ய முயன்ற சம்பவமொன்று திருகோணமலையில் நிகழ்ந்துள்ளது.

குறித்த இளம் தாயார் தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெற்றதை அடத்து சிவில் சமூக ஆர்வலர்கள் இவஅவரைப் பார்க்கச் சென்றபோதே இத்துயரச் சம்பவம் தொடர்பான விடயங்கள்

21



## "முருக்கையடிமுனைக் கிராமத்தை எமக்கு மீளத்தாருங்கள்"

### மக்கள் போராட்டம் - த.தே.ம.மு ஆதரவு

முருக்கையடிமுனைக் கிராம மக்கள் தமது பூர்வீகக் காணிகளைத் தம்மிடம் கையளிக்குமாறு அரசாங்கத்தைக் கோரியுள்ளனர்.

இராணுவத் தேவைக்காக கையகப்படுத்தப்பட்டுள்ள சுமார் ஐம்பது ஏக்கர்கள் காணிகளை விடுவிக்கும் இந்த முயற்சிக்கு கஜேந்திரகுமார்

21



3வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக

இவ்வாரம் 24 பக்கங்கள்

## தமிழ் மக்கள் போராடாமல் எதனைப் பெற்றுக்கொண்டார்கள்???

### போராடத் தயாராகும் கல்வி முதுமாணிகள் மாணவர் சங்கத்தினர் கேள்வி




கிழக்கில் மட்டும் அல்ல இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் போராடாமல், வீதியில் இறங்காமல் எதைப் பெறறுள்ளார்கள். இது எமது தமிழ் பேசும் சமூகம் பெற்றுவந்த வரமாக இருக்கலாம். அதற்கு நாங்களும் விதிவிலக்கல்ல. மறுக்கப்பட்டுள்ள எமது உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காகப் போராட வேண்டியுள்ளது என கிழக்கிலங்கை கல்வி முதுமாணி மாணவர் சங்கத்தினர் விடுத்துள்ள ஊடக அறிக்கை தெரிவிக்கின்றது.

21

## கிழக்கில் படைவீரர் கௌரவிப்பு

கிழக்கு மாகாண படை வீரர் கௌரவிப்பு விழா நிகழ்ச்சிகள் இம்மாதம் 08 ம் திகதி காலை 09.30 மணிக்கு திருகோணமலை பிரட்ரிக்கோட்டை வளாகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்ணாந்து தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் எம்.கே. ஏ.டி.எஸ். குணவர்த்தன, கிழக்கு

21

## மீறாவோடை காணிகளை மீட்கத் தமிழர்கள் போராட்டம்

வாழைச்சேனைப் பிரதேசச் செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட மீறாவேடைக் கிராமத்தில் தம்ழர்களின் காணிகளை முஸ்லிம்கள் அத்துமீறி அபகரிப்பதாகக் கூறி தமிழ் மக்கள் மீண்டும் போர்க்கொடியை உயர்த்தியுள்ளனர்.

கடந்த வியழக்கிழமை இப்போராட்டம் மட்டக்களப்பு நகரில் நடைபெற்றது.

போருக்குப் பின்னரான மீள்குடியேற்ற நடவடிக்கையின் போது அரசினால் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளிலேயே இவ்வாறான அத்துமீறல்கள் நடைபெறுவதாக தமிழ் மக்கள் தெரிவித்துள்ளனர். அதேவேளை இவ்வாறு தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளில் நூற்றுப் பதினெட்டு வருடங்களுக்கு முற்பட்ட தமது

21




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் உண்மையை மட்டும் உலகிற்கு வெளிப்படுத்தும் கிழக்கின் வார இதழ் -

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

# மனித உரிமை ஆய அறிக்கை அதன் முக்கியத்துவம்!

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் கூடவுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆயத்தில் இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட நிபுணர்களின் அறிக்கை வெளியிடப்படலாம் என்ற எதிர்பார்ப்பு பலமாக உள்ளது.

இந்தப் போர்க்குற்ற விசாரணை அறிக்கையின் முக்கியத்துவத்தைத் தெரிந்து கொண்டிருக்கும் தரப்புக்கள் அந்த அறிக்கை வெளிவருவதை விரும்பவில்லை.

அறிக்கை வெளியிடப்படுவதால் ஏற்படும் பாரதூரமான விளைவுகளை முன்னரே தடுத்து அந்த அறிக்கையின் முக்கியத்துவத்தையும் அவ்வறிக்கையின் அடிப்படையில் முன்மொழியப்படும் நடவடிக்கைகளை அதற்கு முன்னரே உள்நாட்டில் உருவாக்கிக் கொள்வதன் ஊடாக முன்மொழிவுகளை நீர்த்துப் போகச் செய்துவிடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு முன்னெடுக்கப்டும் நடவடிக்கைகள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் முன்னெடுக்கப்படுவதுடன் அந்நடவடிக்கைகளிற்குப் பங்காளிகளாகச் செயலாற்றுவதற்காகச் சில தமிழ் பங்காளிகளையும் அந்தப் பொறிமுறை உள்வாங்கியிருப்பதாகவே தெரிகின்றது.

உள்நாடடில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய கூட்டுக் கட்சியொன்றிலுள்ள பிரதானமான கட்சியின் அங்கத்தவர்களும், சர்வதேசத் தளத்தில் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தன்னார்வத் தொண்டு நிறுவனமொன்றும் இந்த நடவடிக்கையின் பங்காளிகள் எனத் தெரிகின்றது.

ஐ.நாவின் அறிக்கை வெளியாகுமானால் அந்த அறிக்கையானது ஸ்ரீலங்கா அரசின் மீது தொங்குகின்ற நிரந்தரக் கத்தியாக அமைந்துவிடும்.

அதாவது போர்க்குற்ற ஆதாரங்களும் அப் போர்க் குற்றங்களை நிகழத்தியவர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களின் பெயரும் அவ்வறிக்கையில் சேர்க்கப்பட்டிருக்கும் வாய்ப்பபு உள்ளமை கண்கூடு.

அவ்வறிக்கை வெளியிடப்பட்டால் அவ்வறிக்கையினை ஐநாவின் மனித உரிமை ஆணைக்குழு விவதாதத்திறகு எடுத்துக் கொள்ளும். அவ்விவாதத்தில் ஐநா ஸ்ரீலங்காவில் நடைபெற்றதாக அறிக்கை கூறுகின்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக எந்தவகையான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பது ஆராயப்படும்.

போர்க்குற்றம் தொடர்பான ஐநாவின் சரத்துக்களில் இலங்கை கையொப்பமிடவில்லை. அவ்வாறு கையொப்பம் இட்டிருந்தால் ஐநா மனித உரிமை ஆணைக்குழு தீர்மானிக்கும் நடவடிக்கைகள் இலங்கையின் மீது எடுக்கப்பட்டு விடும். ஆனால் அந்த சரத்துக்களில் இலங்கை கையெழுத்திடாததால் ஸ்ரீலங்கா மீது நடவடிக்கைகளை முன்மொழிந்து ஐநாவின் பாதுகாப்புச் சபைக்கு மனித உரிமை ஆயம் அறிக்கையிடும்.

அவ்வறிக்கையின் முன்மொழிவுகளுக்கு ஏற்ப ஸ்ரீலங்கா மீது நடவடிக்கை எடுப்பதா என்பது பற்றி பாதுகாப்புச் சபையே முடிவை மேற்கொள்ளும். இங்கு பாதுகாப்புச் சபையின் உறுப்புரிமை நாடுகளுக்கு வீட்டோ அதிகாரம் இருப்பதைக் கவனத்தில் கொள்க.

பாதுகாப்புச் சபையில் எடுக்கப்படும் முடிவின் அடிப்படையில் ஸ்ரீலங்காவின் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

எனினும் தற்போதுள்ள சர்வதேச அரசியற் சூழ்நிலையில் இலங்கையின் புதிய அரசை இந்தியா உட்பட மேற்குலக நாடுகள் கடுமையாக ஆதரித்து வருகின்றன. அந்த அரசுகள் இலங்கையின் மீது விசாரணை ஆரம்பிக்கப்படுவதை விரும்பப் போவதில்லை, அத்துடன் குற்றஞ்சாடடப்பட்டவர்கள் கைதாவதைத் தடுக்கவும் நிச்சயம் முனையலாம்.

இதனால் ஐநாவின் மனித உரிமை ஆணையகத்தில் வெளியாகும் அறிக்கை இலங்கைமீது தற்போது நடவடிக்கைகள் எதனையும் கொண்டு வரப் போவதில்லை என்றே புலனாகின்றது.

அறிக்கை வெளியிடப்பட்டால் எப்போது வேண்டுமானாலும் அந்த அறிக்கையைத் தூசு தட்டி ஸ்ரீலங்காவிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வல்லரசுகளால் முடியும் என்பதே கசப்பான உண்மை.

எனவே அந்த அறிக்கை வெளியிடப்பட்டு அதன் பின்னர் போர்க்குற்ற விசாரணையொன்று நடாத்தப்படுவதை தற்போதைய அரசு விரும்பப் போவதில்லை.

அதனாலேயே போர்க்குற்ற விசாரணையைப் பின்தள்ளி நல்லிணக்க முயற்சிகளை எடுக்க அரசு கடும் பிரயத்தனத்தில் உள்ளது. அதற்குத் துணைபோக உள்நாட்டு வெளிநாட்டு தமிழ் அணிகளும் உடந்தையாகியுள்ளன.

மக்கள் சிந்திக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது!

## கிழக்கு மாகாணக் கலாசார உத்தியோகத்தர் சங்கம் இரங்கல்

மண்டூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் சமூகசேவை உத்தியோகத்தராக கடமையாற்றியவருமான சச்சிதானந்தம் மதிதயன் அவர்கள் ஈவிரக்கமற்ற முறையில் படுகொலை செய்யப்பட்டமையை கிழக்கு மாகாண கலாசார உத்தியோகத்தர்கள் சங்கம் வன்மையாக கண்டிக்கின்றது.

கருத்தியல் ரீதியாக எழும் எதிர்வினை மற்றும் முரண்பாடுகளை கருத்தியல் ரீதியாக எதிர்கொள்ளாமல் வன்முறை வழியை தேர்ந்தெடுத்ததினால் இன்று ஓர் அரச அதிகாரியை நாம் இழந்து நிற்கின்றோம். சச்சிதானந்தம் மதிதயன் அவர்கள் சமூக சேவை உத்தியோகத்தராக மட்டுமல்லாது தான் வாழ்ந்த சமூகத்திற்கும் பல காத்திரமான பணிகளை ஆற்றியுள்ளார். படுகொலை கலாசார இருண்டயுகம் நிறைவுபெற்று விட்டது என நாம் எண்ணியிருந்த நேரத்தில் இப்படுகொலை நடைபெற்றுள்ளது. முரண்பாடுகளை தீர்ப்பதற்கு கொலை ஒரு வழியாகவோ அல்லது தீர்வாகவோ அமையமாட்டாது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

படுகொலை செய்யப்பட்ட சச்சிதானந்தம் மதிதயன் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் கலாசார உத்தியோகத்தர்கள் சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம் என அச்சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

## முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு துரோகம் இழைக்கமாட்டேன்

எனது அரசியல் பிரவேசம் ஒரு விபத்தைப் போன்றது. எனது சகோதரர் மர்கூம் பைத்துள்ளா விடுதலைப்புலிகளின் தற்கொலைத் தாக்குதலில் மூதூரில் கொலை செய்யப்பட்ட பின்னர் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பவே அரசியலில் நுழைந்தேன்.

பெருந்தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஸ்ரபின் மறைவுக்குப் பின்னர் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பவே தேசியத் தலைவர் செயல்படுகின்றார். இந்த அரசியல் விலாசத்தைப் பெற்றுத் தந்தது மு.காங்கிரஸ் எனவே நான் துரோகத்தை செய்ய மாட்டேன் என அமைச்சர் தௌபீக் தெரிவித்தார்.

## பணிப் புறக்கணிப்பால் மூதூர் நகரம் ஸ்தம்பிதம்

"மூதூர் வைத்தியசாலையின் குறைகளைக் களைவதற்கு உரிய அரச தரப்புக்களால் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படாததைக் கண்டித்து அங்கு பணிப்புறக் - கணிப்பொன்று நடாத்தப்பட்டுள்ளது.

கடந்த 04ம் திகதி நடைபெற்ற இப் இப்பணிப்புறக்கணிப்பால் மூதூர்நகரத்தின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டதுடன் போக்குவரத்தும் முற்றாக முடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அச்சுதன்)



## சேனையூர் நாகம்மாள் ஆலயத்தில் வைகாசிப் பொங்கல்

கிழக்கு இலங்கையில் வரலாற்றுச்சிறப்புமிக்க சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல் விழா 31.05.2015 ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதன் போது மடைப்பெட்டி ஊர்வலத்திற்கான ஆரம்பப்பூசை நடைபெற்று பிரதான பொங்கல் வளந்து வைக்கப்பட்டது.




## சிதைவடையும் "மலையருவி"

திருகோணமலை நகரில் அமைக்கப்பட்டுள்ள மலைஅருவி என்ற மெல்ல் மெல்ல அழிவடைந்து வருகின்றது.

இக்கட்டிடம் திருகோணமலை நகரசபைக்குச் சொந்தமானதுடன் மறைந்த முதல்வர் சூரியமூர்த்தி அவர்களின் காலத்தில் உருவாக்கப்பட்டதாயினும் அவரது பெயரைக் கொண்டமைந்ததல்ல.

இக்கட்டிடத்தை பாதுகாக்க வேண்டும் என ஆர்வலர்கள் வேண்டுகின்றனர் (அச்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மாணவர்களை அடுத்த தலைவர்களாக உருவாக்குக"

மாணவர்கள் நற்பிரஜைகளாக வாழும் முறை தொடர்பில் உயர்தர மாணவர்களை விழிப்புணர்வூட்டும் கருத்தரங்கு மட்டக்களப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட புனித மைக்கேல் கல்லூரியில் கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு சிறைச்சாலை ஆணையாளர் ஏ.பிரியங்கர தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் அவர், "இன்று சிறைச்சாலைகளில் அதிகளவிலான மாணவர்கள் கைதிகளாக உள்ளனர். மாணவர்கள் மத்தியில் சிறைச்சாலைக்கு செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலைமையினை கட்டுப்படுத்தி சிறந்த நற்பிரஜைகளை உருவாக்கும் வகையில் பல்வேறு செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் ஓர் அங்கமாக குற்றவாளிகளாக அல்லாமல் நல்ல தலைவர்களாக வாழும் முறை தொடர்பில் உயர்தர மாணவர்களை விழிப்புணர்வூட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன" என்றார்.

## காவல்துறையின் புகைத்தல் ஒழிப்புப் பேரணி

புகைத்தல் ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு மட்டக்களப்பு காவல் நிலையம் ஏற்பாடு செய்த புகைத்தலுக்கு எதிரான பேரணியொன்று நேற்று வெள்ளிக்கிழமை காலை மட்டக்களப்பு நகரில் நடைபெற்றது.

இந்த பேரணியில் மட்டக்களப்பு மாவட்ட காவல்துறை அத்தியட்சகர் உபுல் ஜெயசிங்க, உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் அதிகாரிகள், மாணவர்கள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். மட்டக்களப்பு காவல் நிலையத்திலிருந்து ஆரம்பமான இப்பேரணி மட்டக்களப்பு மாநகர சபை ஊடாக சபை மண்டபத்தை சென்றடைந்தது.




மலைமுரசு
MALAIMURASU

# மட்டக்களப்புச் செய்திகள்

## மட்டுக்கு பொன்சேகா விஜயம்

ஜனநாயக கட்சியின் தலைவர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எதிர்வரும் 12ஆம் திகதி வியாழக்கிழமையன்று மட்டக்களப்பு, ஓட்டமாவடி, ஏறாவூர், காத்தான்குடிக்கு ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்யவுள்ளார். அவர், கல்குடா, மட்டக்களப்பு, காத்தான்குடி ஆகிய இடங்களில் ஜனநாயக கட்சி அலுவலகங்களையும் திறந்து வைப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. மட்டக்களப்பு செல்வநாயகம் மண்டபத்தில் வைத்து அவருக்கு அன்றைய தினம் கௌரவமளிக்கப்படும் என்று அக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரும், மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் மேயருமான திருமதி.சிவகீர்த்தா பிரபாகரன் தெரிவித்தார்.



## சோரம் போக மாட்டோம்
### கருணாகரம் உறுதி

எந்த சலுகைக்கோ அல்லது பணத்துக்கோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சோரம் போகாது. வட, கிழக்கு தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமை கிடைக்கும்வரைக்கும் கூட்டமைப்பின் பயணம் தொடரும். இதைத் தடுக்க எவராலும் முடியாது என்று கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கோ.கருணாகரம் (ஜனா) தெரிவித்தார். துறைநீலாவணை சமூக, பொருளாதார, கல்வி அபிவிருத்தி அமையத்தின் வேண்டுகோளுக்கிணங்க நிகழ்வில் கலந்துகொண்ட அவர் கடந்த வியாழக்கிழமை மாலை உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். "இந்நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக எமது தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒத்துழைத்துள்ளீர்கள். இந்த நல்லாட்சியில் தமிழர்களுக்கு தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தமிழ் மக்களும் நாமும் உள்ளோம். இந்த நம்பிக்கை வீண்போகாதவாறு இந்த செயற்படவேண்டும்" என்றார். -

## தொற்று நோய்களுக்கு இரசாயனமாக்கப்பட்ட விவசாயமே காரணம்

நஞ்சு கலக்காத இயற்கை உலகமாக இந்தப் பூமியை எதிர்கால சந்ததிக்கு கையளிக்க வேண்டும் என்று மட்டக்களப்பு விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்கல் பணிப்பாளர் ஆர்.கோகுலதாஸன் தெரிவித்தார். "இயற்கை விவசாயத்தில் இணைவோம்" எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வை ஊட்டும் வீதி நாடகம், கடந்த புதன்கிழமை மாலை உறுகாமம், கித்துள் சந்தி பொதுச்சந்தை முன்றலில் நடைபெற்றது. இங்கு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அத்துடன் சமகாலத்தில் தொற்றுநோய்கள் அதிகரித்துள்ளமைக்கு எமது சூழலும் நாம் நுகரும் விவசாய உற்பத்திகளும் நஞ்சூட்டப் பட்டிருப்-பதே காரணமாகும். விவசாயச் செய்கையில் மிதமிஞ்சிய அளவுக்கு இரசாயனங்களை பாவிப்பதால் சுற்றுச்சூழல் மாசடைகின்றது. இந்த நிலையிலிருந்து நாம் படிப்படியாக விடுபட்டு, உலகையும் எதிர்கால சந்ததியையும் பாதுகாப்பதற்கு முன்வரவேண்டும் எனவும் தெரிவித்தார்.



## சுற்றுலாப் பயணி கடலில் மூழ்கி மரணம்

பாசிக்குடா கடலில் கடந்த புதன்கிழமை மாலை நீராடிக்-கொண்டிருந்த எஸ்.ரீ.துஸான் துலன்ஜய (வயது 23) நீரில் மூழ்கி உயிரிழந்து-ள்ளதாக கல்குடா காவல்துறையினர் தெரிவித்தனர். கலேவெல, கனாதென்ன பிரதேசத்திலிருந்து பஸ் வண்டியில் 33 பேர் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பாசிக்குடாவுக்கும் வந்தனர். இந்த நிலையில், இவர் பாசிக்குடா கடலில் நீராடிக்கொண்டிருந்த போது இந்த அசம்பாவிதம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணை-களை காவல்துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

## சேறு பூசுவதை விடுத்து மக்களுக்கு ஏதேனும் செய்யுங்கள்

காத்தான்குடி கயா பேக்கரி ஹோட்டலில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போது முன்னாள் தவிசாளர் எஸ்.எச்.அஸ்பர் மேற்கண்டவாறு கூறினார். "நல்லாட்சிக்கான தேசிய முன்னணியினர் என்னை தொடர்ச்சியாக விமர்சித்து வருகின்றனர். என்மீது சேறு பூசுவதை கைவிட்டு, மக்களுக்காக சேவை செய்ய முன்வருமாறு நல்லாட்சிக்கான தேசிய முன்னணியினரை தான் கேட்டுக்கொள்வதாகத் தெரிவித்தார்.

## பிளாஸ்ரிக் அற்ற பிரதேசம் உருவாகும்



மட்டக்களப்பு நகரில் நாளொன்றுக்கு 60 முதல் 70 மெற்றிக்தொன் கழிவுகளை மாநகரசபை சேகரிப்பதாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட அதிகாரி ரஞ்சினி பாஸ்கரன் தெரிவித்தார். உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாநகர சபை மற்றும் மாவட்ட சுற்றாடல் அபிவிருத்தி அதிகாரசபை என்பன இணைந்து ஏற்பாடு செய்த சுற்றுப்புறச் சூழலை பரிசோதிக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு நகரில் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்நிலையில் மட்டக்களப்பு மாநகரை பிளாஸ்டிக் அற்ற நகரமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளில் மாநகர சபை ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. அத்துடன் மாசற்ற பிரதேசத்தை உருவாக்குவதற்கு மக்களின் பூரண ஆதரவும் தேவைப்படுவதாக அங்கு உரையாற்றும் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 28 தடவைகளுக்கு மேல் கடிதம் அனுப்பியும் பலனில்லை

மீள்குடியேற்றம் தொடர்பில் கிழக்கு மாகாணசபையும் மீள்குடியேற்ற அமைச்சரும் புறக்கணிப்பு போக்கிலேயே செயற்பட்டுவருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீள்குடியேற்றம் தொடர்பில் கிழக்கு மாகாணசபையில் கடந்த காலத்தில் பல தடவைகள் கோரிக்கை என்னால் விடுக்கப்பட்டது. அதேபோன்று பிரேரணைகளும் முன்வைக்கப்பட்டது. அதேபோன்று மீள்குடியேற்ற அமைச்சராக முன்னைய அரசாங்கத்திலும் இன்று அமைச்சராக இருப்பவரிடமும் கோரிக்கைகளை நேரடியாகவும் தொலைபேசி மூலமும் தெரிவித்துள்ளதுடன் 28 தடவைக்கு மேலாக கடிதம் மூலமும் அறிவித்துள்ளேன்.

ஆனால் இது தொடர்பில் இதுவரையில் எதுவித நடவடிக்-கையோ மீள்குடியேற்ற செயற்பாடு-களோ மேற்கொள்ளப்படாத நிலையே இருந்து வருகின்றது என விசனம் தெரிவித்துள்ளார் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம்.

## திருட்டு கைப்பேசியை வைத்திருந்தவர் கைது

தனது கையடக்கத் தொலைபேசி திருட்டு போயுள்ளதாக சில நாட்களுக்கு முன்னர் அக்கரைப்பற்று காவல்துறையிடம் அதன் உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டில் தனது கையடக்கத் தொலைபேசி இலக்கத்தையும் வழங்கியுள்ளார். இதனைத் தொடர்ந்து விசாரணை மேற்கொண்ட கால்துறையினர், பாவனையிலிருந்த கையடக்கத் தொலைபேசியின் இலக்கத்தை கண்டறிந்து பாவனையாளரை கைதுசெய்து-ள்ளனர். குறித்த நபர் 6,000 ரூபாய்க்கு இன்னுமொருவரிடமிருந்து கையடக்கத் தொலைபேசியை கொள்வனவு செய்தமை தெரியவந்தது. சந்தேக நபர் வழங்கிய தகவலை அடுத்து விற்பனை செய்தவரையும் கைதுசெய்வதற்கான நடிவடிக்கையினை அக்கரைப்பற்று காவல்துறையினர் மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு MALAIMURASU

# தேசிய செய்திகள்

## கஞ்சா பீடியுடன் கைது

பருத்தித்துறையில் கஞ்சா பீடிக் கட்டுக்களை விற்பனை செய்த ஒருவருக்கு 7 மாதங்கள் கடுழிய சிறையும் 10 ஆயிரம் ரூபா தண்டமும் விதித்து பருத்திதுறை நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

இதே பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் கஞ்சா அடங்கிய 6 பீடிக் கட்டுக்களுடன் கால்துறையினரால் கைது செய்யப்பட்டார். இவர் மனைவி, பிள்ளைகளைப் பயன்படுத்தி போதை பொருட்களை விற்பனை செய்தார் என்று நேற்று பருத்தி துறை நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்தனர். சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து பருத்தித்துறை மாவட்ட நீதிவான் மா.கணேசராஜா மேற்படி தீர்ப்பை வழங்கி உத்தரவிட்டார்.

## தமது காணியை மீட்பதற்காக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்கள் கைது:

முல்லைத்தீவு, கொக்கிளாயில் தமது காணியில் விகாரை நிர்மாணிக்கப்பட்டு வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, நேற்று வெள்ளிக்கிழமை அடையாள உண்ணாவிரதமிருந்த காணி உரிமையாளர்கள் மூவரை முல்லைத்தீவு காவல்துறையினர் கைது செய்தனர். இவர்கள் கைது செய்யப்பட்டதை அடுத்து, விகாரைக்கு முன்பாக முன்னெடுக்கப்படவிருந்து கண்டனப் போராட்டமும் கைவிடப்பட்டுள்ளது.

குறித்த இடத்தில் காவல்துறையினர் குவிக்கப்பட்டுள்ளனர். உரிய அனுமதி பெறாமல் கண்டன ஆர்ப்பாட்டம் மற்றும் உண்ணாவிரதப் போராட்டம் நடத்த முற்பட்டதாலேயே தாம் மூவரைக் கைது செய்தனர் என்று முல்லைத்தீவு காவல்துறையினர் கூறினர்.

முல்லைத்தீவு கொக்கிளாய் வைத்தியசாலை காணியின் ஒரு பகுதியையும், தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளையும் பாதை ஒன்றையும் இணைத்து பிக்கு ஒருவரால் இராணுவத்தினரின் துணையுடன் இந்த விகாரை அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




## நட்டமெனினும் விற்பனை உண்டு

பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனையில் 17 வீதமான சந்தை வாய்ப்பை இலங்கையில் தக்கவைத்துக் கொண்டுள்ள ஐ.ஓ.சி நிறுவனம், தனது விநியோகத்தில் 50 வீதத்தைக் குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகின. நட்டத்தில் எரிபொருள் விற்பனை செய்யப்பட்டாலும் விலையை அதிகரிக்கவோ விநியோகத்தை மட்டுப்படுத்தவோ திட்டம் இல்லை என இது தொடர்பாக ஐ.ஓ.சி நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சுபோத் டக்வால் தெரிவித்ததாவது, எவ்வாறாயினும், அரசாங்கம் ஒரு லீட்டர் பெட்ரோலுக்கு 66 ரூபாவும் ஒரு லீட்டர் டீசலுக்கு 17 ரூபாவும் வரி விதித்தமை மற்றும் உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரித்தமை காரணமாக நட்டமெனினும் எரிபொருள் விற்பனை செய்யப்படுவதாக அவர் தெரிவித்தார்.

## மேலும் இருவர் விளக்கமறியலில்

புங்குடுதீவு மாணவி படுகொலையை கண்டித்து மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின் போது வன்முறையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மேலும் இருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதோடு குறித்த நபர்களை எதிர்வரும் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதிபதி பொ.சிவகுமார் உத்தரவிட்டார்.

குறித்த சந்தேக நபர்கள் அரியாலை மற்றும் தாவடி பகுதிகளைச் சேர்ந்தவர்களாகவும் வீடியோ ஒலிநாடாக்களைக் கொண்டே அவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.



## காடழிப்பதை ஒருபோதும் ஊக்குவிக்க மாட்டேன்

எந்தவொரு வர்த்தகருக்கும் காடழிக்க இடமளிக்கப் போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். பொலன்னறுவையில் நடைபெற்ற சர்வதேச சுற்றாடல் தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நேற்று அனுஷ்டிக்கப்பட்ட நிகழ்வு, மெதிரிகிரிய பகுதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது. இதன்போது, இலங்கையின் வனப் பகுதிகளின் எண்ணிக்கை கடந்த காலங்களில் குறைவடைந்துள்ளதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.



## மீள நிர்மாண பணிகள் தொடரும் வாய்ப்பு சீன அதிகாரி தெரிவிப்பு

சிறிலங்காவில் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகரத் திட்டம், மீள ஆரம்பிக்கப்பட வாய்ப்புகள் உள்ளதாக, அதன் கட்டுமானப் பணியை மேற்கொண்ட சீனாவின் தொலைத்தொடர்பு கட்டுமான நிறுவனத்தின் உதவித் தலைவர் சன் சியூ தெரிவித்துள்ளார்.

மேலும் ஒவ்வொரு நாட்டுக்கும் சொந்தமான பிரச்சனைகள் இருக்கும். சிறிலங்காவின் உள்நாட்டு விவகாரத்தில் தலையீடு செய்யும் நோக்கமோ, அதற்கான ஆற்றலோ எமது நிறுவனத்திடம் இல்லை. அபிவிருத்தியில் அர்ப்பணிப்புள்ள ஒரு அரசாங்கம் கவனமாக முடிவெடுக்கும் என்று நான் நம்புகிறேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் கடந்த மார்ச் 6ம் நாள் வேலைகளை இடைநிறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## உயர் பாதுகாப்பினில் இருக்கும் கோவிலில் மடை

படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்துள்ள வசாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலயத்தில் வைகாசி விசாக மடை உற்சவத்தை நடத்த பலாலி பாதுகாப்புப் படைத்தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது.

மேலும் வைகாசி விசாக தினத்தை முன்னிட்டு பொதுமக்கள் ஞானவைரவர் ஆலயத்தில் பொங்கல் பொங்கி மடை பரவி தமது வழிபாடுகளை நிறைவேற்றினர். மேற்படி பகுதியிலிருந்து பொதுமக்கள் இடம்பெயர்ந்த பின்னர் உயர்பாதுகாப்பு வலயமாக மாற்றப்பட்டு கடந்த 25 வருடங்களாக இந்த ஆலயத்துக்கு பொதுமக்கள் செல்ல இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை. இந்த நிலையில் இவ்வாண்டு நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இராணுவத்தினர் அனுமதி வழங்கியிருந்தனர்.

புதிய அரசு உயர்பாதுகாப்பு வலயப்பகுதிகளை விடுவிக்கப்போவதாக அறிவித்திருந்த போதும் வெறும் ஆயிரம் ஏக்கருடன் அது ஓய்ந்து போயுள்ளது. இந்நிலையினில் தமது ஆலயங்களினில் வழிபட உரிமை கேட்டும் அவர்கள் போராடிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## தங்கம் கடத்தியவர் கைது

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு தங்கம் கடத்திவந்த ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டு-ள்ளார்.

சார்ஜாவில் இருந்து கடந்த வியாழக்கிழமை அதிகாலை வந்த விமானத்தில் பயணித்த சந்தேக நபர்களிடம் இருந்து 1 கிலோ 562 கிராம் தங்கம் மீட்கப்பட்டதாக விமான நிலைய சுங்கப் பிரிவு தெரிவித்து-ள்ளது. கால்களில் மறைத்து வைத்து இந்த தங்கத்தை சந்தேகநபர்கள் கடத்தி வந்துள்ளனர். மீட்கப்பட்ட தங்கத்தின் பெறுமதி 78 லட்சம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயது நபரே கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்-தக்கது.



## இராணுவ தளபதி விஜயம்

பாகிஸ்தான் நாட்டின் இராணுவ தளபதி ஜெனரல் ரஹீல் சரீப் மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் பீல்ட் மார்ஸல் சரத் பொன்சேகா ஆகியோரை சந்தித்து கலந்துரையாடவுள்ளார். எமது நாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்தும், எம் நாட்டுடனான இராணுவ நட்புறவை வளர்த்துக் கொள்ளும் நோக்கிலேயே அவரது விஜயம் அமைந்துள்ளது.

## வைத்தியசாலை சரியும் அபாயத்தில்

நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையின் ஏழு மாடிக் கட்டடம் உடைந்து விழும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து ஏழு மாடிக் கட்டடங்களையும் “ஸ்கேன்” செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி சம்பா அலுத்வீர தெரிவித்தார். அதன் பின்னரே தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு MALAIMURASU

# உலகச் செய்திகள்

## சுமத்திராவில் எரிமலைக் குழம்பு

இந்தோனேஷியாவின் சுமத்ரா தீவில் உள்ள சினாபங் மலையில் எரிமலைக் குழம்புகள் அதிக அளவில் வெளியாகி வருவதால், அப்பகுதியில் வசித்து வரும் 3000 பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். சினாபங் மலையிலிருந்து புகையுடன் கூடிய சூடான சாம்பல் வெளிவந்து கொண்டிருப்பதுடன் எரிமலைக் குழம்பும் அதிகளவில் வெளிவருவதாகக் கூறப்பட்டுள்ளது.

இதையடுத்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மலையை அண்டிய நான்கு கிராமங்களில் வசிக்கும் 3000 பேர் வரையில் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாக அந்நாட்டு பேரிடர் மீட்பு மையம் தெரிவித்துள்ளது. வெளியேற்றப்பட்ட மக்கள் அனைவரும் எரிமலை இருக்கும் பகுதியில் இருந்து 13 கி.மீ தொலைவில் உள்ள தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

## 6.0 ரிச்டர் நிலநடுக்கம்


மலேசியாவின் போர்னியோ தீவில் நேற்று காலை 6.0 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. போர்னியோ தீவு, சபா மாவட்டத்தில் உள்ள கோடோ கினாபாலு நகரில் இருந்து 54 கிலோ மீற்றர் தொலைவில் மையம் கொண்டிருந்த இந்நிலநடுக்கம் பூமிக்கு அடியில் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் நிகழ்ந்துள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## விஷ ஊசி மூலம் மரண தண்டனை

அமெரிக்காவில் நான்கு பேரைக் கொன்று விமானத்தை திருடிய வழக்கில் 67 வயது முதியவருக்கு 31 ஆண்டுகளுக்கு பிறகு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. இவர் கடந்த 1983 ஆம் ஆண்டு, சிறிய ரக விமானம் ஒன்றை வாங்குவதற்காக நபர் ஒருவரிடம் பேரம் பேசியுள்ளார். ஆனால், இவர் கேட்ட விலைக்கு விமானத்தை தர உரிமையாளர் தர மறுத்ததால், விமான உரிமையாளர் மற்றும் அவருடன் இருந்த மூன்று பேரையும் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றுவிட்டு, விமானத்தை திருடிச்சென்றுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக நடைபெற்ற வழக்கில் இவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. இந்தத் தண்டனையை எதிர்த்து போவர் மேல்முறையீடு செய்தார். இந்த வழக்கு கடந்த 31 ஆண்டுகளாக நடைபெற்று வந்தது. இந்நிலையில், அமெரிக்க உச்சநீதிமன்றம் அவரது மரண தண்டனையை உறுதி செய்ததையடுத்து, அவருக்கு சமீபத்தில் விஷ ஊசி போட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

## இந்தியா இலங்கை மீன்பிடி - தீரா பிரச்சினை



இந்திய - இலங்கை மீனவர்கள் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில் இந்திய மீனவர்கள் ஆண்டுக்கு 65 நாட்கள் இலங்கை கடல் பகுதியில் மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும் என்ற இந்திய மத்திய அரசின் கோரிக்கையை அடியோடு நிராகரித்துள்ளது இலங்கை அரசு. இலங்கை, இந்திய மீனவர்களுக்கு இடையே நீண்டகாலமாகத் தொடரும் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வுகாணவேண்டும் என்று இரு நாட்டு அரசுகளும் முயற்சிகள் மேற்கொண்டன. இதன் அடிப்படையில் இதுவரை இருதரப்புக்களுக்குமிடையே மூன்றுகட்ட பேச்சுக்கள் நடைபெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது

## பெற்றோல் நிலையம் பற்றி எரிந்து 150 பேர் இழப்பு

கானாவின் தலைநகர் அக்ராவிலுள்ள பெற்றோல் நிலையமொன்றில் இடம்பெற்ற தீ அனர்த்தத்தில் சிக்கி 150 பேருக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.


அந்நகரில் இரு நாட்களாக அடை மழை காரணமாக இடம்பெற்ற வெள்ளத்தால் பலர் வீடு வாசல்களை விட்டு இடம்பெயர்ந்துள்ள நிலையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. தீ அனர்த்தத்தில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணிகள் வெள்ளம் காரணமாக தாமதமடைவதாக தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் அந்நாட்டு ஜனாதிபதி ஜோன் மஹாமா தீ அனர்த்தத்திற்குள்ளான பெற்றோல் நிலையம் அமைந்துள்ள பிராந்தியத்திற்கு நேரில், சென்று நிலைமைகளைப் பார்வையிட்டார்.

## காதலி இறந்த இடத்திலேயே காதலனும் மரணம்

விபத்தில் காதலி உயிரிழந்த இடத்திலேயே காதலனும் செயற்கையாக விபத்தை ஏற்படுத்தி உயிரை விட்ட சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தைவான் ஊடகங்களில் 26 வயது மதிக்க தக்க இளைஞர் ஒருவர் சாலையில் காரில் செல்லும் போது லாரி மோதிய விபத்தில் பலியானதாக செய்தி வெளியானது. இறந்த இளைஞரின் செங் ஜெங் குயாங் ஆவார்.

## ஜூன் 30இல் வினாடி ஒன்று அதிகரிக்கிறது

இந்த ஆண்டு ஜூன் மாதம் 30ம் தேதி வழக்கத்தை விட ஒரு விநாடி கூடுதலாக இருக்கும் என்று தெரிகிறது. அணுவியல் நேரம் எப்போதும் மாறாத இயல்பு உடையது. ஆனால் பூமி ஒவ்வொரு நாளும் ஒரு நொடியில் இரண்டாயிரத்தில் ஒரு பங்கு தாமதமாக சுழல்கிறது. சுழற்சியில் ஏற்படும் தாமதத்தை கணக்கில் எடுத்துக் கொண்டால், இந்த ஆண்டு ஜூன் 30ல் ஒரு விநாடி நேரத்தை சேர்க்க வேண்டியது அவசியமாகிறது. ஒருங்கிணைக்கப்பட்ட சர்வதேச நேரமும், அணுவியல் நேரமும் மாறாமல் இருக்க வேண்டியது அவசியம். அதனால் பூமியின் மெதுவான சுழற்சியால் ஏற்படும் தாமதத்தை சர்வதேச நேரத்தில் சேர்க்கிறார்கள். அதாவது, ஜூன் 30ம் தேதி நள்ளிரவு 11:59:59 க்கு கூடுதலாக ஒரு விநாடி சேர்க்கப்பட்டு, சர்வதேச நேரம் 11:59:60 என்று இருக்கும். வழக்கமான ஒவ்வொரு நாளுக்கும் உள்ள 86,400 விநாடிகளுக்குப் பதிலாக ஜூன் 30ல் மட்டும் மொத்தம் 86,401 விநாடிகள் கணக்கில் கொள்ளப்படும். இதற்கு முன் 1972ல் தான் முதன் முதலாக லீப் விநாடி சேர்க்கப்பட்டமை என்பது குறிப்பிடத்தக்கது.



## சீனாவில் ஏற்பட்ட பாரிய கப்பல் விபத்து

சீனாவில் சியாங் மாகாணத்தின் தலைநகரான நான்சிங்கில் இருந்து, தென்மேற்கு நகரமான சோங்கிங் நோக்கி 4 தட்டுகளைக் கொண்ட 'ஈஸ்டர்ன் ஸ்டார்' என்ற பயணிகள் கப்பல் 28 ஆம் திகதி 406 பயணிகள், பயண நிறுவன ஊழியர்கள் 5 பேர், 47 ஊழியர்கள் என மொத்தம் 458 பேருடன் பயணம் செய்தது. 6,300 கி.மீ. நீளம் கொண்ட, ஆசியாவின் மிக நீளமான நதியான யாங்ட்ஸே ஆற்றில் சென்று கொண்டிருந்த போது வீசிய பயங்கர சூறாவளியில் சிக்கி நிலை தடுமாறிய கப்பல், ஆற்றில் கவிழ்ந்தது.

இது குறித்த தகவல் அறிந்ததும், மீட்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. விபத்துக்குள்ளான கப்பலின் சிதைவுகள், 15 மீட்டர் ஆழத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. கப்பலின் தலைவர், பொறியியலாளர் உள்பட 14 பேர் இதுவரையில் மீட்கப்பட்டு உள்ளனர்.

இந்த விபத்தில் 7 பேர் உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டு உள்ளது. 430 பேரை காணவில்லை. அவர்களது கதி என்ன ஆனது என தெரியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## இலங்கைக்கு கஞ்சா கடத்தலில் ஈடுபடவிருந்தோர் கைது



இராமேஸ்வரம் வழியாக இலங்கைக்கு கடத்துவதற்காக வானில் கொண்டுவரப்பட்ட 130 கிலோ கஞ்சாவை ராமநாதபுரம் மாவட்ட காவல்துறையினர் பறிமுதல் செய்ததுடன் இருவரை கைது செய்து விசாரித்து வருகின்றனர். இராமேஸ்வரம் வழியாக இலங்கைக்கு கஞ்சா கடத்துவதற்காக ராமநாதபுரம் குற்றப் புலனாய்வுப் பிரிவு காவல்துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்ததையடுத்து பரமக்குடி அருகே கமுதக்குடி ரயில்வே கடவைப் பகுதியில் வியாழக்கிழமை வாகன சோதனையில் ஈடுபட்டனர். மிளகாய் மூடைகளுடன் கஞ்சா மூடைகள் இருப்பதும் தெரியவந்தது. 4 சாக்கு மூடைகளில் தலா இரண்டு கிலோ வீதம் 65 பொதிகள் கொண்ட 130 கிலோ கஞ்சாவையும், வானையும் பறிமுதல் செய்து இரண்டு நபர்களையும் காவல்துறையினர் கைதுசெய்தனர்.

## தீமோர் தீவில் தடுப்பில் அவதியுறும் அகதிகள்

நியூஸிலாந்து நாட்டில் தஞ்சம் கோரி ஆபத்தான கடற்பயணம் மேற்கொண்ட ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என 54 இலங்கையர்கள், தீமோர் தீவில் கைவிடப்பட்ட நிலையில் இருப்பதாகத் தெரியவருகிறது.

மேலும், இவர்களுடன் பங்களாதேசத்தவர்கள் 10 பேர், மியன்மாரைச் சேர்ந்த ஒருவருமாக மொத்தம் 65 பேர் இந்த அவல நிலைக்கு ஆளாகி, தீமோர் தீவின் கப்பாங் என்ற இடத்தில் அந்த நாட்டின் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

தீமோர் தீவில் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ள இவர்கள், கடந்த மே மாதம் 5 ஆம் திகதி இந்தோனேசியாவில் இருந்து நியூசிலாந்தை நோக்கிப் பயணம் செய்தபோது அவுஸ்திரேலிய குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் மற்றும் அந்த நாட்டின் கடற்படை இராணுவப் படையினரால் பிடித்து தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினையடி நீ எனக்கு..

தொடர் நாவல்



18

– கவிஞர் வி.மைக்கல் கொலின்–

– இமைகள்
இருப்பது
விழிக்காக மட்டும்
ஒலிகள் என்பது
செவிக்காக மட்டும்
மனதில் நுழைவது
உயிர்க்காற்று மட்டும்
என் உடல் ஆவி ஜீவன்
உனக்காக மட்டும்–

– சரவணன்–

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. ரதனுக்கும், நிவேதாவுக்கும் பல்கலைக்கழக வாழ்க்கை மகிழ்ச்சியாக சென்று கொண்டிருந்தது.

இரண்டு மாதங்கள் எப்படி சென்றதோ....? தெரியவில்லை.... தினமும் விரிவுரைகளுக்குச் செல்வதும் விரிவுரைகள் இல்லாத நேரங்களில் லைபிரரியில் இருவரும் சேர்ந்தே புத்தகங்கள் படிப்பதும் இலக்கிய விடயங்கள் பற்றி ஆராய்வதுமாக அவர்கள் கல்வி வாழ்க்கையும், காதல் வாழ்க்கையும் ஒரு வித இலக்கிய மணத்துடன் கழிந்தது

அன்றைய தினம் கிழக்குப்பல்-கலைகழகத்தின் சகல பீடங்களுக்குமான மாணவர்கள் அவையை (students union) தெரிவு செய்வதற்கான அறிவித்தல் போடப்பட்டிருந்தது. ஒவ்வொரு பீடங்களுக்கும் ஒவ்வொரு மாணவர் அவை தெரிவுசெய்யப்-படும். அதில் தலைவர், செயலாளர், பொருளாளர், பத்திராதிபர் என ஒரு நிர்வாக குழு தெரிவு செய்யப்படும். பொதுவாக அந்த மாணவர் அவையில் நான்கு வருடங்களையும் சேர்ந்தவர்களுக்கும் அங்கத்துவம் கொடுக்கும் வகையில் ஒவ்வொரு வருடத்தையும் சேர்ந்தவர்களுக்கு ஒரு பதவி வழங்கப்படும்.

இறுதி வருட மாணவர்களில் இருந்து தலைவரும், மூன்றாம் வருட மாணவர்களி-லிருந்து செயலாளரும், இரண்டாம் வருட மாணவர்களில் இருந்து பொருளாளரும் என தெரிவு செய்யப்படுவதில் நிர்வாக குழு அங்கத்தவர் இருவர் என்ற பதவி முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு வழங்கப்படும். இந்த பதவிகள் வருடாவருடம் மாற்றமுறும் ஆனால் அதில் மாற்றம் செய்து முதலாம் ஆண்டு மாணவர்களின் எண்ணிகையை கவனத்தில் எடுத்து அவர்களுக்கும் ஒரு பதவி கொடுக்கப்படவேண்டும் என்ற நிலை காணப்பட்டது. அது தொடர்பாக கதைப்பதற்-கென கலைப்பீட மாணவர்களுக்கு ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடாகியிருந்தது.

அனைத்து கலைப்பீட மாணவர்களும், மாணவிகளும் பல்கலைகழக மெயின் ஹோலில் கூடியிருந்தனர். தற்போது கலைபீட மாணவர்கள் அவைக்கு தலைவனாக இருக்கும் இறுதி வருட மாணவர்களின் தலைமையில் அந்த கூட்டம் ஏற்பாடாகியிருந்தது. அன்று புதன் கிழமையாதலால் மாலை நேரவிரிவுரை-கள் நடைபெறாது. பொதுவாக புதன் கிழமைகளில் பகல் 12:00 மணியளவில் விரிவுரைகள் முடிந்து.. மாணவர்களின் புறகிருத்திய செயற்பாடுகளை கல்வி தவிர்ந்த ஏனைய துறைகளிலும் வளர்க்கும் முயற்சியில் ஈடுபடுத்துவதற்காக மாலை நேரம் விடுமுறையாக விடப்பட்டிருந்தது.

புதன்கிழமை மாலை நேரங்களில் கலைப்பீட மாணவர்களின் நுண்கலைத் துறையினர் ஏற்பாடு செய்திருக்கும் வீடியோ திரைப்படக் காட்சியும், விமர்சனமும் என்ற நிகழ்வில் தரமான கலைப்படங்கள் திரையிடப்பட்டு அது தொடர்பான விமர்சனம் இடம் பெறும். அதில் ஆர்வமுள்ள சகல பீட மாணவர்களும் கலந்து கொள்ள முடியும். அதே போன்று ஓவியக் கண் காட்சிகள், நாடக நிகழ்வுகள் என்று பல நிகழ்வுகள் இடம்பெறும்.

புதன் கிழமைகளில் மாலை நேரங்களில் பீடங்களுக் கிடையிலான உதைபந்தாட்டம், கிரிக்கட் என விளையாட்டு நிகழ்வுகளும் இடம் பெறும். இதில் மாணவர்களுக்கும், விரிவுரையாளர்களுக்குமான உதைபந்தாட்டமும் சில வேளை இடம் பெறும்.

அன்றும் புதன்கிழமையாதலால் முன் கூட்டியே பதிவு செய்திருந்ததால் கலைப் பீட மாணவர்கள் மெயின் ஹோலில் தமது பொதுக் கூட்டத்தை நடாத்தக் கூடியதாக இருந்தது. அதே போன்று ஏனைய பீட மாணவர்களும் தமக்கு வழமையாக விரிவுரை நடக்கும் விரிவுரை நடக்கும் மண்டபங்களில் தமது பொதுக் கூட்டத்தை நடாத்த ஆயத்தப்படுத்தினர்.

பல்கலைக் கழகங்களில் பல அமைப்புக்கள் உருவாக்கப்பட்டு கல்வி தவிர்ந்த ஏனைய செயற்பாடு-களுக்கும் முன்னுரிமை கொடுக்கப்படும். மத அடிப்படை யில் கூட இந்து மாமன்றம், கத்தோலிக்க ஒன்றியம், கிறித்தவ ஒன்றியம், என்ற ரீதியிலும், குறிப்பிட்ட பாட ரீதியில் பொருளியல் கழகம், வணிக முகாமைத்துவ கழகம், விஞ்ஞான மன்றம். என்ற ரீதியில் தனிப்பட்ட பாடம்

**கிழக்குப் பல்கலைக் கழகத்தினை மைய நீரோட்டமாகக் கொண்டு தமிழ் மக்களின் கடந்தகால அரசியல் பேசும் முதல் காதல் காவியம்.**

தொடர்பான அமைப்புக்களும், தமிழ்ச்சங்கம், விளையாட்டுக் கழகம் என பொதுவான அமைப்புக்களும் இயங்கி வந்தன. சென்ற வாரமே தமிழ்சங்கத்திற்கான பொதுக் கூட்டம் நடைபெற்று புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டிருந்தது. அதில் எல்லோராலும் ஏகோபித்த ஆதரவின் அடிப்படையில் ஜெயரதன் பத்திராதிபராக தெரிவு செய்யப்பட்டிருந்தான்.

நீண்ட காலத்திற்கு பின்னர் அன்றுதான் தமிழ்ச் சங்கம் மீண்டும் இயங்குவதற்கு ஏற்ற வகையில் புனரமைப்பு செய்யப்பட்டது. அதன் மீள் உருவாக்கத்தில் ரதன் பெரும் பங்காற்றினான். தமிழ் மக்களின் பூமியில் இருக்கும் ஒரு தமிழ் பல்கலைக்கழகத்தில் தமிழ்ச் சங்கத்தின் செயற்பாடுகள் எதுவுமில்லாமல் இருப்பது அவனுக்கு வேதனையாக இருந்தது.

தமிழ்ச் சங்கத்தினை புதிதாக ஆரம்பிக்க முடியுமா என ஆராய்ந்து பார்த்ததில்தான் ஏற்கனவே அப்படியொரு சங்கம் பல வருடங்களுக்கு முன்னர் அங்கு செயற்பட்டு வந்ததும் அதன் நிர்வாகக் குழுவில் இருந்த மாணவர்கள் பட்டதாரிகளாக வெளியேறி சென்ற பின் அந்த சங்கத்தின் செயற்பாடுகள் இல்லாமல் போனதையும் அறிந்து கொண்டான். தமிழ் சங்கத்தின் செயற்பாடுகளை மீள் செயற்படுத்த வேண்டி விசாரித்து பார்த்து தமிழ்ச்சங்க பெருந்தலைவரான கலாநிதி குருமூர்த்தியை சந்தித்து கதைத்த ரதன் தமிழ்ச்சங்கம் தொடர்பான மேலதிக விடயங்களை அறிந்து கொண்டான். அவரும் அவனுக்கு உற்சாகமூட்டினார். யாராவது சிலர் அல்லது ஒருவர் முன்னின்று செயற்பட்டால் தான் அதனை செய்ய முடியும் என அவனுக்கு எடுத்து சொல்லி முன்னர் தமிழ்ச் சங்க தலைவராக, செயலாளராக, இருந்த மாணவர்களின் விபரங்களையும் கூறி அவர்களை சந்தித்து தமிழ்ச்சங்கம் தொடர்பான ஆவணங்களையும் அதற்குரிய கணக்கு விபரங்களையும் பெற்றுக் கொள்ளச்செய்தார்.

ஆனால் அவர் எதிர்பார்த்தது போல் போதிய விபரங்கள் கிடைக்கவில்லை. தொடர்ந்து ரதன் பெரும் பொருளாளராக செயற்பட்ட விவசாயப்பீட விரிவுரையாளர் ஒருவரையும் சந்தித்து உரையாடி தமிழ்ச்சங்கத்தை மீண்டும் செயற்பட செய்யும் முயற்சியில் துரிதமாக இயங்கினான். அவனுடன் துணையாக நிற்கும் இலக்கிய ஆர்வமுள்ள சில நண்பர்களையும் சேர்த்துக் கொண்டு ஒரு திகதியை தீர்மானித்து அறிவித்தல் பலகையில் தமிழ்ச் சங்க பொதுக் கூட்டம் தொடர்பான விபரங்களை வெளியிட்டான்.

அன்றும் ஒரு புதன்கிழமையாக இருந்ததால் மாலை கூட்டம் ஆரம்பமாகியது. தமிழ்ச்சங்கம் சகல பீட மாணவர்களுக்கும் ஒரு பொது அமைப்பாக இருந்ததால் ஆர்வமுள்ள அனைத்து பீட மாணவர்களும் அழைக்கப்பட்டி-ருந்தனர். பெருந்தலைவரின் உரையைத்தொடர்ந்தும், பெரும் பொருளாளரின் கொள்கை விளக்கத்தினை தொடர்ந்தும் புதிய நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டது.

அதில் பலர் ரதனையே தலைவராக நியமிக்க முயன்றனர். ஆனால் அதனை அவன் ஏற்றுக் கொள்ளவில்லை. அவனுக்கு தலைமைப் பதவியை விட அதில் பத்திராதிபர் என்ற பொறுப்பை ஏற்று தனது பல்கலைக் கழக காலத்தில் தமிழ்ச் சங்கம் சார்பாக ஒரு மலரினையாவது வெளியிட்டு விட வேண்டும் என்ற "தாகம்" இருந்தது. அது போலவே ஒவ்வொரு பீடத்திலும் இருந்து ஒவ்வொருவர் ஒவ்வொரு பதவிக்கு தெரிவு செய்யப்பட ரதன் பத்திராதிபர் பதவிக்காய் முன் மொழியப்பட்ட-போது அந்தப் பதவியை ஏற்றுக்கொண்டான்.

அவனது நெருங்கிய நண்பன் சுரேஷ் சங்க தலைவராக நியமிக்கப்பட்டது அவனுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைக் கொடுத்தது. தலைவரும் பத்திராதிபரும், நிர்வாகக் குழுவில் ஒருவருமாக மூவர் கலைப்பீடத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாகக் குழு உறுப்பினராக நிவேதா தெரிவு செய்யப்பட்டாள். நிவேதாவை பவித்ரா முன்மொழிய சுகந்தி வழி மொழிந்திருந்தாள்.

தமிழ்ச்சங்க புதிய நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டதுமே ரதன் செயலில் இறங்கினான். தமிழ்ச்சங்கத்தின் சார்பாக வருடா வருடம் ஒரு மலரை வெளியிடும் முயற்சியின் ஆரம்பமாக அது தொடர்பான விபரங்களை அறிய தமிழ்ச்சங்க பெரும் பொருளாளரை நாடினான். அவரது கூற்றில் இருந்து கிழக்குப் பல்கலைக்கழகம் பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப் படுவதற்கு முன்னர் அது பல்கலைக்கழக கல்லூரியாக இருந்த வேளையில் தமிழ்ச்சங்க வெளியீடாக ஒரு மலர் வெளியாகியிருந்ததை அறிந்து கொண்டான். ஆனால் அவனைப் பொறுத்தவரை கிழக்குப் பல்கலைக்-கழகத்தின் தமிழ்ச் சங்க முதல் வெளியீடாக தாமே மலர் வெளியிட வேண்டும் என்ற ஆசை இருந்தது.

ஒரு தசாப்தகாலத்திற்கு முன்னர் வெளியிடப்பட்ட அம் மலர் தொடர்பான விபரங்களோ, அதனுடைய பிரதிகளோ கைவசம் இல்லாத நிலையில் இருந்தாலும் அது கல்லூரியில் வந்த இதழாகவே இருக்கும். பல்கலைக் கழகம் என்ற நிலையில் புதிய பெயரில் மலர் வெளியிடுவதற்கான முயற்சியில் இறங்கினான்.

பல விரிவுரையாளர்களையும், நிர்வாகக் குழு உறுப்பினர்களையும், பெருந்தலைவரையும் சந்தித்து உரையாடிய அவன் பல பெயர்களை தெரிவு செய்து ஆராய்ந்தான் . கடைசியில் "தழல்" என்ற பெயர் தெரிவு செய்யப்பட்டது. இளைஞர்கள் தழல் போன்றவர்கள் என்ற நிலையில் தமிழ் சங்கத்தின் வெளியீட்டிற்கு புதிய பெயர் வைக்கப்பட்டது.



மேவும்.. .. ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு கல்... காத்திருப்பு

உனக்காக நானும்
ஒரு கல்லை
எறிந்தேன்

என் இனிய பெண்ணே
வித்தியா!

உனக்காக - ஒரு
கல் - அது
கண்ணாடிகளைச்
சிதைத்தது பற்றியோ,
சிலரைப்
புதம் பார்த்ததைப்
பற்றியோ,
வாகனங்களைச்
சேதப்படுத்தியதைப்
பற்றியோ?

எனக்குத் தெரியாது.

உனக்காகவே - அந்தக்
கல்லை எறிந்தேன்
நான் . .

அந்தக்கல் - எமதினத்தின்
கூட்டு
மனச்சாட்சியின்
வெளிப்பாடு - என
எவரும் ஏற்றுக்
கொள்ளவில்லை

அந்தக் கல் - எமது
கையாலாகாத்தனத்தின்
வெளிப்பாடு என்பதையோ

கோணேஸ்வரிகளினதும்
கிருசாந்திகளினதும்
மரணத்தின் போதான
எமது மௌனத்தின்
பொருமல் என்றோ

கயவர்களைச்
சகோதரராய்க் - கொண்ட
இனமொன்றின் - கூய
காறித்துப்பல் என்றோ

கணக்கெடுப்போர்
எவருமில்லை - என்
சோதரி

அது கல்
வெறும் கல்
சட்டத்தின் இறுக்கமான
வரையறைகளில் - ஓட்டை
-யிட்ட கல்

உனக்காகவே
எறியப்பட்டது. எவ்வாறு
உன் இறுதிக்
கல்லறையில் ஒரு கைபிடி
மண்ணை எறிந்தேனோ
அதே போலவே

நானும், என் சகோதரர்களும்
அவர்களிற் சில
கயவர்களும் - எறிந்த
கல்

வெறும் - கண்ணாடிகளைத்
துளைத்த கல்லாக
அதைக் கண்டவர் - எமைக்
கைது செய்தனர்.

எனினும்
பொருமிக் கிடக்கும் - எம்
மனச்சாட்சியின் முன்னே
நீயும் - நாம் இழந்த
ஆயிரக்கணக்கான
பெண்களும் . . . .

கற்கள் போதாது சோதரி - நீ
போய்வா!
நான் காத்துக் கிடக்கிறேன்.

- மாயன் -

## உயிர் உருக்கும் நினைவுகள்

வருத்தம் வரக்கூடாது
அம்மா இல்லாத ஊரில்
நானிருக்கும் போது

சின்னதாய் உடல்சுட்டாலும்
பதறியடித்துப் பண்ணும் காரியங்கள்
ஆக்கினைதான் என்றாலும்
வருத்தம் வரக்கூடாது
அம்மா இல்லாத ஊரில்
நானிருக்கும் போது

உப்பும், மிளகாயும்
ஒன்றாய்ச் சேர்த்து
மூன்றுமுறை தலைசுற்றி
தூ,தூ எனத்துப்பி
அடுப்பினுள் போட்டு
அதுவெடிக்கையில்
கண்ணூறு கழிந்ததாய்
களிகொள்வாள்



வயிற்றுவலி வந்தால்
சாமிமுன்னின்று
மந்திரம் சொல்லி
வலிகொண்ட இடத்தில்
திருநீறு தடவி
ஆ.. காட்டச்சொல்லி
அதற்குள்ளும் தூவி
அடுத்தகணமே மாறுமென
ஆனந்தங்கொள்வாள்

இப்படிச்
சொல்லிக் கொண்டேபோகலாம்
சுகப்படுத்தும் வழிமுறைகளை

உயர் கல்விக்காய் நான்
ஊர்விட்டகலையில்
கொடுத்தனுப்பிய மருந்துப்பட்டியலில்
தவறிப்போயிருந்தது தாயன்பொன்றுதான்

ஓடித்திரியும் நாட்களைவிட உடல்
ஒத்துழைக்கமறுக்கும் வேளைகளில்
உயிர் உருக்கும் அவள் நினைவுகள்.

. . ஜீவன் . .



## வந்துவிட்டதா?



விடி வெள்ளியை
நோக்கியபடி
இரு விழிகளும்
விறைப்படைந்து
மரத்துப்போச்சு

மூட முடியாவிழிகள்
விடிவை நோக்கி
காத்திருக்கின்றன
அந்த ஒரு வார்த்தையை
செவிகள் கேட்பதற்காய்
அதன் வருகைக்காக
விழிகள் புருவங்கள்
அசைந்தபடி காத்திருக்கின்றன

சமாதானம் என்ற வார்த்தை
சாவைத் தடுக்கும்
மீழ்வுக்கானதாகும் என
விழிகள் எல்லாம்
வீதியை நோக்கியபடி
விழித்திருக்கின்றன
வந்துவிட்டதா?

... தம்பி. தில்லை முகிலன் ...

# கவிமுரசு

## வரைந்தெடுக்கும் விசாரணைகள்
## நீதியே வேண்டும்

குடா நாட்டில்
கூடாவொழுக்கம்
கொடிகட்டி பறப்பது
கூடவே கூடாது

அடாவடிகள்
அத்துமீறும் பாலியல்வன்புணர்வுகள்
நடமாடி வருவது
நாட்டுக்கு கூடாது

தமிழர் பண்பாடு
தலை கீழாக மாறி
அலைமோதுவது அழகாகாது

போதை வஸ்து பழக்கங்கள்
பொல்லாப்பு குரோதங்கள்
நல்லாட்சி பிரதேசத்தில்
நடக்கக் கூடாதது

இழுத்தடிக்கப்படும் நீதி விசாரணைகள்
நிறுத்தப்பட்டு, விரைந்து
எடுக்கும் நீதி விசாரணைகள்
தொடுக்கப்பட்டு குற்றவாளிகளுக்கு உடனே
கொடுக்கப்பட வேண்டும்
கொடூரமான தண்டனை

கவிக்குயிலன்
சேனையூரான்

## வெளியேறல்



வெளியில் நச்சு வாயு
பூச்சியினம் ஈசல்கள் போல

பயிர் பச்சைகளெல்லாம்
கறுப்பு கறுப்பாய் தெரிந்தது..
படர்ந்திருந்த சிலந்தி வலைகளில்
மானிட முண்டங்கள் கறுண்டு

நிலமெல்லாம் ஊர்வன
மிதிக்கவும் முடியாமல்
விஷயந்துக்களின் ஆட்சி
துர் நாற்றமும் மூக்கில்

வெளியே வர முடியாமல்
முடங்கி கிடக்க முடியாமலும்

திருமலை சுஜீதா

## உனக்குப் புரியாது

என்
மனக்காட்சிகள்
எனக்கே சரியாக
தெரியாத நிலையில்
அதை படம் பிடித்து
கவிதையாய் படைக்கையில்
உனக்கு மட்டும் தெரியுமா?
எனது கவிதை புரியுமா?




## உறைந்திடட்டும் ...

தாமரைத்தீவான்
(ஈச்சந்தீவு)

வள்ளுவன் தந்தானே - குறளெனும்
வாழ்வினைத் தந்தானே!
தெள்ளு தமிழாலே - அனைத்தையும்
தெரியச் செய்தானே!

என்ன இனி வேண்டும்? - இதை விட
ஏடுகள் எங்குளவோ?
சொன்ன பொருளை விட - புதிதாய்ச்
சொல்லிட ஏதுமுண்டோ?

சின்னக் குறளினுக்கே - பாவாணர்
செந்தமிழ்த்தேன் பிழிந்தே,
பென்னம் பெரிய பொருள் -தன்னையே
பேறென்று தந்துயர்ந்தார்!

போதும் அறம் பொருளும் - இன்பமும்
போற்றிப் படித்துயர்வோம்!
ஏதும் பிற வேண்டாம் - குறள் அடி
எம் நெஞ்சுறைந்திடட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமக்கு சார்பான அரசிற்கு நெருக்கடி கொடுக்க மேற்குலகோ, இந்தியாவோ தயாரில்லை

## த.தே.ம.மு வின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் அவர்களுடனான ஓர் சந்திப்பு

கே: **ஆட்சிமாற்றத்திற்கு பின்பான தமிழ் அரசியல் சூழல் பற்றி என்ன கருதுகின்றீர்கள்?**

ப: எம்மைப் பொறுத்தமட்டில் கடந்த ஜனாதிபதித் தேர்தல் என்பது மகிந்தவிற்கும் மைத்திரிக்கும் இடையிலான தேர்தல் என்பதைவிட இந்திய மேற்குலகுக் கூட்டிற்கும் சீனாவிற்கும் இடையிலான ஓர் பலப்பரீட்சையாகும்.

சீனாவின் பிடிக்குள் இருந்த மகிந்த அரசை வீழ்த்தி தமக்குச் சார்பான ஓர் அரசை இலங்கையில் நிறுவ வேண்டிய கட்டாய தேவை இந்தியாவிற்கும் மேற்குலகிற்கும் தத்தம் நலன் சார்ந்து இருந்தது.

சீனாவின் பிடிக்குள் இருந்து மகிந்த அரசை வெளியகற்றவே மகிந்தவிற்கு பல்வேறு சர்வதேச அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. அதிற் சில தான் ஜெனீவாத் தீர்மானங்கள் மற்றும் போர்க்குற்ற விசாரணை பற்றிய அறிவிப்புக்கள் ஆகும். அத்தகைய அழுத்தங்கள் மகிந்த அரசை வழிமாற்றாததன் காரணமாகத்தான் ஆட்சிமாற்றம் ஏற்படுத்தப்பட்டது.

இந் நிலையில் பெரும்பாடுபட்டு உருவாக்கிய ஆட்சிமாற்றத்தினை என்ன விலை கொடுத்தாவது காப்பாற்ற வேண்டிய தேவை மேற்கிற்கும் இந்தியாவிற்கும் உள்ளது. இதனால் போர்க்குற்ற விசாரணை பற்றியோ, இனப்பிரச்சினைக்கான தீர்வைப்பற்றியோ கதைத்துபுதிய அரசிற்கு நெருக்கடி கொடுக்க மேற்குலகோ இந்தியாவோ தயாரில்லை.

இதன் முதல் அங்கம் தான் ஜெனீவாவில் சமர்ப்பிக்கப்படவிருந்த விசாரணை அறிக்கை பிற்போடப்பட்டமையும், உள்ளக விசாரணை என்கின்ற கதைகளும். இது தமிழ் மக்களிற்கு ஆட்சிமாற்றத்தின் முன்பிருந்த சாதகமான நிலைமைகளை நீண்டதூரம் பின்னகர்த்தி இருக்கின்றது என்பது மறுக்கமுடியாத உண்மை.

தற்போது இந்த அரசும் சீனாவின் பிடியில் இருந்து வெளிவர முடியாத பட்சத்தில் தமிழ் மக்களிற்கு இருக்கின்ற சர்வதேச வாய்ப்பு மீண்டும் அதிகரிக்கும்.

> **தமிழ் மக்கள் இந்த போக்கில் இருந்து விழித் தெழுந்து ஓர் மாற்றத்தினை உருவாக்க தயாராக வேண்டும். இல்லையேல் நாம் மீட்க முடியாத அரசியல் புதைகுழிக்குள் சென்று விடுவோம்.**

கே: **தமிழ்மக்கள் தங்களுக்கு சாதகமாக இருந்த புறச்சூழலை விலையாகக் கொடுத்தே (சர்வதேச விசாரணை. புவிசார் அரசியல்போட்டி) ஆட்சிமாற்றத்தினைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். இதனால் தமிழ்மக்களுக்கு ஏதாவது கிடைக்குமா?**

ப: இன்றுவரை எதுவும் நடைபெறவில்லை என்பதுதான் உண்மை. ஆகக்குறைந்தது ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதில் ஒரு சதுர மீற்றர் நிலத்தைக் கூட இதுவரை விடுவிக்கப்படவில்லை. ஒரு அரசியற்கைதி கூட இதுவரை விடுவிக்கப்படவில்லை. அரசியற் தீர்வு பற்றி ஒரு வார்த்தையும் தற்போது பேசப்படுவதில்லை. ஆகக் குறைந்தது கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அமைக்கக்கூட புதிய அரசு இடமளிக்கவில்லை என்பதுதான் கசப்பான உண்மை.

ஆகவே காலாகாலமாக இருந்த அரசுகள் என்ன செய்தார்களோ அதையே தான் இந்த அரசும் எமக்கு செய்யப்போகின்றது. இன்று இந்த அரசைக் காப்பாற்றுபவர்கள் பலர் மிகப்பெரிய இனவாதிகள். அவர்கள் எமக்கு எதையும் செய்ய விடுவார்களா? என்கின்ற வினா எம்முன் எழுகின்றது.

தற்போதைய அரசின் போட்டியாளரான மகிந்த மிகப்பெரும் இனவாதப் பரப்புரையில் ஈடுபட்டுவரும் நிலையில் புதிய அரசும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள தன்னை ஒரு மிகப்பெரிய இனவாதியாக காட்டிக்கொள்ள முனையுமே தவிர தமிழ் மக்களிற்கு எதையும் கொடுக்க முன்வராது.

எமக்கு கிடைத்திருந்த ஓர் மிக அரிய சந்தர்ப்பம் கடந்த ஜனாதிபதித் தேர்தலாகும். அதை நாம் சரிவரப் பயன்படுத்தாது கைநழுவ விட்டுவிட்டோம் என்பதை மறுக்க முடியாது.

கே: **அகச்சூழல் தமிழ்மக்களுக்கு சாதகமாக இல்லை. புறச்சூழலும் சாதகமாக இல்லை. இந்நிலையில் தமிழ்த்தேசிய அரசியலை எவ்வாறு முன்னெடுப்பது?**

ப: நாம் எமது உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கு சர்வதேச சக்திகளின் நலன் சார் போட்டிகளை மட்டுமே நம்பி இருக்க முடியாது. காரணம் அது எப்போதும் மாறிக்கொண்டே இருக்கும்.

எமக்கு இருக்கின்ற நிலையான பலம் என்ன என்பதை சரியாக புரிந்து கொண்டு எமது மக்களை ஒருங்கிணைத்து போராட்டங்களை முன்னெடுப்பதுதான் எமக்கு இருக்கக்கூடிய சிறந்த வழி. அதை நாம் செய்ய வேண்டும்.

எமது பலம் என்பது புலம்பெயர்ந்து வாழும் மக்களும் தமிழக உறவுகளுமாகும். இவர்களின் செயற்பாடுகள் அவர்கள் வாழும் நாடுகளின் வெளிவிவகாரக் கொள்கையை மாற்றுமளவிற்கு உச்சம் பெற வேண்டும். அதை நோக்கி எமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். இலங்கை அரசு தானாக முன்வந்து எமக்கு எதையும் தரப்போவதில்லை.

கே: **சிலர் ஆட்சிமாற்றத்தின் மூலம் ஒரு ஜனநாயகவெளி கிடைக்கும். அதனை நாம் பயன்படுத்தலாம் எனக் கூறியிருக்கின்றார்கள். (மனோகணேசன் உட்பட) உண்மையில் ஜனநாயகவெளி என்பது கிடைத்திருக்கின்றதா? அதனைப் பயன்படுத்தக் கூடிய சூழல் உள்ளதா?**

ப: உண்மையில் ஓர் ஜனநாயக வெளி கிடைத்திருக்கின்றதா என்றால் தமிழ் மக்களைப் பொறுத்தளவில் இல்லை என்று தான் கூற வேண்டும். ஆனால் மக்கள் ஒப்பீட்டளவில் சற்று பய மனோநிலையில் இருந்து விடுபட்டிருக்கின்றார்கள் என்றுதான் நான் நினைக்கின்றேன்.

ஆனால் ஜனநாயக ரீதியாக எமது உரிமைகளிற்காக போராடக்கூடிய அளவிற்கு ஜனநாயக இடைவெளி ஏற்படவில்லை. உதாரணமாக நாம் கூழாவடிப் பிரதேசத்தில் காணி சுவீகரிப்பிற்கு எதிராக போராட்டம் நடாத்த முற்பட்ட போது புலனாய்வாளர்களால் அப்பகுதி மக்கள் அச்சுறுத்தப்-பட்டிருந்தார்கள். இவ்வாறான சம்பவங்கள் நிஜமான ஜனநாயக இடைவெளி எமக்கு ஏற்படவில்லை என்பதையே காட்டுகின்றது.

கே: **தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ஆட்சியில் பங்கேற்றல் என்ற அரசியலை தொடக்கி வைத்திருக்கின்றது. இதனை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

ப: இது நாம் ஏற்கனவே அதாவது 2010 ஆம் ஆண்டிலேயே கூறியவை தான். கூட்டமைப்பினர் இவ்வாறான பாதையில் செல்வதென முடிவெடுத்த போது தான் அதில் இருந்து வெளியேறி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை உருவாக்கினோம். நாம் அப்போது கூட்டமைப்பின் முடிவை கடுமையாக ஆட்சேபித்து வெளியேறியதால் உடனடியாக அவர்கள் தமது நிலைப்பாட்டினை வெளிப்படுத்த முடியவில்லை.

எனினும் காலப்போக்கில் மெதுவாக தமது முடிவை நோக்கி மக்களை இழுத்துச் செல்ல முற்படுகின்றார்கள். இதன் ஓர் அங்கம் தான் சுதந்திர தின நிகழ்வில் பங்கு கொண்டமையும் சிங்கக் கொடி பிடித்தமையும், போர்க்குற்றங்களிற்கும் இனவழிப்பிற்கும் உள்ளக விசாரணையை ஏற்போம் எனக் கூறுவதும் ஆகும்.

தமிழ் மக்கள் இந்த போக்கில் இருந்து விழித் தெழுந்து ஓர் மாற்றத்தினை உருவாக்க தயாராக வேண்டும். இல்லையேல் நாம் மீட்க முடியாத அரசியல் புதைகுழிக்குள் சென்று விடுவோம். என்னைப் பொறுத்தவரையில் அண்மைக் காலங்களில் நாம் சந்தித்து வரும் மக்கள் ஓர் பாரிய அரசியல் மாற்றம் ஒன்றை எதிர்பார்த்திருக்கின்றார்கள் என்பதை தெளிவாக உணரமுடிகின்றது.

கே: **சர்வதேச விசாரணைக்கு எதிர்காலத்தில் என்ன நடக்கும்?**

ப: சர்வதேச விசாரணைக்கு என்ன நடக்கும் என்பதை எதிர்வு கூறுவதைவிட என்ன நடக்கக்கூடாது என்பதே முக்கியம். நான் ஏற்கனவே கூறியது போன்று சர்வதேச விசாரணை கைவிடப்படும் அபாயம் உள்ளது. நாம் சர்வதேச விசாரணை நீர்த்து போகாதவாறு பாதுகாக்க எமது செயற்பாட்டினை வலுப்படுத்தி முன்னெடுக்க வேண்டும்.

கே: **ஐக்கியதேசியக்கட்சியின் மேதினத்தில் சிங்கக் கொடி ஏற்றிய சம்பந்தன் தற்போது சுதந்திர தினத்திலும் பங்கேற்றிருக்கின்றார். இவருடைய நடத்தை தமிழ்த்தேசிய அரசியலை பாதிக்காதா?**

ப: நிச்சயமாக ஈடுசெய்யப்படமுடியாத அரசியற் பின்னடைவை ஏற்படுத்தும். நாம் ஒரு விடயத்தை செய்து விட்டால் அதில் இருந்து பின்னகர முடியாது. சட்டத்தில் சொல்லுவார்கள் முரண்தடை என்று. அதுவும் மக்களால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் செய்யும் போது அதற்கான பெறுமதி மேலும் அதிகரிக்கும்.

தேர்வு செய்த மக்கள் தற்போது கூறமுடியாது நாம் இவர்கள் இவ்வாறான செயற்பாட்டினை செய்ய இவர்களிற்கு வாக்களிக்கவில்லை என்று. உண்மையில் இவர்களின் இத்தகைய செயற்பாட்டினை மக்கள் அங்கீகரிக்கவில்லை எனில் இவர்கள் எதிர்காலத்தில் தேர்தலில் மக்களால் தோற்கடிக்கப்படும் பட்சத்திலேயே மக்கள் தமது நிலைப்பாட்டினை மீண்டும் வலியுறுத்தி உறுதியாக பதிவு செய்ய முடியும். அல்லது மக்கள் தேர்தல் வரை காத்திராது வெளிப்படையாக இச்செயற்பாடுகளிற்கு எதிராக அணிதிரண்டு போராட வேண்டும்.

கே: **முன்னர் மகிந்தர் அரசாங்கம் மாத்திரம் தமிழ்த்தேசிய சக்திகளுக்கு எதிரியாக இருந்தது. தற்போது மைத்திரி அரசாங்கம். இந்தியா. அமெரிக்கா என மூன்று எதிரிகள் வந்துள்ளனர் இவற்றுக்கு எவ்வாறு முகம்கொடுப்பது?**

ப: என்னைப் பொறுத்த மட்டில் சர்வதேச அரசியலில் எவரும் எதிரிகளும் இல்லை நண்பர்களும் இல்லை. ஒவ்வொரு அரசுகளும் தமது நலன் சார்ந்தே இயங்குகின்றார்கள். நாமும் எமது மக்களின் நலன் சார்ந்து இயங்க வேண்டும்.

ஆனால் கூட்டமைப்பின் தலைமை அவ்வாறு செயற்படவில்லை என்பது தான் எமது குற்றச்சாட்டு. எனவே எந்தவொரு சர்வதேச சக்தியையும் எதிரியாக நாம் பார்க்கவில்லை. இந்த பூகோள அரசியற்சதுரங்கத்தில் நாம் எம்மக்களின் நலன் சார்ந்து காய் நகர்த்த வேண்டும்.

எம்மைப் பொறுத்தமட்டில் கூட்டமைப்பின் தலைமையை சர்வதேச சக்திகள் தமது நலனை அடைய பயன்படுத்துகின்றார்கள். இவர்களும் மக்களின் நலனை பின்னகர்த்தி வெளிசக்திகளின் விருப்பிற்கு செயற்படுகின்றார்கள்.

கே: **ஏன் இவர்கள் வெளிசக்திகளின் பிடிக்குள் இருக்கின்றார்கள் அல்லது அவர்களின் விருப்பங்களை மட்டுமே செய்கின்றார்கள் என்று கூறுகின்றீர்கள்?**

ப: கூட்டமைப்பின் தற்போதைய கூட்டணிக்கட்சிகளை பாருங்கள் உங்களுக்கு ஓர் உண்மை புரியும். தமிழரசுக் கட்சியாக இருக்கலாம், ஈ.பி,ஆர்.எல்.எப் ஆக இருக்கலாம், புளொட்டாக இருக்கலாம், ரெலோவாக இருக்கலாம் இவர்கள் எல்லோரும் 2001 ஆம் ஆண்டிற்கு முன்னர் வரை தமிழீழ விடுதலைப் புலிகளிற்கு எதிரான நிலைப்பாட்டில் நின்று செயற்பட்டவர்கள். அவர்கள் அவ்வாறு புலிகளுடன் முரண்பட்டது சரியா தவறா என்ற விவாதத்திற்குள் நான் வரவில்லை.

ஆனால் இது வரலாறு. அவ்வாறு விரும்பியோ விரும்பாமலோ புலிகளோடு முரண்பட்டவர்கள் தமது பாதுகாப்பிற்காக இலங்கை அரசாங்கத்தோடும் இந்தியாவோடும் இணைந்து நெருங்கி செயற்பட்டார்கள். அவர்களின் பாதுகாப்பில் வாழ்ந்தார்கள். அதனால் அவர்கள் அவர்களின் பிடியில் இருந்து மீள முடியாதவர்களாக இருக்கின்றார்கள்.

கே: **தமிழ்த்தேசியத்தை தனித்து அரசியலில் பின்பற்றினால் போதுமா? அதனை ஒரு வாழ்வு முறையாக பின்பற்ற வேண்டாமா? அப்படியாயின் நாம் என்ன செய்ய வேண்டும்?**

ப: நிச்சயமாக அது ஓர் வாழ்வு முறையாக பின்பற்றப்பட வேண்டும். அதற்கு மக்கள் அரசியல் மயப்படுத்தப்பட வேண்டும். நாம் எமது ஒவ்வொரு மக்கள் சந்திப்பிலும் சர்வதேச அரசியலையும் எமக்கான அரசியல் தீர்வு என்பது எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றியும் நாம் ஏன் மாகாணசபைகளை நிராகரிக்கின்றோம் என்பதையும் விலாவாரியாகக் கூறிவருகின்றோம். இதன் மூலம் மக்களை அரசியல் மயப்படுத்தி அணிதிரட்ட முயன்று வருகின்றோம்.

கே: **தமிழ்த்தேசியமக்கள் முன்னணி வலுவான கொள்கை நிலைப்பாட்டினை கொண்டிருந்தாலும் நடைமுறைச் செயற்பாடு பெரிதாக இல்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. இதற்கு என்ன கூறுகின்றீர்கள்?**

ப: இந்தக் குற்றச்சாட்டினை ஓரளவு ஏற்றுக் கொள்கின்றேன். இதற்கு காரணம் எமக்கு போதிய நிதிவளம் மற்றும் ஆட்பலம் என்பன இல்லாமல் இருந்தமையே ஆகும். ஆனால் நான் ஏற்கனவே மேலே கூறியது போல் மக்கள் முன்னர் பயப்பீதியில் ஆழ்ந்திருந்ததினால் எம்முடன் சேர்ந்து இயங்க தயங்கினார்கள்.

ஆனால் தற்போது மக்கள் சற்று பயத்தில் இருந்து வெளிவருவதனால் எம்முடன் பெருவாரியாக கைகோர்த்து வருகின்றார்கள். இது எமக்குபெரும் உற்சாகத்தினை ஏற்படுத்தி இருக்கின்றது.

தற்போது நாம் பெரும் எண்ணிக்கையில் இளைஞர்களையும் யுவதிகளையும் எமது கட்டமைப்புக்குள் உள்வாங்கி பிரதேச ரீதியாக கட்டமைப்புகளை உருவாக்கி வருகின்றோம். சமூகம் ஓர் அரசியல் மாற்றத்திற்கு தயாராகி வருவதை உணர முடிகின்றது. அடுத்துவரும் மாதங்களில் இக்குற்றச்சாட்டுக்களிற்கு நாம் நிரந்தர முற்றுப் புள்ளி வைப்போம்.

**நேர்காணல் : சி.அ.யோதிலிங்கம்**
**நம்தேசம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் தொழிநுட்ப வளர்ச்சியும் பெண்களின் நுகர்வு நடத்தையும்

இன்றைய காலகட்டத்தில் தகவல் தொழில்நுட்பமானது பாரிய வளர்ச்சியடைந்து வருகின்றது. மனிதனின் தேவைகளை இலகுவாக்கி உலகத்தினையே மனிதனின் உள்ளங்-கைக்குள் சுருக்கிவிட்டது. ஆரம்ப காலத்தினை எடுத்து நோக்கின் ஒரு கடித்தினை அனுப்புவதற்கும் அதனைப் பெறுவதற்கும் அதிகளவான காலம் தேவைப்பட்டது. இதனால் செய்திகளைப் பரிமாறுவதற்கு அதிகளவு கால அவகாசம் தேவைப்பட்டதால் மக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி-யமை நாம் அறிந்த உண்மையே. ஆனால் இன்று தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக கணப்பொழுதில் செய்திகளை மக்கள் தெரிந்து கொள்கின்றார்கள். இணையம், மின்னஞ்சல், சமூக வலைத்தளங்கள் என. பல இணைத்தளங்கள் பல செய்திகளை மக்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுவதுடன் பல்வேறு துறை-களின் அபார வளர்ச்சிக்குத் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக அமைகின்றது.

தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி பல்வேறு பட்ட துறைகளின் முன்னேற்றத்திற்குப் பக்க பலமாக இருப்பது போன்று பெண்களின் நுகர்வு நடத்தையிலும் பல்வேறுபட்ட மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது என்றால் அது மிகையாகாது. நுகர்வு நடத்தை என்பது பெண்கள் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது அவர்களின் மனப்பாங்கு, செயற்பாடுகள் எவ்வாறு அமைகின்றன என்பதைக் குறிப்பிடுகின்றது.

பெண்கள் ஆண்களை விட பொருட்களைக் கொள்வனவு செய்வதில் அதிக ஆர்வமும், ஈடுபாடும் காட்டுபவர்கள். அதிலும் ஆடை, ஆபரணங்கள், அழகுசாதனப் பொருட்கள் என்பவற்றில் அதிகளவு நாட்டம் உடையவர்கள் ஆண்களை விடப் பெண்களே. இது நாம் கண் கூடாகக் காண்கின்ற உண்மை. காரணம் பெண்கள் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது பொருட்களின் தரம், விலை என்பவற்றைக் கருத்தில் கொள்வதை விட தங்களுக்குப் பிடித்தமானவற்றை கொள்வனவு செய்வதுடன் மற்ற பெண்கள் வாங்கியதை விட தாங்கள் அதிசிறந்த பொருட்களைத் தெரிவு செய்ய வேண்டும் எனும் மனப்பாங்கில் நுகர்வு செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.


இவற்றை இன்று பெண்கள் வீட்டில் இருந்து கொண்டே நுகர்வு செய்யும் அளவிற்கு தகவல் தொழில் நுட்பம் வளர்ச்சி அடைந்துள்ளது. ஆரம்ப காலத்தில் ஒரு பொருளை நுகர்வு செய்வதற்குப் பல கடைகள் ஏறி இறங்க வேண்டிய நிலையே இருந்தது. இதனால் வீண் அலைச்சல், உடல் சோர்வு, நேரவிரயம் போன்ற அசௌகரியங்கள் ஏற்பட்டதுடன் வாங்கி வருகின்ற பொருட்கள் வீட்டில் சிலருக்கு பிடிக்காத நிலையும் காணப்பட்டது. ஆனால் இன்று வீட்டில் இருந்து கொண்டே வீட்டில் உள்ள அனைவரின் விருப்பங்களுடன் தங்களுக்குப் பிடித்தமான பொருட்களை இலகுவான முறையில் நுகர்வு செய்வதற்கு செய்வதற்கு அடிப்படையாக அமைந்தது தகவல் தொழில்நுட்ப சாதனங்களின் வளரச்சியே ஆகும்.

இதனால் பெண்கள் இலகுவில் இணையம், மின்னஞ்சல், முகநூல் போன்ற இணையத்தளங்களின் உதவியுடன் பொருட்களைக் கொள்வனவு செய்து கொள்கின்றார்கள். அது மட்டுமல்லாது இன்றைய காலப் பெண்கள் நுகர்வுத் தீர்மானங்களை எடுப்பதில் பலமான பங்கினை வகிக்கின்றனர். முன்னைய காலங்களில் பெண்கள் தங்களது குடும்பப் பணிகளை மட்டுமே மேற்கொண்ட போதிலும் அனைத்து தீர்மானம் எடுக்கும் அதிகாரங்களும் குடும்ப தலைவனுக்கே காணப்பட்டது. ஆனால் தற்காலத்திலே இப்போக்கு மாறியுள்ளது. பெண்களுக்கு தகவல் தொழில்நுட்ப சாதனங்களின் மேல் கொண்டுள்ள நாட்டம் அதிகரித்துள்ள-மையால் தாங்களாவே முன்வந்து பல்வேறு ஒப்பீட்டு ரீதியான தகவல்களையும் கொள்வனவு மற்றும் திருப்தியை உச்சப்படுத்தல் தொடர்பான செயற்பாடுகளையும் சிறப்பாகவே கையாள்கின்றனர் எனலாம்.

அது மாத்திரமின்றி பெண்கள் அதிகளவாக தங்களது கடமை-களையும் பணிகளையும் நிறைவேற்று-வதற்குச் செலவிடும் நேரத்தை விட தங்களது அவாக்களைப் பூர்த்தி செய்வதற்காக பொருட்கள் சேவைகளைத் தெரிவு செய்யும் நேரமே அதிகமாகக் காணப்படுகின்றது என்பது ஆய்வாளர்-களின் கருத்து. ஏனெனில் ஆண்களை விட பெண்கள் உளவியல் மற்றும் உணர்ச்சிகரமான சிந்தனைகளையும் எண்ணங்களையும் கொண்டுள்ளனர் என்பதனாகும். பல ஆய்வுகளின் படி பெண்கள் பௌதிக ரீதியான விற்பனை இடங்களை நாடுவதை விட சந்தை வெளிகளை நாடுவதே அதிகமாக காணப்படுகின்றது என தெரியவந்துள்ளது. சந்தை வெளி என இங்கு குறிப்பிடப்-படுவது வலைத்தளங்கள் மற்றும் இணைய வசதிகளை பயன்படுத்தி நுகர்வாளன் ஒருவன் பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்வதும் தன்வசமாக்கிக் கொள்வதையும் குறிப்பிடுகின்றது.

எவ்வாறு தகவல் மற்றும் தொழில்நுட்ப விருத்திக்கு எல்லை இல்லையோ அவ்வாறே பெண்களின் நுகர்வு நடத்தைக்கும் எல்லையே இல்லை எனலாம். பெண் ஒருவர் பாவனைக்கு உட்படுத்துகின்ற அனைத்து பொருட்க-ளிலுமே தரத்தினையும் விலையினையும் எதிர்பார்க்கின்றனர்.

இருப்பினும் குறைந்த விலை கொண்ட பொருட்கள் தரம் குறைந்தவை என்றும் தரம் கொண்ட பொருட்கள அனைத்தும் விலை கூடியவை என்றும் சொல்லல் ஆகாது. இதனை அடிப்படையாகக் கொண்டு பெண்கள் கொள்வனவின் போது கவனம் செலுத்துகின்ற பிரதான அளவுகோலாக பண்டக்குறி மாறியுள்ளது. தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக பெண்கள் வீட்டில் இருந்தவாறே பல்வேறு பண்டக்குறி கொண்ட பொருட்களை ஒப்பீடு செய்வதுடன் அவற்றில் எது சிறந்தது எது தனக்குப் பொருத்தமானது என்ற தீர்மானங்களை இலகுவாகக் கைப்பற்றிக் கொள்கின்றனர்.



இன்றைய பெண் சமுதாயத்தில் முக்கால் பங்கு பெண்கள் அலுவலகம் சென்று பணிபுரியும் பெண்களாகவே காணப்படுகின்றனர். இவ்வாறு இருக்கையில் இவ்வகையான பெண்கள் தங்களது நேரத்தை எப்போதும் வீணடிக்க எண்ணுவதில்லை. இயந்திரமயமாக நகர்ந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்திற்கு ஏற்ப அவர்களும் தங்களது நடை உடை பாவனைகளை மாற்றவே முற்படுகன்றனர். இவர்களில் பெரும்பாலான-வர்கள் நேரடியாக வணிகர்களைச் சந்தித்து பொருட்களைக் கொள்வனவு செய்வதை விட ஈபை(Ebay), அமேசன்(amazon), இக்மன்ட் டொட்எல்கே(ikman.lk), போன்ற வலையத்-தளங்களை நாடுவதன் மூலம் தாங்கள் நம்பகமான மற்றும் புதுமையான பாவனைப் பொருட்களை குறைந்த நேரத்தில் குறைந்த விலையில் கொள்வனவு செய்யவே முன்வருகின்றனர்.

நவநாகரிக பெண்கள் தங்களது உடலின் அழகையும் தோற்றத்தையும் கட்டுக் கோப்பாகவே வைத்திருக்க முயல்கின்றனர். இதன் காரணமாக எவ்வாறான பொருட்களைக் கொள்வனவு செய்தால் எவ்வாறான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம் தங்களிடயே ஒரு மதிப்பீட்டினைச் செய்ய தொழில்நுட்பம் பெரிதும் உதவுகின்றது. மேலும் கால கட்டத்திற்கு ஏற்றவாறு தங்களது உடை ஆபரண பாவனைகளைப் தொழிநுட்ப உதவியுடன் பெற்றுக் கொள்கின்றனர்.

முரத்தைப் பார்த்து அரிசி புடைத்த பெண்கள் இன்று முகநூலைப் பார்த்து சமூக வலைத்தளங்களை நாடியும் தகவல் நுகர்வு நடத்தைகளை மாற்றிக் கொண்டிருக்கின்றனர். எனவே இன்றைய காலகட்டத்தில் தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி பெண்களின் நுகர்வு

யோ.அர்ச்சனா
வர்த்தகம் மற்றும் முகாமைப் பிரிவு,
கிழக்குப் பல்கலைக்கழகம்

## விநோதங்கள்

### அதிகூடிய அபராதம்

கியூபெக் மாகாணத்தில் 1998-ம் ஆண்டு, புகைப்பிடிப்பதால் வரும் உடல்நலக் கேடுகள் பற்றி விளம்பர வாசகம் மூலம் தனது தயாரிப்புகளில் சொல்லாத நிறுவனங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு 12.4 பில்லியன் டொலர்களை இழப்பீடு வழங்க வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இம்பீரியல் டொபேக்கோ, ரோத்மன்ஸ் பென்சன் அண்ட் ஹைட்ஜஸ் மற்றும் ஜே.பி.ஐ. மென்டொனால்ட் ஆகிய சிகரெட் நிறுவனங்கள் மீது இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கனடா வரலாற்றிலேயே இந்த அளவுக்கு பெரிய அபராத தொகை தண்டனையாக விதிக்கப்பட்டது இதுவே முதல்முறை என்பது

### கிடார் வாசித்து சாதனை

பிரேசிலில் வசித்து வரும் வங்கி ஊழியரான அந்தோணி குல்காம்ப் டியாஸ்(33) என்பவர் மூளை புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார். மூளையில் அறுவைசிகிச்சை செய்யும் போது மூளையின் செயல்பாடுகளை நவீன கருவியின் மூலம் கண்கணிப்பதற்காக, அவருக்கு மயக்க மருந்து அளிக்காமல், வலியை மட்டும் மறக்கச்செய்யும் மருந்தினை செலுத்தினர்.

மேலும் 20 ஆண்டுகளாக கிடார் வாசித்துவரும் இவர், அறுவைசிகிச்சையின் போது தான் கிடார் வாசித்து மருத்துவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார்.

### காரினுள் புகுந்த சிங்கம்

தென் ஆப்பிரிக்காவில் உள்ள ஹனிடியூ பகுதியில் சிங்கங்களுக்கான வனவிலங்கு பூங்காவில் அமெரிக்காவை சேர்ந்த பெண் ஒருவர் காரில் இருந்தவாறு சிங்கங்களை பார்த்து ரசித்துள்ளார். அவர் தனது காரில் ஜன்னலை மூடாததால் அதன் வழியாக சிங்கம் ஒன்று காரின் உள்ளே பாய்ந்து அந்த பெண்ணை கடித்து குதறியது.

காரை ஓட்டி வந்த ஓட்டுனரையும் சிங்கம் தாக்கியதாக கூறப்படுகிறது. இந்த தாக்குதலில் அந்த பெண் பரிதாபமாக உயிரிழந்தார். இதுதொடர்பாக வனவிலங்கு பூங்கா நிர்வாகத்தினர் கூறுகையில், பார்வையாளர்கள் தான் தக்க பாதுகாப்புகளோடு செல்லவேண்டும். அவர்கள் தங்கள் காரின் ஜன்னலை சரியாக மூடும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள் என்று தெரிவித்தார்.



- பிரித்தானியாவை சேர்ந்த 58 வயதான ஜெனி பக்லேப் என்ற பெண் தனது திருமணத்திற்கு சவப்பெட்டியில் ஊர்வலமாக வந்திறங்கினார். மண்டையோடுகள் மற்றும் எலும்புக்கூடுகள் மீது ஆர்வம் காட்டி வந்த தனது சகோதரர் ரொஜரை கௌரவப்படுத்தும் விதமாக இவ்வாறு வந்ததாக கூறியுள்ளார். இந்த ஏற்பாடு குறித்து மணமகன் கிறிஸ் தோப்பர் லொக்கெட்டிற்கும் கடைசி நேரத்தில் தெரிந்ததால் அதிர்ச்சியில் ஆழ்ந்தார்.



- அமெரிக்காவில் கடந்த 1985ம் ஆண்டு ஜானிற்கு 36 வயதிருந்தபோது, அவர் வசித்த அதே பகுதியை சேர்ந்த 4 வயது குழந்தையை வீட்டிற்கு அழைத்து வந்து கதற கதற மின்சார அடுப்பில் திணித்து விட்டு அதனை அதிகபட்சமான வெப்பத்தில் சூடு படுத்தியுள்ளார் இந்த கொடூர சம்பவத்தை பொலிசாருக்கு தெரிவித்ததும், அவர்களை ஜானை கைது செய்து அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. தற்போது அவர் தன்னுடைய வழக்கை மறுவிசாரணை செய்ய வேண்டும் என ஜான் கோரிக்கை விடுத்திருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

## இப்படியும் நடக்கலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலங்கேணி என்னும் அழகிய கிராமம்

இதே போல 'கேணிப்பித்தன்' என்ற புனைப்பெயரில் எழுதும் திரு.எஸ்.அருளானந்தம் அவர்கள் வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் உதவிக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றியவர். சிறுவர் இலக்கிய முன்னோடியாகத் திகழ்பவர். இதுவரை எழுபது நூல்களுக்கு மேல் வெளியீடு செய்துள்ளார்.

திருபத்தினியர், திரு.தாமோதரம்பிள்ளை போன்ற அண்ணாவிமார்கள் இங்கே நாடகங்களைப் பழக்கி மேடையேற்றி மக்களின் அமோக ஆதரவைப் பெற்றனர். தம்பலகாமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மாபெருங் கலைஞரான திரு.க.கணபதிப்பிள்ளை அண்ணாவியார் இங்கு வந்து நாடகங்களை நெறிப்படுத்தி மேடையேற்றி பெரும் புகழ் பெற்றதை இங்குள்ள பெரியார்கள் நினைவுபடுத்திக் கூறுகின்றனர்.

சீனடி விளையாட்டு என்னும் தற்காப்புக் கலையை பயின்றவர்களும் இங்கு அதிகமாக உள்ளனர். தம்பலகாமம் ஆதிகோணேஸ்வரப் பெருமானிடம் நீங்காத பத்திகொண்ட ஆலங்கேணிமக்கள் ஆலயத்தில் கொடியேற்றவிழா தொடங்கிய நாளிலிருந்து பெரும்பாலோர் புலால் உணவை நீக்கி விரதம் இருந்து ஒவ்வொரு விழாவுக்கும் வண்டிச் சவாரியாக மனைவி மக்களுடன் சென்று திரும்புவார்கள்.

பதினாலாம் நாள் கதிர்காம ஸ்வாமி எழுந்தருளும் விழாவன்று மேள தாளசீர்களுடன் எட்டு மைல்களையும் கால் நடையாக நடந்து நேர்கடன் செலுத்துவது ஆலங்கேணி மக்களின் பக்திச் சிறப்புக்குச் சான்றாகவுள்ளது.





இப்படி ஆலங்கேணி மக்கள் எல்லாத்துறைகளிலும் முன்னெறிக் கொண்டிருந்த வேளையில் 'வெண்ணை திரளும் போது தாழி உடைந்தது போல' 1990 ஆம் ஆண்டுகாலப் பகுதிகளில் அடுத்தடுத்து ஏற்பட்ட கலகங்களின் உச்சநிலையால் உயிரிழப்பு பொருள் இழப்பு என்று எல்லா நலன்களும் அழிந்து இழந்து அகதிகளாகி ஐந்தாண்டுகாலம் வரை 'கிளப்பன் வேக்'என்ற அகதிமுகாமில் தங்கியிருந்து, உடைந்து தகர்ந்து கிடந்த தங்கள் ஊரான ஆலங்கேணியில் மீளக்குடியேறினர்.

முற்றும்..

தம்பலகாமம் க.வேலாயுதம்

# தம்பலகாமத்துக் கல்வெட்டு



13ஆம் நூற்றாண்டுக்குரியது என அறிஞர்களால் கருதப்படுகின்ற தமிழ்க் கல்வெட்டொன்று தம்கலகாமத்தில் கண்டெடுக்கப்பட்டது. இதன் 'மைப்படியை' 1930 ஆம் ஆண்டு எடுத்த தொல்பொருள் திணைக்களத்தினர் இச்சாசனம் திருகோணமலையிலுள்ள 'தம்பலகாமம்' என்னும் ஊரில் எடுக்கப்பட்டதாக தமது குறிப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

இச்சாசனம் குறித்து பேராசிரியர் திரு.சி.பத்மநாதன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார். இச்சாசனம் கற்பலகை ஒன்றில் எழுதப்பட்டுள்ளது. எழுத்துக்கள் அமைந்துள்ள பகுதி 1அடி 7அங்குல நீளமானது. எழுத்துக்கள் ஓரளவு பெரியவை. இவை சராசரியாக 15 அங்குல உயரமும் அகலமும் கொண்டவை. இச்சாசனத்தை 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்குரிய ஆவணமாகக் கொள்ளலாம்.

துண்டமாகிவிட்ட இச்சாசனத்தில் எல்லாமாகப் 'பதினொரு வரிகள் காணப்படுகின்றனவாம். முதல் நான்கு வரிகளும் சொற்கள் அடையாளம் காண்பதற்கு ஏற்றவாறு அமையவில்லையாம். 5ஆவது வரி முதலான சாசனப்பகுதி கீழ்க் கண்டவாறு அமைந்துள்ளதாகப் பேராசிரியர் திரு.சி.பத்மநாதன் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

5. உடையார் நிச்ச
6. யித்த ஐகதப்ப
7. கண்டன் தாநத்(து)
8. க்கு நிலையாக்(கித்)
9. தம்பலகாம ஊ
10. ரை நான் கெல
11.லைக்கு தள எல்லை.

இந்தச் சாசனத்தில் முக்கியமான மூன்று விபரங்கள் காணப்படுகின்றன. முதலாவது 'உடையார்' என்ற சொல் எழுதப்பட்டுள்ளது. உடையார் என்ற சொல் சாசனவழக்கில் அரசர்களை அல்லது அரச பிரதானிகளைக் குறிக்கும் என்பது ஆய்வாளர்கள் கருத்தாகும்.

இன்னொரு அதிமுக்கியமான விடயம் 'தம்பலகாமம்' என்ற பெயர் குறிக்கப்பட்டுள்ளமையாகும். தம்பலகாமம் என்னும் பெயர் புராதனமானது. அது ஏறக்குறைய எண்ணூறு வருடங்களுக்கு முற்பட்ட காலங்களிலிருந்து வழங்கி வருகிறது என்பது இச்சாசனத்தினூடாக உறுதியாகின்றது. சாசனத்தின் மூன்றாவது முக்கியமான அம்சம் 'ஜகதப்ப கண்டன் தானம்' என்பது பற்றிய குறிப்பாகும். 'கண்டன்' என்பது போர் வீரனைக் குறிக்கும் சொல்லாகும்.

வரலாற்றுத்துறை பேராசிரிய-ராகிய திரு.சி.பத்மநாதன் அவர்கள் இச்சாசனம் குறித்து ஆய்வுகள் செய்து இத்தகைய கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள். பதினோராம் பன்னிரெண்டாம் ' நூற்றாண்டுகளில் திருகோணமலைப் பிரதேசத்தில் கந்தளாய் மயிலங்குளம் போன்ற இடங்களில் இத்தகைய படைகள் இருந்தன என்பது வரலாறாகும். இதே போன்று தம்பலகாமத்திலும் 'ஜகதப்ப கண்டன்' என்ற பெயரால் வழங்கிய படையொன்று இருந்துள்ளது என்பது இந்தச் சாசனத்தின் மூலம் அறியப்படுகிறது.

கந்தளாய் கட்டக்குளப்பற்று, பதவியா, மன்னார் மாதோட்டம், புலச்சேரி, தேவபட்டினம் முதலிய இடங்களில் கலிங்கத்து மாகோன் தனது படை நிலைகளை அமைத்திருந்தான் எனப் பாளி சிங்கள வரலாற்று நூல்களில் சில குறிப்புகள் காணப்படுகின்றன.

பழமையில் திருகோணமலைப் பிரதேசத்தில் தம்பலகாமப்பற்று ஒரு தனி வன்னிமையின் ஆட்சியின் கீழ் அமைந்திருந்தது. இது வன்னியர்கள் பற்றிய தமிழ் நூல்களிலும் ஒல்லாந்த பிரித்தானிய நிர்வாக அதிகாரிகளின் அறிக்கைகளிலும் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தம்பலகாமம் சுமார் எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னால் அங்குள்ள ஆட்சியாளரின் ஏற்பாட்டின் பிரகாரம் ஒரு வீர பட்டினமாக வீரகணமொன்றின் காவலிலுள்ள வணிக நகராக இருந்ததா? என்ற சந்தேகங்களை வரலாற்றுப் பேராசிரியராகிய திரு.சி.பத்மநாதன் அவர்கள் தனது 'தம்பலகாமத்துக் கல்வெட்டு' ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

தொடரும்..

தம்பலகாமம் க.வேலாயுதம்

# வாடகை வீடு

### திருமலை வி.என்.சந்திரகாந்தி

## குட்டிக் கதை

வாயிற் கதவு திறக்கும் சத்தம் கேட்டு அரிசியில் கல் தேடிக் கொண்டிருந்த சுளகினை ஓரமாக வைத்து விட்டு தலையை நீட்டிப் பார்த்தேன். அது நாங்கள் குடியிருக்கும் வாடகை வீட்டு சொந்தக்காரன். அல்லை தொல்லை இல்லாத ஆள். பெண்கள் மாதிரி சுபாவம். கந்தோருக்கு (வேலைக்கு)ப் போனால் இடையிலை வராத மனுசன். இண்டைக்கு அவசர அவசரமாய் மோட்டார் சைக்கிளை விட்டு விட்டு வீட்டிற்குள் சென்று எதையோ எடுத்துக் கொண்டு போகுது.

நாங்கள் குடியிருக்கின்ற வாடகை வீடும் வீட்டுச் சொந்தக்காரரின் வீடும் ஒரே வளவுக்குள் அடுத்தடுத்தாற் போல இருப்பதுதான் எல்லாப் பிரச்சினை-களுக்கும் காரணமாய் போய்விட்டது.

என்ரை மனுசன் வேலைக்குப் போய்விடுவார். நான் என்ரை இரண்டு குமரையும் பாடசாலைக்கு அனுப்பிப் போட்டு இரண்டு வீட்டுக்குமாக சேர்த்து காவல் இருக்க வேண்டும். வேலைக்குப் போகாத பெண் இருக்கிற குடும்பத்துக்குத் தான் வீடு கொடுப்பன் என்று சொல்லித்தானே இந்த வீட்டுக்கார மனுசி வீடு தந்தவள். அவர்களுக்கென்ன எல்லாம் இளந்தாரிகள்.

அழகான குமருகளை வச்சிருக்கிற நானல்லவோ வயித்தில நெருப்பைக் கட்டிக் கொண்டிருக்க வேண்டிக் கிடக்குது.

மீண்டும் வாயிற் கதவு திறக்கும் சத்தம் கேட்டு வெளியில் வந்து பார்த்த போது வீட்டுக்காரன் அவதி அவதியாக தலையணையுடன் கூடையில் சில பொருட்களை திணித்தபடி ஓடுகிறான். எனக்கு ஒரு கதை கிடையாது!

இலட்சக்கணக்கில் நாங்கள் கொடுக்கிற வீட்டு முற்பணமும் மாதாந்தம் கொடுக்கிற ஆயிரக்கணக்கான ரூபா வாடகைப் பணமும் அவையளுக்கு நினைவில்லை.

என்ரை குமருகள் இரண்டு தரம் வோசிங் ரூமுக்கு போனால்...

வீட்டுக்கார மனுசி சொல்லும் "அடிக்கடி தண்ணீர் அடிச்சால் பிற் நிரம்பிவிடுமம்மா", எனும் அன்பு வார்த்தைகளால்.

வீட்டுக்கார மனுசி முதல்நாள் செய்த அட்டகாசம் எனது மனக்கவலைகளை இப்பவும் தூண்டி விடுகிறது.

"வீட்டை உடனே விட்டு விடவேண்டும். எங்களுக்கு வீடு தேவை. உங்களுக்கு விடியு மட்டும் எங்களால பார்த்துக் கொண்டிருக்க முடியாது. வீட்டை உடனே விடாவிட்டால் சாமான் சக்கட்டெல்லாம் தூக்கி எறிஞ்சி போடுவன்". நான் வாயே திறக்கவில்லை. எனது கண்களில் நீர் சொரிகின்றது.

மனம் அழுகின்றது.

இப்படியான அட்டகாசங்களை எல்லாம் யாரேனும் தட்டிக் கேட்கக் கூடாதா என நினைப்பதோடு இருந்துவிடுவேன். காளித் தாயே எங்கள் கவலைகள் இன்னும் எத்தனை காலம் நீடிக்கப்போகின்றன.

மீண்டும் வாயிற் கதவு திறக்கும் சத்தம் கேட்டு ஓடிச்சென்று பார்க்கிறேன். வீட்டுக்கார மனுசன் மோட்டார் சைக்கிளை பொத்தென்று போட்டுவிட்டு தங்கள் வீட்டு வாயிற் படியில் விழுந்து ஓலமிடுகிறார்.

நான் ஓடிச்சென்று "உங்களுக்கு என்ன நடந்தது சொல்லுங்கோவன்?" என்று அதட்டினேன்.

அவர் பெண்கள் போல ஓலமிட்டபடி, "ஐயோ அன்ரி... அவா காலையில மோட்டார் சைக்கிளால விழுந்து போனா... ஆஸ்பத்திரியில சேர்த்தனான். கதை பேச்சில்லாமல் கிடந்தாலும் தப்பி விடுவா எண்டு நினைத்து ஏமாந்து போனேனே...".

எனது அனைத்து கவலைகளையும் ஒரு நொடியில் மறந்த நான்....

"ஐயோ அன்ரி" என்று போட்ட அலறலில் ஊர்ச்சனமே திரண்டு வந்துவிட்டது.

மனிதன் நினைக்கிறான்: கடவுள் தீர்மானிக்கிறான் என்பது சரியாகத் தான் போய்விட்டது.

வாடகை வீட்டிலிருந்து என்னை வெளியேற்ற இந்த மனுசி பிரயத்தனம் செய்கையில் இறைவன் தான் அவளுக்குக் கொடுத்த உடலென்னும் வாடகை வீட்டிலிருந்து அவளை வெளியேற்றி விட்டானே!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 56

# பெற்றோர் அன்றி தெய்வம் இல்லை



வி. என். சந்திரகாந்தி

எமது சிறுவயது முதற்கொண்டே நாம் வாழ்கையில் பல தவறுகளை செய்கின்றோம். அவற்றை நாம் தவறு என்று உணர்வதில்லை. காலம் தாழ்த்தியே அந்த தவறுகள் எமது மனத்தை உறுத்துகின்றன. எமது பெற்றோரை தவிர எம்மேல் அதிக அன்பு செலுத்துபவர்கள் இருக்கமுடியாது. எம்மை தலாட்டிச் சீராட்டி வளர்த்த எம் பெற்றோரின் வயோதிப காலத்தில் நாம் அவர்களுக்கு செய்ய வேண்டிய பணிவிடை-களை செய்யாமல் விடுவதைப் போன்ற ஒன்றை விட பெரிய தவறு வேறு ஒன்றுமே இல்லை.

இரண்டு காரணங்களை ஒட்டி பிள்ளைகள் பெற்றோரை கவனிக்காது விடுகின்றனர். ஒன்று பெற்றோரின் வருவாய் அல்லது சொத்து மீதான ஆதங்கம். மற்றையது பெற்றோரின் சுகவீனம் மற்றும் அது சார்ந்த இயலாமை பற்றிய சரியான புரிந்துணர்-வின்மை. எமது கலாச்சாரம் சார்ந்த அளவில் பெற்றோர். தமது பெண்பிள்ளை-களின் வாழ்கையை நல்லவிதமாக அமைப்பதற்காக தமது சொத்துகள் அனைத்தையும் இன்னும் சொல்லப்-போனால் கடன்பட்டும் கூட சீதனமாக கொடுத்துவிடுகிறார்கள். அதன் பின்னரான பல பெற்றோர்களின் வாழ்க்கை ஆண்-பிள்ளை பெண்பிள்ளை என்ற வேறுபாடு இன்றியும் பேரக்குழந்தைகள் என்ற அவாமிகுதியிலும்தான் கழிகின்றது. அபூர்வமாக சில பெற்றோருக்கு "பென்சன்" போன்ற சிறு சிறு வருவாய் வந்தாலும் அது மட்டுமட்டாக அவர்களது மருத்துவ செலவுகளுக்கும். நாளாந்த செலவுகளு-க்குமே போதுமானதாக இருக்கும். எனவே தமது வாழ்கையின் இறுதிக்கட்டத்தில் இருக்கும் பெற்றோரின் வருவாய்க்கோ சொத்துக்கோ பிள்ளைகள் போட்டியிடு-வதும். அவர்கள் மீது கோபம் கொள்வதும் முறையல்ல என்றே கொள்ள வேண்டும். பல பிள்ளைகள் இக்காரணத்தை ஒட்டி வயோதிப பெற்றோரை பழிவாங்குவது போல அவர்களை பராமரிக்காமல் இருப்பது வருந்தத்தக்கதேயாகும். என்னதான் பிள்ளைகளுக்குள் சொத்து விடயங்களில் போட்டி பொறாமைகள் இருந்து பெற்றோரை பராமரிக்காமல் புறக்கணித்தாலும் தாயோ தந்தையோ கடும் நோய்வாய்ப்படும் போது அதிர்ந்து போய்விடுகிறார்கள். அந்நேரத்தில் அவர்களது அன்பு பீரிட்டு பாய்ந்தாலும். அனேக சந்தர்ப்பபங்களில் அது காலம் தாழ்த்திய அன்புவெளிப்பாடகவே போய்விடும். உரியு நேரத்தில் கிட்டாத பரிகாரம் உயிரையும் பறித்துவிடும் அல்லவா.?

ஒவ்வொரு குடும்பத்திலும் சிறு பிள்ளைகளும் இருப்பார்கள். வயோதிப பெற்றோரும் இருப்பார்கள். சிறுகுழந்தைகளுக்கு ஆறுவயதிற்குள் 'BCC' தடுப்பூசி மற்றும் போலியோ முக்கூட்டு தடுப்பூசிகளும் சொட்டு மருந்துகளும் கொடுப்பதை மருத்துவச்சி உறுதிசெய்வாள். சின்னம்மை, பெரியம்மை-க்கான பால்கட்டுதல் உரிய காலத்தில் மேற்கொள்ளப்படும். ஏனென்றால் அக்குழந்-தைகள் ஆரோக்கியமாக வளரவேண்டும்.

எவருக்குமே தமது உயிர்மேல் ஆசையிருக்கும். தமது பிள்ளைகள் பெரியவர்களாகி பெருமையுடன் வளர்வதை பார்க்கவேண்டும் பேரக்குழந்தைகளின் மழலையை கேட்கவேண்டும். பேத்தியின் பூப்புனித நீராட்டு விழாவை பார்க்கவேண்டும் என்றெல்லாம் ஆசையிருக்குமல்லவா?.

அறுபதுகளில் இருக்கும் எம்பெற்றோர் மீது நாம் சரியான கரிசனை எடுத்தால் நிச்சயம் அவர்கள் எண்பது வயதுக்கு மேலும் கூட வாழமுடியும்.

எனது நண்பன் ஒருவன் தனது பெற்றோரை அவர்களது இறுதிக்காலத்தில் கவனிக்க-முடியாமல் போனது பற்றி அடிக்கடி நினைந்து மனம் வருந்துவான். அவனது தாய் சலரோக நோயாளியாக இருந்துள்ளாள். அவனது தந்தைக்கு உயர்இரத்த அழுத்தம் இருந்தது. சிறுவனான எனது நண்பனுக்கு அந்த நோய்களின் தாக்கம் பற்றியோ அவர்களுக்கு பெற்றுக்கொடுக்கவேண்டிய மருத்துவ வசதிகள் என்ன என்பது பற்றியோ தெரிந்திருக்கவில்லை. தாய் சலரோகம் நிமித்தம் கோமா நிலைக்கு தள்ளப்பட்டு ஒருமாத காலத்திற்கு மேல் படுத்த படுக்கையாக இருந்து மரணிக்க நேர்ந்தது. தந்தை உயர்இரத்த அழுத்தம் காரணமாக பாரிசவாத நோய்க்கு உட்பட்டு மரணமானார். கிராமத்தில் உரிய வைத்திய வசதியும் இல்லை. நாட்டு வைத்தியமும் கைகொடுக்கவில்லை. குறைந்த வயதிலேயே சரியான கண்காணிப்பு இல்லாமையினால் அவர்கள் இறந்து-விட்டார்கள் என்பதே நண்பனின் கவலை.

இந்த கவலை எமக்கு ஏற்படக்கூடா-தென்றால், எமது பெற்றோர் எம்முடன் நீண்ட நாட்கள் வாழவேண்டும் என்றால் அவர்களை எப்படி நாம் பராமரிக்க வேண்டும் என்ற அறிவை நாம் முதலில் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இந்நாட்களில் சிறுவர்களுக்கே நீரிழிவு நோய்வருகின்றது. அதே போன்று நாற்பது வயதிற்கு மேற்பட்ட எவருக்கும் இதயநோய்கள் வரக்கூடிய சாத்தியம் இருக்கின்றது. நீரிழிவு, இரத்த அழுத்த, கொலஸ்ரோல், மாரடைப்பு, குருட்டுத்-தன்மை போன்ற எந்த நோய்க்கும் இந்நாட்களில் பரிகாரம் உண்டு. சீரான உணவுக்குகட்டுப்பாடு உரிய மருந்து, உடற்பயிற்சி இருந்தால் இந் நோய்களுடன் நாற்பது வருடம் கூட வாழமுடியும் எனவே நாம்தான் அதிக அக்கறை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு நோய்கள் பற்றியும் அவற்றிற்கான சிகிச்சைகள் பற்றியும் கற்றுக்கொண்டு பெற்றோருக்கு விழிப்புணர்வினை ஊட்ட வேண்டும்.

முதலில் சலரோகம் பற்றி பார்ப்போம் வயிற்றுப்பகுதியில் உள்ள 'சதையீரல் காணப்படும் 'இலங்கக்கான்' கலங்களில் இருந்து சுரக்கும் இன்சுலின் செயற்பாடு பாதிப்படைவதனால் ஏற்படும் நோய் சலரோகம் (நீரிழிவு) என அழைக்கப்படும். சலரோகம் உடலின் ஆற்றலை வெகுவாக பாதிப்பது மட்டுமன்றி பலவித நோய்களை உருவாக்கவும் கூடியது அத்துடன் பலவித பக்க விளைவுகளையும் ஏற்படுத்த வல்லது அதன் காரணமாக மரணமும் சம்பவிக்க கூடும். எமது பெற்றோருக்கு நீரழிவு நோய் இருக்கும் பட்சத்தில் அவர்கள் தொடர் பராமரிப்பும் சிகிச்சையும் பெற்றால் அவர்கள் இயல்பு வாழ்க்கையை நிறைவாக பெறமுடியும். எமது பிள்ளைகளை அவர்கள் அணைத்து மகிழ்வதை காணலாம் அல்லவா.?

அடுத்தது அதி இரத்த அமுக்கம் என்றால், இரத்த அமுக்க மானியால் அளக்கும் போது மூத்தோரில் 160/90 எனும் நிலமைக்கு மேற்படின் அந்நிலையினை அதிஇரத்த அமுக்கம் என குறிப்பிடுவர்.

இந்நோய் இரத்த குழாய்கள் விரிவடையும் தன்மையை இழத்தல், உட்புறத்தில் கல்சியம் கொழுப்பு முதலியன படிம நிலையை ஏற்படுத்தல், உப்பு உணவில் அதிகமாவதால் அதன் செறிவு இரத்தத்தில் அதிகரித்தல். சிறுநீரக வருத்தம், சுரப்பிகளின் மிகை செயற்பாடு போன்ற காரணிகளால் ஏற்படலாம்.

இந்நோயினால் ஏற்பட கூடிய சிக்கல்கள். மார்பு வலி, பாரிசவாதம், சிறுநீரக தொழிற்பாடு இன்மை, கண்பார்வை குறைதல், வலிப்பு முதலியன. எமது பெற்றோருக்கு இந்நோய் அவதானிக்கப்படின் தொடர் சிகிச்சை பெற்றுக்கொடுக்கவேண்டும். பெற்றோர் புகைப்பிடிப்பவராயின் அதனை நிறுத்த வேண்டும். கிரமமாக உடற்பயிற்சி செய்ய தூண்ட வேண்டும். உடல் நிறையை குறைக்கவேண்டும். கொழுப்பு உணவு மற்றும் உப்பை தவிர்த்து நார்தன்மை உணவை அதிகரிக்கவேண்டும். தியானம், யோகாசனம் போன்றன நல்ல பலனை கொடுக்கும்.

பெற்றோர் மீது எமது கண்காணிப்பு இருக்க வேண்டும். நல்ல 'Pharmacy' களில் 'One Touch' குளுக்கோ மீற்றர்களை பெற்றுக்கொள்ள முடியும். குருட்டுத்தன்மை வராதபடி கண்களை பரீட்சித்து உரிய சிகிச்சையை வைத்திய சாலையில் பெறமுடியும்.

அனைத்துக்கும் மேல் பெற்றோர் மீது நாமும் எமது மழலைச்செல்வங்களும் அன்பை சொரியவேண்டும் இவையே எமது பெற்றோரின் இறுதிக்காலத்தில் நாம் அவர்களுக்கு செய்ய வேண்டிய உபகாரங்களாகும்.



# குளிர்காலத்து நாட்கள்

சஞ்சயன் செல்வமாணிக்கம்


"கோடைக்கால இரவுகள் நம்மை பரந்த வெளியை நோக்கிச் செலுத்துகின்றன என்றால் இந்தக் குளிர் இரவுகள் நம்மை நம் நினைவுகளின் இதயத்தை நோக்கி திருப்புகின்றன". இவ் வரிகளை வாசித்ததும் சில நிமிடங்கள் குளிர் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

மனுஷ்ய புத்திரன் கூறுவது போன்று கோடைகால இரவுகளில் மனம் ஏகாந்தமாய் வெளியே அலைந்து கொண்டிருக்கும். குளிர் கால இரவுகள் சிந்தனையை தூண்டுவதாயும், தனிமையை உணர்த்துவதாயும் இருக்கின்றன.

பனிக்காலங்களில் மணல் கூட கல் போலாகிவிடுகிறது. கோடைக்காலங்கள் இதற்கு எதிர்மாறானவை. குளிர்காலங்-களில் நானும் மனதளவில் இறுகிப் போய்விடுகிறேனோ என்று எண்ணத் தோன்றுகிறது எனக்கு. கோடைக்காலங்களில் வந்தமரும் புன்னகையைக் கூட வலிந்தழைத்து இருத்த வேண்டியிருக்கிறது, பனிக்காலங்களில். மனதும் இலகுவாய் இருப்பதில்லை.

கோடையில் மனம் கவரும் காட்சிகளைக் கண்டால் நின்று, ரசித்து, அனுபவித்துப் போவேன். ஆனால் பனிக்காலத்தில் மனம், சுற்றாடலில் கவனமற்று சென்றடைய வேண்டிய இலக்கு நோக்கி என்னை விரட்டிக்கொண்டிருக்கும். ஆனால் குழந்தைகள் மட்டும் எப்போதும் போல குளிரைப் பற்றிய எதுவித சிந்தனைகளும் இன்றி தமது குதூகல உலகில் இருந்துகொண்டே இருக்கிறார்கள்.

இலையுதிர்ந்து காய்ந்து போயிருக்கும் மரங்கள், பூக்காத பூமரங்கள், காணாமல் போய் விட்ட குருவிகள், மௌனித்துப் போன மனிதர்கள் என்று குளிர் ஊரையே அமுக்கிப்போடுகிறது. பனிக்காலங்களில். அதற்காக மகிழ்ச்சியான சம்பவங்களோ, மனிதர்களோ இல்லை என்பது தவறு. பனிக்காலத்தை காதலிப்பவர்களும் பலர்



இருக்கிறார்கள்.

குளிருடனான எனது முதல் அனுபவம் மிகவும் கொடியது. நோர்வே வந்து இரண்டாவது நாள் வெப்பநிலை - 40 என்று காட்டிக்கொண்டிருந்தது. மூன்று நாட்களுக்கு முன்பு தான் +40 இல் இருந்து இடம் பெயர்ந்திருந்தேன். நான் நின்றால் குளிர்ந்தது. இருந்தால் குளிர்ந்தது. படுத்தால் குளிர்ந்தது. என்ன செய்தாலும் குளிர்ந்தது.

அந் நாட்களில் குளியல் மற்றும் கழிப்பறை-யிலேயே நாம் ஐவர் ஒன்றாய்த் தூங்கினோம். அங்கு மட்டும் தான் தேவையான அளவு வெப்பம் ஹீட்டர் மூலம் கிடைத்தது, தவிர அங்கு நிலத்திலும் ஹீட்டர் இருந்தது. அந்த ஆரம்ப நாட்களின் பின் நான் குளிருடன் மிகவும் நட்பாகிப்போனேன்.

அந் நாட்களில் சிலி நாட்டு மனிதர் ஒருவர் நட்பானார். அவரும் அகதி, நாம் பேசிக்கொள்-வதற்கு மொழி இருக்கவில்லை. அவருக்கு தமிழ் தெரியாது. எனக்கு லத்தீன் தெரியாது. எனக்கு தெரிந்திருந்த கொஞ்ச ஆங்கிலமும் அவருக்குத் தெரியாது. ஆனால் எப்படியோ பேசிக்கொ-ண்டோம். அவர் குளிருடன் என்னை நட்பாக்கினார். தினமும் காலை உணவு முடிந்ததும் மதிய உணவுக்கு காத்திருப்பது, அதன் பின்பு மாலையுணவுக்கு காத்திருப்பது என்பது தான் எமக்கு இருந்த வேலை. சிலர் இவ்வுணவு இடைவேளைகளில் தூங்கி எழுந்தனர். சிலர் சீட்டுக்கட்டுடன் அலைந்தனர். சிலர் பார்த்த படத்தையே திரும்ப திரும்ப பார்த்தனர்.

ஒரு நாள் என்னை அந்த சிலி நாட்டு நண்பர் நடந்து போய் வருவோம் என விரலால் நடப்பது போல சைகைகாட்டி அழைத்தார். அன்று ஏறத்தாள 1 மணிநேரம் நடந்தோம். ஆளையாள் அடிக்கடி பார்த்துச் சிரித்துக்கொண்டோம். தண்ணீர் தாகமெடுத்த போது வெள்ளை மா போன்றிருந்த உறைபனியை வாய்குள் போட்டுக்-கொண்டேன். காலப்போக்கில் எமது நடைப்பயணங்கள் 2, 3 மணி நேரமாக மாறிய போதும் எமக்குள் பேச்சுவார்த்தை நடக்கவில்லை. அப்போதும் சிரித்துக்கொண்டோம். அந்த நண்பர் பனிச்சறுக்குதலிலும் தேர்ச்சிபெற்றிருந்தார். அவரிடம் பனிச்சறுக்கு பழகிய முதல் நாள் நான் நிமிர்ந்து நின்ற நேரத்தை விட விழுந்து கிடந்த நேரமே அதிகமாயிருந்தது. ஆனால் குளிரை மறந்திருந்தேன்.

எனக்குக் குழந்தைகள் என்றாகிய பின் எனது குழந்தைகளுடன் பனிக்காலங்களில் பல மணிநேரம் குளிருக்குள் நின்றபடியே விளையாடியிருக்கிறேன். அந் நாட்களில் குளிர் அழகாயிருப்பது போலிருந்தது.

இப்போ 25 வருடங்களின் பின்பும் குளிரை நான் வெறுக்கவில்லை. குளிரின் போதுதான் வெம்மையின் சுகம், கம்பளியின் அருமை, உடல்களின் ஸ்பரிசம், நெருப்பின் அருகாமை என்பனவற்றின் அருமை புரிகிறது.


நாளைய நாளுக்கு தேவையான கம்பளியினாலான காலுறை, குளிரைத் தாங்கும் உள்ளுடுப்புக்கள், கையுறை, கழுத்தைச் சுற்றும் கம்பளிச் சால்வை, ஜக்கட், கம்பளியினாலான தொப்பி, பனிக்காலத்துச் சப்பாத்து ஆகியன கண்ணில் படுகின்றனவா என்று பார்க்கிறேன். மனது நிம்மதியடைகிறது.

இன்றைய இரவு எல்லோருக்கும் அழகானதாயிருக்கட்டும்.

**இன்றைய நாளும் நல்லதே ...**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சினிமுரசு



## திரை விமர்சனம்

## இயக்குனர் மிஷ்கினின் திறந்திடு சீசே நாராயணன், தன்ஷிகா நடிக்கும்

படத்தின் ஆரம்பத்திலேயே இன்றைய இளைஞர்களின் சொர்க்கமாக கருதப்படம் ஒரு கிளப்பின் கதவு திறக்க அதில் ஆறடி குதிரையாக தன்ஷிகா வருகிறார். (படத்திலேயே அவரை அப்படி தான் சொல்றாங்க). இவரை பார்த்தவுடன் தன் காம வலையில் விழ வைக்க வேண்டும் என நாராயண், வைரவன் ஸ்டாலின் ப்ளான் போட, அதற்கு ஏற்றார் போல் தன்ஷிகாவும் மூச்சு முட்ட குடிக்கின்றார். நேரம் ஆக ஆக போதை தலைக்கேறி பாத்ரூமில் விழுந்து கிடக்கிறார். அந்த இடத்திற்கு வரும் நாராயண், தன் நண்பன் வைரவன் ஸ்டாலினிடம் சொல்லி அவரை காப்பாற்ற, அதன் பின் தான் தெரிகிறது தன்ஷிகா கற்பழிக்கப்பட்டு இருக்கிறார் என்று. நாராயண், வைரவன் ஸ்டாலின் இவர்கள் மட்டுமே தன்ஷிகா கற்பழிக்கப்பட்ட நேரத்தில் அங்கு இருக்க, இவர்களில் யார் தன்ஷிகாவை கற்பழித்தார்கள்? உண்மையாகவே அவர் கற்பழிக்கப்பட்டாரா? அப்படி இல்லை என்றால் அவர் ஏன் அப்படி சொல்ல வேண்டும் என பல டுவிஸ்ட் முடிச்சுகளை அவிழ்த்து நாட்டுக்கு ஏற்ற ஒரு பெரிய கருத்துடன் படம் முடிகின்றது.

படம் ஆரம்பித்ததில் இருந்து 'மது நாட்டுக்கும் வீட்டுக்கும் கேடு' என்ற ஸ்லோகன் வந்து கொண்டே இருக்கின்றது. அதை எதற்கு கட் செய்ய வேண்டும், படம் முழுவதுமே கீழே Template ஆக வைத்திருக்கலாம். ஏனென்றால் படமே அதை பற்றி தான். படம் முழுவதும் ஒரு கிளப்பை சுற்றி தான் நடக்கிறது, அதில் எப்போதும் நாராயண், வைரவன் மட்டும் தான் இருப்பார்களா? வேறு யாருமே அங்கு வேலை செய்ய வில்லையா? என பல கேள்விகள் துரத்துகின்றது. படத்தில் பல இடங்களில் பெண்ணியம் தலை தூக்குகிறது. படத்தின் முதல் பாதி கொஞ்சம் த்ரில்லாக, நாராயண் வசனத்துடன் நன்றாக இருக்கின்றது. மொத்த படத்தையும் தூக்கி செல்வது தன்ஷிகாவின் நடிப்பு தான். காமெடி காட்சிகளாக இருந்தாலும் டபுள் மீனிங் வசனங்களை குறைத்திருக்கலாம். மொத்தத்தில் திறந்திடு சீசே மந்திரம் இன்னும் அழுத்தமாக கூறியிருந்தால் வெற்றியின் கதவு திறந்திருக்கும்.



## மணிரத்தினம் + ராய்



மணி ரத்தினம் இயக்கவுள்ள படத்தில் ஐஸ்வர்யா ராய் நடிக்க உள்ளார். இத்தகவலை ஆங்கில நாளிதழுக்கு அளித்த ஒரு பேட்டியில் ஐஸ்வர்யா கூறியுள்ளார். கதாநாயகிக்கு முக்கியத்துவம் உள்ள படம் என்பதால் ஐஸ்வர்யா ராயுடன் இதுபற்றி பேசியுள்ளாராம். இதுகுறித்து, மணி ரத்னத்துடன் நடிக்க நான் மிகவும் விரும்புவேன். ஆழமான உணர்வுகள் கொண்ட அவருடைய படங்கள் எனக்குப் பிடிக்கும். அவர் மீது முழுமையாக நம்பிக்கை வைப்பேன். நான் இயக்குநருக்கான நடிகை. அவர் நடிகர்களுக்கான இயக்குநர் என்றார் ஐஸ்வர்யா.

வெங்கட் பிரபுவின் இயக்கத்தில் வெளியான "மாசு" திரைப்படத்தின் திரைவிமர்சனம் அடுத்த வார இயத்தில்......



## தல படம் என்றால் சொல்லவா வேணும்



அஜித் தற்போது சிவா இயக்கத்தில் நடித்து கொண்டிருக்கும் படத்தின் பல தகவல்கள் வெளிவந்துள்ளது. இதில் அஜித் டாக்ஸி ட்ரைவராக நடிக்கும் போது தான். சால்ட்பெப்பர் லுக்கில் வருவராம். கொல்கத்தா சம்மந்தப்பட்ட காட்சியில் யங் லுக்கில் கலக்கவிருக்கிறாராம். மேலும், ஸ்ருதிஹாசனை, லட்சுமி மேனனை தவிர்த்து படத்தில் மற்றொரு ஹீரோயினும் வருவாராம்.

இப்படத்தின் படப்பிடிப்பில் சிவா, அஜித்திடம் 'உங்களுக்கு செண்டிமெண்ட் நன்றாக செட் ஆகுது சார்' என கூற, அஜித் வழக்கம் போல் தன் மெல்லிய புன்னகையை பதிலாக கூறியுள்ளார். படத்தில் ஒரு சேஸிங் காட்சியும் உள்ளதாம்.

## ரஜனியை கைது செய்தே தீருவேன்

லிங்கா பிரச்சனை இன்னும் தீராது போல, இந்த சிங்காரவேலன் குழுவினர் அடிக்கும் கூத்திற்கு நாளுக்கு நாள் அளவே இல்லாமல் செல்கின்றது. சிங்காராவேலன் புதிதாக ஒலிப்பதிவொன்றை அனுப்பியுள்ளார். இதில் பணம் எல்லோருக்கும் சரியாக பிரித்து கொடுக்கப்படவில்லை, பணம் கொடுப்பது போல் கொடுத்து ஏமாற்றி விட்டார்கள். நான் தற்கொலை செய்தால், ரஜினி மற்றும் தாணுவை கைது செய்ய வேண்டும் என அதில் பேசியுள்ளார்.

## சிவா / தனுஷ்

தனுஷ், சிவகார்த்திகேயனின் பனிப்போர் சத்தமில்லாமல் நடந்து தான் வருகின்றது. இருவரும், தற்போது இவர்கள் நடிப்பில் வெளிவரும் மாரி, ரஜினி முருகன் ஆகிய படங்களை ஒரே நாளில் ரிலிஸ் செய்ய முடிவெடுத்தனர். இதை தொடர்ந்து மாரியின் இசை வெளியீட்டு விழா ஜுன் 7ம் தேதி என அறிவிக்க, ரஜினி முருகன் படத்தின் இசையும் இதே நாளில் வெளிவரும் என கூறினர். பின்னர் பிற்போடப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

## இதை மட்டும் செய்யுங்க சூர்யா

சூர்யா இன்று உச்சத்தில் உள்ளார் என்றால் அதற்கு முழுக்காரணமும் இயக்குனர் பாலா தான். இவர் இயக்கிய நந்தா படம் தான் சூர்யாவை தமிழ் சினிமாவிற்கு நல்ல நடிகன் என்ற அடையாளத்தை காட்டியது.

இப்படத்தில் நடிக்கும் போது ஒரு நடிகனுக்கு முக்கியம் அவனுடைய கண் அசைவுகள் தான், முதலில் கண்களில் நடிக்க வேண்டும், பின் தான் உடல் அசைவு எல்லாம் என கூறியுள்ளார். இதை அன்றிலிருந்து மனதில் வைத்த சூர்யா இதையே தான் மாஸ் படம் வரை பின்பற்றி வருகிறாராம்.



## அப்பாவாகும் தளபதி



அட்லி இயக்கும் விஜய் படம் குடும்பப்படம் என கோலிவுட்டில் தகவல்கள் கசிந்து வருகின்றன. படத்தில் ஒரு குழந்தையின் கேரக்டர் முக்கிய பாத்திரத்தில் நடிப்பது உறுதியாகியுள்ளது. அத்துடன் விஜய் இந்த படத்தில் அப்பாவாக நடிக்கிறார் என கிசுகிசுக்கப்-படுகிறது. சிம்புதேவன் இயக்கத்தில் விஜய்யின் 'புலி' படத்தின் படப்பிடிப்புகள் யாவும் முடிந்துவிட்ட நிலையில் விஜய் குடும்பத்தாருடன் ஓய்வெடுக்க ஐரோப்பா செல்லவிருக்கிறாராம். அங்கிருந்து திரும்பியவுடன் 'புலி' படத்தின் டப்பிங் மற்றும் அட்லீ படம் என ஒரே நேரத்தில் நடக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.இதில் சமந்தா, எமி ஜாக்சன் நடிக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்


INFOMATION TECHNOLOGY

MOBILE

## டிஜிட்டல் பிரேம்

கடந்த கால நினைவுகளை மீட்பதற்கு புகைப்படங்களை பிரேம் செய்து வைப்பது வழக்கமாகும். இச்செயன்முறையும் தற்போது டிஜிட்டல் தொழில்நுட்பத்திற்கு மாறியுள்ளது. Artkick எனும் நிறுவனமானது அதியுயர் துல்லியம் வாய்ந்த (HD) புகைப்பட பிரேம்களை உருவாக்கியுள்ளது.


Artkick LOOK எனும் பெயருடைய இப் பிரேம்களில் பேஸ்புக், Flicker, Dropbox, Instagram போன்றவற்றிலிருந்து சுமார் 17 மில்லியன் வரையான புகைப்படங்களை பகிரக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.



## ஸ்மார்ட் ஆடைகள்

கூகுள் நிறுவனம் ஸ்மார்ட் தொழில்நுட்பத்தினைக் கொண்ட ஆடைகளை வடிவமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது. Jacquard எனும் திட்டத்தின் கீழ் உருவாக்கப்படவுள்ள இந்த ஆடைகளுக்கு சில்க், கொட்டன், பொலியெஸ்ரர் போன்ற துணி வகைகளில் உலோக இழைகள் பயன்படுத்தப்படவுள்ளன.

இது பற்றி கூகுள் நிறுவனம் தெரிவிக்கையில், "இதே போன்ற தொழில்நுட்பம் ஏற்கனவே அறிமுகமாகியிருந்த போதிலும் Jacquard திட்டத்தினூடாக உருவாக்கப்படும் இத்துணிகள் குறைந்த விலையில் உற்பத்தி செய்யக்கூடியதாக இருக்கும்" என குறிப்பிட்டுள்ளது.



OTHER

## பூகோள வெப்பம் இனி அதிகரிக்காது

பல்வேறுபட்ட மனித நடவடிக்கைகளால் பூகோளத்தின் வெப்பம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் இதனால் பல எதிர்விளைவுகள் ஏற்படும் எனவும் தொடர்ச்சியாக எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு வந்தன.

அதாவது அமெரிக்காவின் அரச ஆய்வு நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் முன்னரை விடவும் இந்த வருடம் வெப்ப அதிகரிப்பு குறைவாக இருப்பதாக தெரிவித்துள்ளனர். இதற்காக கடந்த 15 வருடகாலமாக சேகரிப்பட்ட வெப்ப அதிகரிப்பு தரவுகளை ஒப்பிட்டு ஆய்வு செய்துள்ளனர். இதேவேளை வெப்ப அதிகரிப்பானது நீண்ட காலத்திற்கு தொடராது எனவும், அது விரைவில் முடிவுக்கு வரலாம் எனவும் குறித்த ஆய்வாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

## கண் பரிசோதனைக்கான அப்

இங்கிலாந்தை சேர்ந்த மருத்துவ ஆராய்ச்சியா-ளர்கள் சிறிய கண் பரிசோதனையில் கிட் (பீக்) என்ற பெயரில் அப் ஒன்றை உருவாக்கியுள்-ளார்கள். போனின் கமெராவை கொண்டு கண் விழித்திரையை ஸ்கேன் செய்வதன் மூலமும், போனின் ப்ளாஷ் லைட்டை கொண்டு கண்ணில் ஏற்படும் நோய்களையும் கண்டறிய முடியும். இங்கிலாந்தில் சாதாரணமாக கண்பார்வை பரிசோதனையை செய்ய 1 லட்சம் பவுண்ட் செலவாகிறது.

கென்யாவில் உள்ள 233 பேரிடம் மேற்கொள்ளப்-பட்ட ஆய்வில் இந்த அப்ளிகேஷன் மிக சரியான கண்பார்வை பரிசோதனை முடிவுகளை தருவதாக தெரியவந்துள்ளது.

## மெமரி கார்ட் தொடர்பான சில சுவாரஸ்யம்

நினைத்துப் பார்க்க முடியாத, அதிக அளவு கொண்ட தரவுகளை எளிதில் கையாள அதிகமாக பயன்படுத்தப்படுவது மெமரி கார்டு. 1990ம் ஆண்டு ஆரம்பத்தில் தான் இத்தகைய மெமரி கார்டுகள் சந்தைகளில் விற்பனைக்கு வந்தது. தொழிற்சாலைகளிலும், மோடம் போன்ற இணைய வசதி சாதனங்களிலும் வந்தது.

இதைத் தொடர்ந்து மொபைல், கமெரா, லாப்டாப், டேப்லெட், வீடியோ ஹேம்ஸ் போன்றவற்றில் பயன்பாட்டுக்கு வந்தது. இந்த மெமரி கார்டுகள் Encoding, Storage, retrieval என்ற மூன்று முறைகளில் கொடுக்கப்படும் தகவலை சேகரிக்கிறது. இவை எல்லாம் சிலவகை transistor உதவியுடன் செயல்படுகிறது. இதில் முக்கிய பங்கு வகிப்பது MOSFET transistor ஆகும்.

இதில் உள்ள memory circuits- களில் ON அல்லது OFF என இரு முறைகளில் மாறி மாறி சிறிய அளவினான மின்சாரம் பாயும் போது இது தனது வேலையை தொடங்குகிறது. மெமரி கார்டு ஒரு சிறிய அளவினான microcontroller கொண்டுள்ளது. Microcontroller-ஐ ஒரு கணனியின் CPU ஆக நினைத்துக் கொண்டால் எளிதில் புரியும்.

இவை மொபைல் போனுடன் இணைப்பை ஏற்படுத்தும் போது தனது வேலையை கண் இமைக்கும் நேரத்தில் Clock Signal மூலம் செய்துவிடுகிறது. தற்போது வந்திருக்கும் மெமரி கார்டுகள் தண்ணீரால் கூட பாதிப்படையாத வண்ணம் இருக்கிறது. அந்த வகையில் Samsung நிறுவனம் ஒரு மெமரி கார்டை அறிமுகப்படுத்தியிருக்கிறது. தற்போது 512 GB அளவில் மிகச் சிறிய வடிவிலான மெமரி கார்டுகள் கூட வந்து விட்டன. இவற்றின் அளவு மேலும் அதிகரித்தால் அதில் ஆச்சரியப்படக் கூடிய விடயம் ஒன்றுமில்லை.

## விண்டோஸ் 10

மைக்ரோசொப்ட் நிறுவனம் 7 வகையான சாதனங்க-ளுக்கான இயங்குதளங்-களை ஒரே நேரத்தில் முதன் முறையாக வெளியிட-வுள்ளது. இதேவேளை விண்டோஸ் எனும் பெயரை தாங்கி வரவுள்ள இறுதி இயங்குதளமாக விண்டோஸ் 10 உள்ளதாக கடந்த வாரங்களில் தகவல்கள் வெளியாகி-யிருந்தன.

இந் நிலையில் இவ் இயங்குதளமானது எதிர்-வரும் ஜுலை மாதம் வெளியிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் இயங்குதளத்தில் விண்டோஸ் 8 இயங்கு-தளத்தில் நீக்கப்பட்டிருந்த Start Button மீண்டும் தரப்பட்டுள்ளதுடன், மேலும் பல புதிய அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.


## திருடுபோக விடாதீர்கள்...

இணையத்தில் நாம் பலதரப்பட்ட கடவுச்சொற்களை ஒவ்வொரு தேவைக்கும் பயன்படுத்துகின்றோம். மின்னஞ்சலுக்காவும், சில தளங்களை பார்வையிடமும் கருத்துக்களை தெரிவிப்பதற்-காகவும் பிரத்தியேக துரும்புச்சீட்டாக கடவுச்சொல் பயன்படுகிறது.

ஒரு வலிமையான சொல்லை உருவாக்கி இணையத் திருடர்களிடம் தனிமனித உரிமையை பாதுகாக்கலாம். கடவுச்சொல்லின் வலிமையை சோதிப்பதற்காக ஒரு தளம் இருக்கின்றது. அது THE PASSWORD METER ஆகும்.

தள முகவரி: http://www.passwordmeter.com

உங்கள் கடவுச்சொல்லில் குறைந்தது ஒரு எண்ணும், ஒரு பெரிய எழுத்தும் (Uppercase Letter), ஒரு சிறிய எழுத்தும் (Lowercase Letter), ஒரு அடையாளக்குறி (Symbols) சொல்லும் இருக்கவேண்டும். குறைந்தபட்ச எழுத்துக்களின் எண்ணிக்கை எட்டு ஆகும்.




## சிறிய அசைவையும் கண்டறிய பயன்படும் சாதனம்



தொடுதிரை தொழில்-நுட்பத்தினைத் தொடர்ந்து கை அசைவுகளைக் கொண்டு சாதனங்களைக் கட்டுப்படுத்தும் தொழில்நுட்பமானது பிரபல்யமடைந்து வருகின்றது. சிறிய கை அசைவுகளையும் துல்லியமாக கண்டறியக்கூடிய வன்பொருளை (Hardware) சாதனத்தை Project Soli எனும் திட்டத்தினூடாக உருவாக்கியுள்ளது கூகுள் நிறுவனம்.

இச்சாதனமானது கை அசைவுகளை மட்டுமல்லாது விரல் அசைவுகளையும் உணரக்கூடியதாக இருத்தல் விசேட அம்சமாகும்.

## ஒரே நேரத்தில் 200 பேருடன்

மொபைல் சாதனங்களுக்கான தொடர்பாடல் அப்பிளிக்கேஷன்களை உருவாக்கும் Line நிறுவனம் தற்போது ஒரே நேரத்தில் 200 பேருக்கு அழைப்பினை ஏற்படுத்தக்கூடிய அப்பிளிக்கேஷன் ஒன்றினை அறிமுகம் செய்துள்ளது.

முற்றிலும் இலவசமாக தரவிறக்கம் செய்து நிறுவிக்கொள்ளக்கூடியதாக இருக்கும் Popcorn Buzz எனும் இந்த அப்பிளிக்கேஷன் அன்ரோயிட் மொபைல் சாதனங்களுக்கு மட்டுமே தற்போது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த அப்பிளிக்கேஷனில் வீடியோ வசதி உட்பட மேலும் பல வசதிகளை உள்ளடக்குவதற்கான திட்டங்கள் மேலும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.




## Projector உடன் கூடிய கைப்பேசி

ஸ்மார்ட் கைப்பேசி உலகில் Projector உடன் கூடிய கைப்பேசிகள் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன. எனினும் அவை மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெற்றிருக்கவில்லை. இந்நிலையில் Lenovo நிறுவனம் தற்போது Lenovo Smart Cast எனும் Projector உடன் கூடிய ஸ்மார்ட் கைப்பேசியினை அறிமுகம் செய்யவுள்ளது.

இதில் Projector ஊடாக Key Board இனை இயக்கும் வசதியும் உள்ளடக்கப்பட்டிருத்தல் விசேட அம்சமாகும். சில புதிய தொழில்நுட்பங்களை உட்புகுத்தி உருவாக்கப்பட்டுள்ள இந்த Projector கைப்பேசியானது மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாட்டு நடப்பு

# ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்களும் இருப்பர்

– பாலையூற்றான் –

பெற்றோரின் பிரதான கடமைகளில் மிக முக்கியமானது தம் பிள்ளைகளை நேர்வழியில் முன் எடுத்துச் செல்வதே. உணவு, உடை, கல்வி போன்றவற்றில் அக்கறை செலுத்துவது மட்டும் போதாது. சமூகத்தில் பிள்ளைகளுக்கு நல்லதொரு சிறப்பு மிக்க அங்கிகாரத்தை பெற்றுக் கொடுக்க வேண்டிய பாரிய பொறுப்புக்கு பெற்றோர் என்றும் கட்டுப்பட்டுள்ளனர். பிள்ளையின் ஒவ்வொரு அசைவிலும் பெற்றோரின் கண்காணிப்பு மிக அத்தியாவசியமானதாகும்.

சுன்னாகத்தை சார்ந்த காந்தரூபன், அவனது பெற்றோர் எப்படியும் அவனுக்கு ஓர் உயர் பதவியை உள்நாட்டில் பெற்றுக் கொடுப்பதற்காக கொழும்பிலுள்ள தனியார் கல்லூரி ஒன்றிற்கு அனுப்பி வைக்க எண்ணினர். பரம்பரை விவசாயிகளான பெற்றோர் தமது பிள்ளை எப்படியும் ஓர் உயர்ந்த உத்தியோகத்தில் பணிபுரிய வேண்டுமென்று ஆசைப்பட்டாலும், உயர்தரம் வரை கல்வி பயின்றும் கைநிறைய சம்பாதிக்கக்கூடிய தொழில் வாய்ப்பு கிடைக்காததால் மலேசியா சென்றான் அவன். அங்கே அவனுக்கு தனியார் மருத்துவமனை ஒன்றில் மேற்பார்வையாளர் பதவி கிடைத்தது. காந்தரூபன் குடும்பத்தில் ஒரேயொரு பிள்ளை. ஒரு வருடத்தில் இரண்டு அல்லது மூன்று தடவை வெளிநாட்டிலிருந்து வந்து தனது பெற்றோர், நண்பர்கள் மற்றும் அனைவரையும் ஊரில் பார்க்க மறக்கவே மாட்டான் காந்தரூபன்.

மேலும் மலேசியாவில் காந்தரூபனுக்கு மிக நெருங்கிய நண்பன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் அலெக்ஸ். அவனும் இலங்கையனே. இரண்டு பேரும் ஒரே நாட்டை சார்ந்தவர்கள் என்பதால் நெருக்கம் அங்கு மிக இறுக்கமாக இருந்தது. அலெக்ஸ் மலேசியா தனியார் போக்குவரத்து நிறுவனம் ஒன்றில் பேரூந்து சாரதியாக கடமையாற்றி வந்தான்.

வெளிநாட்டில் வேலைக்காக காந்தரூபனும் அலெக்சும் சென்றிருந்தாலும் அங்கு அவர்கள் அடிக்கடி



ஒருவரையொருவர் சந்திக்கும் வாய்ப்பு இருந்தது. மேலும் தங்களுக்குள் ஏற்படும் இன்ப துன்பம் அனைத்தையும் பகிர்ந்து கொள்வது மட்டுமல்ல ஒருவருக்கொருவர் துணையாகவும் இருந்து வந்தனர். மலேசியாலிருந்து விடுமுறைக்கு இலங்கை வரும் போதும் கூட இருவரும் ஒன்றாகவே வந்து ஒன்றாகவே திரும்பிப் போவார்கள். இருப்பினும் அலெக்ஸிடம் வெளிப்படுத்த முடியாத சோகம் இருந்து வந்தது. அவனுக்குள்ள பெருங்கவலை தன் மூத்த சகோதரியை கரை சேர்ப்பது தான். அலெக்ஸிடம் இருந்த அந்த பாரிய கவலையை அறிந்து காந்தரூபன் அவனுக்கு உதவ முன்வந்தான். இதுவரை காலமும் திருமணம் புரியாதிருந்த அலெக்ஸ் இன் மூத்த சகோதரியை காந்தரூபன் திருமணம் செய்ய முன்வந்ததே என்றுமே மறக்க முடியாத அந்த எதிர்பாராத உதவியாகும்.

மிக குறுகிய காலத்தினுள் அலெக்ஸின் மூத்த சகோதரிக்கும் காந்தரூபனுக்கும் திரியாயில் மிக விமர்சையாக திருமணம் இடம்பெற்றது. காந்தரூபனின் தகப்பனாருக்கு அவ்வேளையில் இருந்த பாரிசவாதத்தால் திருமணச்சடங்கில் கலந்து கொள்ள முடியாவிட்டாலும் அவனின் தாயார் கலந்து கொண்டார்.

காந்தரூபன் அந்த திருமணத்தை மிக எளிமையாக காதோடு காதாக நடாத்த உத்தேசித்து இருந்தாலும் அலெக்ஸ் விட்டு வைக்கவில்லை. ஏனென்றால் அவனது ஒரே ஒரு சகோதரியின் திருமணமல்லவா? நிகழ்வின் முழுச்சடங்கையும் காந்தரூபனின் தாயார் முன்னின்று நடாத்தி வைத்தார். திருமணம் முடிந்து ஓரிரு மாதங்களுக்குப்பின் மைத்துனர்களான அந்த நண்பர்கள் இருவரும் மீண்டும் மலேசியாவிற்குப் பறந்தனர்.

இரண்டு பேரும் தற்பொழுது உறவினர்களானதால் முன்பை விட நெருக்கமானவர்களானார்கள். ஒரு தடவை காந்தரூபனின் நிறுவனம் குறித்த திகதியில் இலங்கைக்கு வருவதற்கு விடுமுறை வழங்குவதை அனுமதிக்கவில்லை. ஆனால் அலெக்ஸ் இலகுவாக அனுமதி பெற்றிருந்தான். எப்படியும் ஒருவர் இலங்கை வந்தால் போதுமானதாகவே இருந்தது. காரணம் இரண்டு பேரினது குடும்பமும் திருமணத்திற்கு பின் ஒன்றாகி விட்டதே.

இம்முறை அலெக்ஸ் தனியாகவே இலங்கை வந்திருந்தான். தனது சகோதரிக்கு அவளது கணவன் வாங்கிக் கொடுத்த பொருட்களை சகோதரியிடம் கொடுத்திருந்தான். அவள்கூட மிகவும் சந்தோசமடைந்திருந்தாள். இருப்பினும் ஒரு தடவையாவது சுன்னாகம் சென்று காந்தரூபனின் பெற்றோரை நேரடியாக சந்திக்க விரும்பி அங்கு சென்றிருந்தான் அலெக்ஸ். அவர்களை அங்கு சந்தித்தது அவனுக்கு சுன்னாகத்தில் மேலும் பலருடன் பழகும் வாய்ப்பு கிடைத்தது.

அங்கு அவன் பலருடன் பேசிப்பழகியது பெரும் தப்பாகி விட்டது. ஏன்தான் சுன்னாகத்திற்கு வந்தேன் என்று பதற்றமும் கவலையும் அடைந்தான் அலெக்ஸ். அதுமட்டுமல்ல தான் ஏமாற்றப்பட்டு விட்டேன் எனும் தீர்க்கமான முடிவுக்கும் வந்தான்.

மேலும் சுன்னாக்கத்தில் ஒரு நிமிடம் கூட அவனால் நிற்க முடியவில்லை. உடனடியாக தனது சொந்த ஊரான திரியாய்க்கு திரும்பினான். சுன்னாகத்தில் அவன் கேட்டறிந்த விடயங்களை தனது சகோதரியிடம் கூறுவதா? அல்லது அனைத்தையும் மறப்பதா? என தடுமாறினான்.

அங்கு கேள்விப்பட்டவைகளை எப்படியும் ஒரு நாள் வெளிப்படுத்தவே வேண்டும். எத்தனை நாளுக்கு மறைப்பது? "இலகுவில் ஏமாறக் கூடியவர்கள் இந்த உலகத்தில் இருக்கும் வரை ஏமாற்றுபவர்களும் இருந்து கொண்டே இருப்பார்கள்." சிலரால் எந்த ஒரு ஏமாற்றத்தையும் தாங்கிக் கொள்ள முடியும். ஆனால் சிலருக்கு சிறியதொரு ஏமாற்றத்தைக் கூட தாங்கிக் கொள்ளக் கூடிய மனபலம் இல்லை. அதனால் அவர்கள் உடனே தப்பான முடிவுகளை எடுத்து விடுகிறார்கள்.

மலேசியாவிற்கு மீண்டும் சென்றால் பல சிக்கல்கள், பிரச்சனைகள் நிச்சயம் ஏற்படும் என்பதை அலெக்ஸ் மிகத் தெளிவாக புரிந்து கொண்டான். அவனது விடுமுறை முடிந்தும் அலெக்ஸ் மீண்டும் தொழிலுக்காக மலேசியா செல்லாதிருப்பது அவனது வீட்டில் பலத்த சந்தேகங்களை தோற்றுவித்தது. அவன் வெளிநாடு சென்றதும் இவ்வளவு காலமும் தான் திருமணம் செய்யாமல் இருந்தது அனைத்தும் அவனது மூத்த சகோதரிக்காகவே.

அவன் அயலவர்கள் மூலம் அறிந்துகொண்ட விடயம் என்னவெனின் காந்தரூபன் சுன்னாக தபாலதிபரின் மகளை ஏற்கனவே திருமணம் செய்தவன் என்றும் அவன் மூன்று பிள்ளைகளுக்கு தந்தை என்பதுமே. தான் கேட்டு அதிர்ச்சியுற்ற அந்த தகவலை அவனது வீட்டாரின் காதில் போட வேண்டிய நிலை ஏற்பட்டது. இனி கேட்கவா வேண்டும். ஒரு பூகம்பமே வெடித்தது அந்த வீட்டில். நீண்ட காலமாக திருமணத்திற்காக காத்திருந்த அவனது சகோதரிக்கு அலெக்ஸின் நண்பனின் ஊடாக ஒரு வழி பிறந்தது. ஆனால் அது இவ்வளவு சீக்கிரம் புஸ்வானமாக மாறும் என்று எவருமே எதிர்பார்க்கவில்லை.

அதே ஊரில் புற்றுநோய் காரணமாக திருமணமாகிய ஒரு இளம் பெண் காலமாகி இருந்தாள். அவளின் குழந்தைக்கு நல்லதொரு தாயை இறந்தவளின் கணவன் தேடிக் கொண்டிருந்ததால் அவள் அந்த தபுதாரனுக்கு இரண்டாம் தாரமானாள்.

# கள்வர்கள் – அஜாக்கிரதை வேண்டாமே!!!

- தன்யா -

– – உண்மை! உண்மையைத் தவிர வேறேதுமில்லை – –

மத்தியவீதியை வசிப்பிடமாகக் கொண்டுள்ள ஓர் ஆசிரியை தனது மகள்மார் இருவருடன் தனது வீட்டில் வசித்து வந்தார். அவரது கணவர் வெளிநாடு ஒன்றில் வேலை செய்கின்றார். அதனால் அவர்களிடம் காசு கொட்டிக் கிடந்தது.

மூவரும் பாடசாலை முடிந்து மதியம் 2.00 மணியளவில் வீடு திரும்புவர். பின்னர் மூத்த மகள் பி.ப 3.00க்கு பிரத்தியேக வகுப்பிற்குச் செல்வாள். இவர்கள் இருவரும் மாலை 5.00 மணிவரை நித்திரை கொள்வர். இதுவே அவர்களது வழமையான செயற்பாடாகும்.

இதை எவ்வாறோ அறிந்து கொண்ட ஒரு கள்வர் கூட்டம் ஒருவர் மாறி ஒருவர் தொடர்ந்து இரு நாட்களாக அந்த வீட்டின் யன்னல் பகுதியில் நின்று உளவு பார்த்து வந்தனர். அதைக் கண்ணுற்ற அயல்வீட்டு பெண் அந்த ஆசிரியையிடம் சென்று இது குறித்து கூறியுள்ளார். இருப்பினும் அவன் தொலைபேசியில் கதைப்பதற்காக மர நிழலில் வந்து நிற்பதாக எண்ணி அசட்டை செய்யாது இருந்துள்ளார் ஆசிரியை.

பின்னர் மூன்றாம் நாளும் அவர்கள் நிற்பதைக் கண்ட ஆசிரியையின் இரண்டாவது மகள் அம்மாவிடம் கூற அவர் வெளியில் வந்து "தம்பி ஏன் ஒரே இங்க நின்டு ஃபோன் கதைக்கிறீங்க" என அதட்டினார். பின் அவன் அவ்விடத்தை விட்டகன்றதும் உள்ளே சென்றார் ஆசிரியை. அவன் சென்றுவிட்டான் எனும் திருப்தியில் மீண்டும் வழமையான செயற்பாடான ஆழ்ந்த நித்திரைக்கு சென்றனர் தாயும், மகளும்.

இவர்களினது நடமாட்டம் இல்லாமல் போனதன் பின் காத்திருந்த இருவரும் மெல்ல வளவினுள் சென்று திறந்திருந்த யன்னலின் கம்பிச் சட்டத்தினை மெதுவாக திருகாணியின் உதவியுடன் கழற்றி ஒருவர் பின் ஒருவராக உள்ளே சென்று தமது தேடுதல் வேட்டையைத் தொடங்கினர்.

சற்று நேரத்தில் கிட்டத்தட்ட இரண்டு லட்சம் பெறுமதியான நகைகள், பணம் மற்றும் பொருட்களையும் சேகரித்தனர். ஆசை யாரைத்தான் விட்டது. இன்னும் சற்று நேரம் தேடுவோம் என ஒவ்வொரு அறையாக தேடித் தேடி பொருட்கள் சேகரித்தனர்.

நல்ல வேட்டை கிடைத்த குஷியில் நின்ற இருவரும் நேரத்தைக் கவனிக்காது நின்றிருந்தனர். வெளியில் வாகனத்துடன் காத்திருந்த மூன்றாமவன் வீட்டினுள் நின்ற இருவரில் ஒருவனுக்கு அழைப்பை ஏற்படுத்தினான். அமைதி நிலைக்கு விடப்படாதிருந்த அவனது கைப்பேசி "ஆட்ராரா நாக்கு முக்க" எனும் பாடலுடன் கதறியது. திடுக்கிட்ட அவன் பதட்டத்தில் கைப்பேசியை அணைக்க சிறிது தாமதமாக்கினான். உடன் சுதாகரித்த இருவரில் ஒருவன் படுத்திருந்தவர்களை மெல்ல நோட்டமிட்டான். அவர்களிடமிருந்து எதுவித அசைவையும் உணராத அவன் மீண்டும் தன் வேலைக்குத் திரும்பினான். இருவரும் இவ்வளவும் எடுத்ததே போதும் என எண்ணியவாறு அனைத்து பொருட்களையும் ஒன்றாக்குவதில் ஈடுபட்டனர்.

உறக்கம் கலைந்த ஆசிரியை நிலைமையை புரிந்து கொண்டவராக மெல்ல தனது கைப்பேசியில் அயலவருடன் தொடர்பு கொண்டு விடயத்தைக் கூறினார். விரைந்து அயல் வீடுகளைச் சேர்ந்த ஐவர் உள் புகுந்து அவர்களை கையும் களவுமாக பிடித்து கட்டினர்.

பின்னர் 119 இனூடாக காவல்துறையினருக்கு செய்தி தெரிவிக்கப்பட்டது. விரைந்து வந்த காவல் துறையினர் அவர்களையும் வாகன சாரதியையும் கைது செய்ததுடன், வாகனத்தையும் கையகப்படுத்தினர்.

பின்னர் ஆசிரியையிடம் வாக்குமூலத்தினை பெற்றதுடன் உதவிக்கு வந்தவர்களிடம் நடந்தவற்றை கேட்டு அறிந்து கொண்டனர்.

அக் கள்வர்கள் மூவரும் பெரிய திருட்டுக் கும்பலைச் சேர்ந்தவர்கள் எனவும் அவர்கள் நீண்ட நாள் திருடர்கள் என்பதுவும் விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.



Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org




## கடனும் அடகு வைத்தலும்




ஒருவர் 10,000 ரூபா தேவை என்பதற்காக 30,000 பெறுமதியான நகைகளை அடகு வத்து 10,000 ரூபா பணத்தைக் கடனாகப் பெறுகிறார் என்றால், அதற்கு 10 வீதம் வட்டி அறவிடப்படுகிறது. இதற்காக ஒரு வருட காலம் அவகாசம் வழங்கப்படுகின்றது. ஒரு வருடம் முடிவடையும் நேரத்தில் வட்டி வீதம் இவ்வளவு செலுத்த வேண்டியுள்ளது அதனை செலுத்தி உங்கள் நகைகளை மீட்டிக் கொள்ளங்கள் என்று அறிவித்தல் (நோட்டீஸ்) வரும் குறித்த தவணையில் அந்த வட்டியையும், எடுத்த 10,000 ரூபாவையும் செலுத்தாவிட்டால் 30,000 ரூபா பெறுமதியான நகைகள் பறிமுதல் செய்யப்படுகிறது. கடன் எடுத்தவர் அனைத்தையும் இழந்து ஒட்டாண்டியாகுகிறார். கடன் கொடுத்தவர் எல்லாவற்றையும் பெற்று ஏப்பமிடுகிறார். ஈடு பிடித்தல் என்ற பெயரில் கொள்ளையடிக்கப்படுகின்றது. மனிதாபிமானமற்ற இச்செயலை இஸ்லாம் கண்டிக்கிறது.

வட்டி எந்த வகையிலும் சம்பந்தப் படாத வகையில் அடகு வைப்பதையே இஸ்லாம் அனுமதிக்கிறது. இதனடிப் படையில் நபி (ஸல்) அவர்களும் அடகு வைத்திருக்கிறார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர் கள் ஒரு யூதரிடமிருந்து உணவுப் பொருளை வாங்கினார்கள். (அதற்காக) தமது கவசத்தை அந்த யூதரிடம் அடகு வைத்தார்கள். (அறிவிப்பவர்: ஆயிஷா (ரழி), நூல் புகாரி)

அடகு வைக்கப்படும் பொருள் என்பது அமானிதமாகும். அதனைப் பேணி பாதுகாக்க வேண்டும். மாறாக அதனை பாழ்படுத்தவோ அல்லது வேறொருவரிடம் அடகு வைத்து பயன் பெறவோ கூடாது. அடவைக்கும் பொருளில் நகை மட்டுமன்றி துணிமணி போன்றவைகளையும் பெண்கள் அடகு வைப்பர். அதனை உரிமையாளரின் அனுமதியின்றி பயன்படுத்தக் கூடாது.

தொடரும் .. ..

– இம்தியாஸ் யூஸுப் –

## கத்தோலிக்கம் ஒரு மேலோட்டம்

கடந்தவார தொடர்ச்சி .. ..



கடவுளின் குரல் கேட்கிறது. அதுமுதல் கிறித்துவை நம்பலானார். கத்தோலிக்க கிறித்துவக் கோட்பாடுகள் பலவும் புனித பால் வறையறுத்தார். இவர் அன்றைய கிறித்துவ மக்களுக்கு எழுதிய கடிதங்கள் பைபிளில் அடக்கம்.

கி. பி 50 வாக்கில்தான் நற்செய்திகள் எழுதப்பட்டன என கணிக்கப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட இயேசு இறப்புக்கு 25 அல்லது 30 ஆண்டுகளுக்குப் பின்.

கி.பி 69ல் நீரோவின் உரோமை அரசு கிறித்துவர்களை கொடுமைப் படுத்தி கொல்ல ஆரம்பிக்கிறது. பீட்டர் சிலுவையில் தலைகீழாக அறையப்படுகிறார். புனித லினஸ் பொறுப்பேற்கிறார். Quo Vadis என்கிற ஆங்கிலப் படத்தில் இந்தக் காலத்தை அழகாகச் சொல்லியிருப்பார்கள்.

பயந்து வாழும் கிறித்துவர்கள் தங்களை அடையாளம் கண்டுகொள்ள மீன் குறியீட்டை பயன்படுத்தினர். இன்றும் அமெரிக்க கார்களில் இந்த அடையாளம் பார்க்கலாம்.

அதிகம் கிறீத்தவர்கள் இறக்க, இறக்க கிறிஸ்தவம் அழியாமல் தழைக்கவே செய்தது.

கி.பி 110 ஆன்டியொக்கின் பிஷப் இக்னேஷிய முதன்முறை "கத்தோலிக்க திருச்சபை" எனும் பெயரை பயன்படுத்துகிறார், பெயர் நிலைக்கிறது. வரலாறு பல போராட்டங்களுடன் தொடர்கிறது.

பலமுறை பல அரசர்களால் கிறித்துவர்கள் கொடுமை படுத்தப்பட்டு கொல்லப்படுகிறார்கள். யூத பழக்கங்கள் பல கைவிடப்பட்டன மற்ற மதங்களிலிருந்தும் கலாச்சாரங்களிலிருந்தும் பழக்கங்கள் பெறப்பட்டன. கி.பி150 ல் பைபிள் தொகுப்பாக்கப்-பட்டது. தொடர்ந்து திருச்சபை வளர்ந்தது.

உரோமை பேரரசர் கான்ஸ்டாண்டைன் கிறீத்தவர்களுக்கெதிரான துன்புறுத்தலை நிறுத்தினார், ஒருவகை மத நல்லிணக்கத்தை நிறுவ முயற்சித்தார். நிசியாவில் ஒரு குழு கூடி கடவுள் மகன்(இயேசு) பரிசுத்த ஆவி எனும் மூன்றும் ஒன்றான கடவுள் கொள்கையை உருவாக்கினர். தமத்திரித்துவம் (The Holy Trinity) என இது அழைக்கப்படுகிறது.

தொடரும் .. ..

www.tamiloviam.com

## உரையாடலுக் ஓர் கலையே

ஒரு பொருளைப் பற்றிய தனிமனிதனது கண்ணோட்டம் வேறுபடும். மனிதர்கள் ஒருவருக்கொருவர் உரையாடும்போது அவர்களது உடலியல் உணர்வியல் நிலைகள் ஓரளவுக்கு வெளிப்படுகின்றன. தனது உணர்வுகளை வெளிக்காட்டாது கட்டுப்படுத்துவதே நமது பண்பாடு. ஆகையால் இத்தகைய வெளிப்பாடே போட்டி நிறைந்த தற்போதைய சமூகத்தில் வெற்றி தரும் யுக்தியாக கருதப்படுகிறது.

இன்னொரு கோணத்தில் பார்த்தால் உணர்வுகளின் வெளிப்பாடு ஒருரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ள உதவும். எனவே உரையாடும் இருவரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் தன்னை வெளிப்படுத்த முயற்சிப்பது உணர்வுகளை அழுத்தாது புரிதலுக்கு உதவும். இருப்பினும் இது எல்லாரிடமும் எல்லா இடத்திலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக கருதப்படமாட்டாது.

கவனித்தல் என்பது இதில் முக்கிய பங்காற்றுகின்றது. முதலில் கேட்டு பின்னர் தெரிவிக்கப்பட்டதை புரிந்து கொள்ள எத்தனிக்கின்றோம். இது கவனித்தல் செயற்பாட்டாலே நிகழும். எனவே கேட்போர் தன்மைக்கேற்ப உரையாடுவது அவசியமாகின்றது. பிறர் சொல்வதில் அக்கறை காட்டும் போதே கவனித்துக் கேட்க முடிகின்றது.

ஒருர் பேசத் தொடங்கும் முன்னரே அவரது நடை உடை, பாவனையை வைத்து மதிப்பிடுவோமேயானால் அவரது பேச்சை கவனிக் முடியாது போய்விடும்.

தொடரும் .. ..




என்னாங்க இது! ஒரு வாரமா தினமும் ஒரு கலண்டர் வாங்கிட்டு வர்றீங்களே.... எதுக்கு?

நீ தானே டெய்லி கலெண்டர் வாங்கிட்டு வாங்கன்னு சொன்னே!

உங்களுக்கு ஊசி போடனும்! ஸ்பெஷலா? சாதாவா?

ரெண்டுக்கும் என்ன வித்தியாசம்?

Doctor :- ஸ்பெஷல்னா, ஊசி போட்ட இடத்துல நர்ஸ் தேய்ச்சுவிடுவாங்க!
சாதான்னா, கம்பவுண்டர் தேய்ச்சுவிடுவாரு!





என் மனைவி கடைல புடவை செலக்ட் பண்ண ஒரு நாள் ஆகும்!

இது பரவாயில்லையே, என் மனைவி புடவைக் கடையை செலக்ட் பண்ணவே ஒரு நாள் ஆகும்!!

## குரு பெயர்ச்சி பலன்கள்

**பொன்னவன் என போற்றப்படக்கூடிய குரு பகவான் வாக்கிய சித்தாந்தப்படி வரும் மன்மத வருடம் ஆனி மாதம் 20ம் திகதி (05.07.2015– ஞாயிற்றுக்கிழமை) சிம்ம ராசிக்கு பெயர்ச்சியாகிறார். தொடர்ந்து 02.08.2015 வரை சிம்ம ராசியில் சஞ்சாரம் செய்யவுள்ளார். இக்காலப்பகுதிக்கான பலா பலன்கள் இதோ – – –**



**மேஷம் :** எடுக்கும் காரியங்களை வேகத்தோடும் விவேகத்தோடும் செய்து முடிக்கும் ஆற்றல் கொண்ட மேஷ ராசி நேயர்களே! உங்களுக்கு அஷ்டம சனி நடைபெற்றாலும் குருவின் சாதகமான சஞ்சாரத்தால் நினைத்தது நிறைவேறும். பண வரவுகளுக்கு பஞ்சம் ஏற்படாது. இது வரை தடைப்பட்ட திருமண சுப காரியங்கள் யாவும் தடை விலகி கை கூடும். மணமாகாதவர்களுக்கு மணமாகும். மணமானவர்களுக்கு புத்திர பாக்கியம் அமையும். சிலருக்கு சொந்தமாக வீடு கார் போன்றவற்றை வாங்கும் யோகம் உண்டாகும். பூர்வீக சொத்துக்களாலும் லாபங்கள் அமையும். பொன் பொருள் சேரும். கடன்கள் குறையும். 08.01.2016 முதல் எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிட்டும். கணவன் மனைவியிடையே ஒற்றுமை பலப்படும். உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் செலுத்துவது நல்லது. செய்யும் தொழில் வியாபாரத்தில் நல்ல லாபங்கள் பெருகும். உத்தியோகஸ்தர்கள் எதிர்பார்க்கும் உயர்வுகளை பெறுவார்கள்.



**ரிஷபம் :** அனைவரிடமும் இனிமையாகப் பழகும் சுபாவமும், கம்பீரமான தோற்றமும் கொண்ட நேயர்களே! இச் சஞ்சாரம் சற்று அனுகூலமற்ற அமைப்பு என்பதால் தேவையற்ற அலைச்சல்கள் உண்டாகும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பிருக்கலாம். முன்கோபத்தைக் குறைப்பது நல்லது. உறவுகளால் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தர்கள் தங்களது வேலைகளில் கண்ணும் கருத்துமாக இருப்பது நன்மை தரும். கொடுக்கல் வாங்கல்களில் பெரிய தொகைகளை ஈடுபடுத்துவதைத் தவிர்க்கவும். எதிலும் சோர்வுத்தன்மையும் சுறுசுறுப்புடன் செயற்பட முடியா நிலையும் ஏற்படும். கார்த்திகை மாதத்திற்குப் பின்னர் ஓரளவு நிலைமை நல்ல நிலைக்குத் திரும்பும். மார்கழி மாதமளவில் பண வரவில் இருந்த தடைகள் நீங்கும். அரசு வழியில் எதிர்பார்த்த கடன் உதவி சற்று தாமதமாகும். பண வரவுகளில் ஏற்ற இறக்கம் காணப்பட்டாலும் செலவுகள் ஓர் கட்டுக்குள் காணப்படும்.



**மிதுனம் :** சிரிக்கச் சிரிக்க பேசும் சுபாவமும் சுறுசுறுப்புடன் செயல்படக்கூடிய ஆற்றலும் கொண்ட அன்பர்களே! சற்று மந்தமான பலனே காணப்படுகின்றது. எடுக்கும் முயற்சிகளில் தடை தாமதங்கள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் சிறுசிறு பாதிப்புக்களும் கணவன் மனைவியிடையே சில குழப்பங்களும் வந்து மறையும். திருமண முயற்சிகளில் பல தடைகளுக்குப் பின் கைகூடி வரும்.

பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. மாணவர்கள் வீண் பொழுது போக்குகளை விடுத்து கல்வியில் கவனம் செலுத்தவும். பண வரவுகள் ஏற்ற இறக்கமாகவே காணப்படும். கார்த்திகை நடுப்பகுதிக்குப் பின்னர் ஓரளவு நல்லவை நடக்க வாய்ப்பிருக்கிறது. தேவையற்ற அலைச்சல்கள் ஏற்படலாம்.

வைகாசி மாதமளவில் பணவரவுகள் தேவைக்கேற்றபடி காணப்படும். தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள். எதையும் எதிர்கொண்டு வெற்றி பெறக்கூடிய சாதகமான அமைப்பு உருவாகும். கலைஞர்களே! கிடைக்கும் வாய்ப்புக்களை தவறவிட்டுவிடவேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பீட்சா ம் ம் ம்....

**தேவையான பொருட்கள்**

மைதா - 250 கிராம், ஜீனி - 2 தேகரண்டி, ஈஸ்ட் - ¼ தேகரண்டி (உடன் வெது வெதுப்பான நீரில் கலந்து கொள்ளவும்), வெண்ணெய் - 1 தேகரண்டி, பேக்கிங் பவுடர் - 1 தேகரண்டி, உப்பு - 1 தே.கரண்டி

**பீட்சாவினுள் பரப்புவதற்கு தேவையானவை:**

தக்காளி - 300 கிராம், குடை மிளகாய் - 1, மிளகாய் சாஸ் - 2 தேகரண்டி, பூண்டு - 4 பல், மிளகாய் தூள் - 1 தேகரண்டி, வெள்ளரிக்காய் - 1, பெரிய வெங்காயம் - 1, சிஸ் - 50 கிராம், இஞ்சி - சிறிய துண்டு, உப்பு - தேவையான அளவு

**செய்முறை**



மைதா மாவில் கலந்துவைத்த ஈஸ்ட், பேக்கிங் பவுடர், வெண்ணெய், உப்பு சேர்த்து தேவையான தண்ணீர் விட்டு பிசைந்து கொள்ளவும். பிறகு சற்று விரிவான பாத்திரம் 8 அங்குல விட்டம் 2 அங்குல உயரம் ஒன்றில் நெய் தடவி, பாத்திரம் கொள்ளும் அளவு மாவு அரை செ.மீ கணம் இருக்கும்படி விரித்து வைக்கவும். வெண்ணெய் தடவி மாவை பேக்கிங் அடுப்பில் வைத்து 350 டிகிரியில் முக்கால் பாகம் வேகும் வரை வைத்து எடுக்கவும்.

வெங்காயம், பூண்டு, இஞ்சியை நறுக்கிக் கொள்ளவும். தக்காளிப் பழங்களை சிறு சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். தாச்சியில் ஒரு தேக்கரண்டி நெய்விட்டு வெங்காயம், பூண்டு, இஞ்சி போட்டு வதக்கி, தக்காளித்துண்டுகளை போட்டு வதக்கவும். உப்பு, மிளகாய்தூள் போடவும். சாஸ்மாதிரி கெட்டியானவுடன் இறக்கவும். 2 தக்காளி, வெங்காயம், வெள்ளரிக்காயை வட்டவடிவில் வெட்டி குடை மிளகாயையும் நறுக்கி, சுட்டு வைத்து இருக்கும் முக்கால் பங்கு வெந்த பீட்ஸாவின் உள்ளே வைத்து அடுக்கி, மிளகாய் சாஸ் ஊற்றி சீஸை துருவி மேலே தூவிக்கொள்ளவும். வெண்ணெய் 2 தேகரண்டி மேலே விட்டு மறுபடியும் 10 நிமிடம் 350 டிகிரி சூட்டில் வேகவைத்து எடுக்கவும். இப்பொழுது சுவையான பீட்ஸா ரெடி.

## நெல்லியின் நற்குணங்கள்



உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதில் உணவுப் பொருட்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. அதிலும் காய்கறிகள் மற்றும் பழங்கள் போன்றவை பெரிதும் உதவியாக உள்ளன. அவற்றில் ஒன்று தான் நெல்லிக்காய். பொதுவாக நெல்லிக்காயில் வைட்டமின் சி அளவுக்கு அதிகமாக நிறைந்துள்ளது.

**நெல்லிக்காய் ஜுஸ் குடிப்பதால் கிடைக்கும் நன்மைகள்**



**நீரிழிவு**

நீரிழிவு நோயாளிகள், நெல்லிக்காய் சாற்றில் சிறிது மஞ்சள் தூள் மற்றும் தேன் சேர்த்து கலந்து குடித்தால், நல்லது.

**ஆஸ்துமா**

நெல்லிக்காய் ஜுஸில் சிறிது தேன் கலந்து, தினமும் இரண்டு முறை குடித்து வந்தால், ஆஸ்துமா குணமாகிவிடும்.

**மலச்சிக்கல்**

நெல்லிக்காய் குடலியக்கத்தை சீராக வைக்கும். எனவே இதனை தினமும் குடித்து வந்தால், மலச்சிக்கல் பிரச்சனையை சரிசெய்துவிடலாம்.

**சிறுநீர் எரிச்சல்**

சிலருக்கு சிறுநீர் கழிக்கும் போது எரிச்சல் ஏற்படும். அத்தகையஎரிச்சலைப் போக்குவதற்கு, தினமும் இரண்டு முறை நெல்லிக்காய் ஜுஸ் குடிக்க வேண்டும்.

**உடல் குளிர்ச்சி**

கோடை காலத்தில் உடலானது அதிக வெப்பமாக இருக்கும். எனவே அத்தகைய உடல் வெப்பத்தை தணிப்பதற்கு நெல்லிக்காய் ஜுஸ்

## அழகு குறிப்பு

## அழகுக்கு அழகு சேர்க்கப் போகின்றீர்களா??

**பெண்களுக்கு அழகு என்பது மிகவும் முக்கியமான ஒன்று. இதோ எம் அழகினை மெருகூட்ட சில டிப்ஸ்:**

1. வேப்பிலை, புதினா, சிறிது மருதாணி மற்றும் குப்பைமேனி இலைகளை காயவைத்து, தூளாக்கி வைத்துக் கொள்ளவும்.
இதில் சிறிது எடுத்து, பாலில் குழைத்து, முகத்தில் பூசி, 20 நிமிடம் ஊற வைத்து குளித்தால், முகம் கறுத்துப் போகாமல் இருக்கும்.
2. ஆரஞ்சு பழத்தை இரண்டாக வெட்டி முகத்தில் தேய்த்து, பத்து நிமிடம் கழித்து சோப்பு போட்டு கழுவ வேண்டும். தினம் இவ்வாறு செய்து வந்தால் முகம் பளபளப்பாகவும், இளமையுடனும் இருக்கும்.
3. முகச்சுருக்கத்தை போக்க தேங்காய் எண்ணையில் மஞ்சள் துளை சேர்த்துகுலைத்து உடம்பிற்கு தடவி பின்னர் பயத்தமாவை தேய்த்துக் குளித்தால் தோல் பளபளப்பாகவும், மிருதுவாகவும் இருக்கும்.
4. இரவு படுக்கும் முன், புதினா சாறு இரண்டு தேக்கரண்டி, அரை மூடி எலுமிச்சம்பழம் சாறு ஆகியவற்றுடன் பயத்தம்பருப்பு மாவை கலந்து முகத்தில் தடவிக் கொண்டு பத்து நிமிடம் ஊறிய பிறகு ஐஸ் ஒத்தடம் கொடுக்க முகம் சுத்தமாகும். பருவினால் ஏற்படும் தழும்பும் மறையும்.
5. தோல் நீக்கிய ஆப்பிள் பழத்தை நன்றாக மசித்து, அதனுடன் சிறிது தேன், ஓட்ஸ் பவுடர் ஆகியவற்றை கலந்து, அந்த கலவையை முகத்தில் பூசி சுமார் ½ மணி நேரம் ஊறவிட்டு, முகத்தை கழுவவும். உங்கள் வறண்ட சருமம் காணாமல் போய்விடும்.
6. பால், கடலை மாவு, மஞ்சள், சந்தனம், அனைத்தையும் கலந்து முகத்தில் தடவி குளித்தால் சருமம் அழகாகவும், பளபளப்பாகவும் மாறும்.
7. முகத்தில் உள்ள தேவையற்ற முடிகளை நீக்க அடிக்கடி எலுமிச்சை சாற்றை தடவ வேண்டும். தினமும் இவ்வாறு செய்வதால் முடி வளர்ச்சி குறைந்து முகம் அழகு பெறும்.



## டிசைன்கள்



## குறுக்கெழுத்து புதிர் 063

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ல | | 2 | 17 | 3 கா | 18 | | ■ |
| ல | ■ | ■ | ல | | ர் | 4 | 20 | ரை |
| 5 | 24 | | | லா | | 6 | 21 | |
| 7 | | ய | | | | 19 | | ■ |
| 8 தை | | 25 | 27 | ■ | 9 | | | 22 |
| 10 | | பா | | ■ | ■ | 11 | ம் | |
| | 12 | | | 28 | ■ | | ■ | |
| 13 | | 26 | | | 14 | பு | | 23 |
| 15 | னோ | | | 16 | ல | | | |

**விடையை அனுப்ப வேண்டிய முகவரி :**

முடிவுத்திகதி : 12.06.2015

மலைமுரசு. இல - 159ஐ,
கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான

### இடமிருந்து வலமாக

1. சௌகரியம் - எதிர்ச்சொல்
2. விளையாட்டுகளுள் ஒன்று
3. கணவன், மனைவி குறித்த வரலாற்று காவியம் - திரும்பியுள்ளது.
4. இராசிகளுள் ஒன்று
5. மாலைப்பொழுது
6. இறந்தவர்களுக்காக செய்யப்படுவது
7. கடவுளை நம்பாதவன்
8. பத்துத் தலைகள் கொண்ட இலங்கையன்
9. ஒன்றில் மேல் பணம் இட்டு ஆடுவது
10. பனை ஓலையால் பின்னப்படுவது - திரும்பியுள்ளது
11. 24 மணித்தியாலங்களைக் கொண்டது
12. தவசிகளால் செய்யப்படுது
13. பார்க்க உதவுவது
14. குதிரைக்கு இடப்படுவது
15. உடலில் காணப்படும் இரத்தத்தை கொண்டு செல்வது - திரும்பியுள்ளது.
16. கலகத்தை தோற்றுவிப்பவர்

### மேலிருந்து கீழாக

1. திருமணத்தின் போது இதை மிதித்தே மெட்டி இடுவர்.
4. உறைப்பு சுவையை உடையது
5. குதிரை
6. வேகத்தைக் குறிக்கும் விஞ்ஞான பெயர் - திரும்பியுள்ளது
7. இரு பக்கத்தைக் கொண்ட பெறுமதி மிக்கது
8. சம்பந்தர் அடிக்கடி செல்லும் நாடு
17. கால் துடைக்கப் பயன்படுவது
18. மழை காலம் - திரும்பியுள்ளது
19. இந்து மயானத்தில் இது செய்யப்படும் - குழம்பியுள்ளது
20. வகை
21. குற்றத்திற்காக அறவிடப்படுவது - குழம்பியுள்ளது
22. இவ்வளவு சூட்டிற்குக் காரணமானவர்.

### புதிர் 062 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | சௌ | க | 18 ரி | ய | ம் | 2 க | ப | டி |
| 3 ம் | ன | ய | மா | ரா | இ | ■ | ■ | ■ |
| 4 மி | 17 து | ன | ம் | ■ | 5 அ | ந் | 6 தி | தி |
| ள | டை | ■ | ■ | 7 நா | ஸ் | தி | க | ன் |
| கா | ப் | 8 இ | ரா | வ | ண | ன் | ■ | 22 ப |
| ய் | 9 ப | ந் | 19 த | ய | 10 ம் | க | 21 ட | க |
| ■ | ம் | 11 தி | ன | ம் | ■ | 20 ம் | ம் | ல |
| ■ | ■ | 12 யா | க | ம் | ■ | 13 க | ண் | வ |
| 14 க | டி | வா | 15 ம் | ள | 16 நா | ர | த | ர் |

**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி:**

திரு. சீ. மதியழகன்
அலஸ்தோட்டம், திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாராஜாவின் மறு பிரவேசம் – சந்திக்கப்போகும் சவால்கள்

அரசியல் அலசல்

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் பதவிக்கான வேட்பாளராகப் போட்டியிடுவார் என்பது ஏறக்குறைய உறுதியாகிவிட்டது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் பதவிக்கு போட்டியிடுவார் என்பதை கடந்த திங்கட்கிழமை பி.பி.சி.யின் சிங்கள சேவையான சந்தேசயவுக்கு அளித்திருந்த பேட்டியில், அவரது ஊடக இணைப்பாளர் ரொகான் வெலிவிட்ட உறுதிப்படுத்தியிருக்கிறார். ஜனாதிபதித் தேர்தலில் ஏற்பட்ட தோல்விக்குப் பின்னர், மஹிந்த ராஜபக்ஷ எப்போது தங்காலையிலுள்ள தனது வீட்டில் இருந்தவாறு மக்களைச் சந்திக்கத் தொடங்கினாரோ, அப்போதே அடுத்த கட்ட அரசியல் ஆசையை நிறைவேற்றுவதற்கான பயணத்தை தொடங்கியிருந்தார்.

விகாரைகள் தோறும் அவர் வழிபாடு என்ற பெயரில் மக்களை சந்திக்கத் தொடங்கியதும் அத்தகைய ஒவ்வொரு சந்திப்பிலும் அரசாங்கத்தை விமர்சித்து கருத்துக்களை வெளியிடத் தொடங்கியபோதே, அவரது எதிர்காலத் திட்டம் ஓரளவுக்கு வெளிச்சமாகியுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தோற்கடித்துள்ளனர், இனி நாமாகவே ஒதுங்குவோம் என்றில்லாமல் அவர், தனக்கு ஆதரவான அணியொன்றை வைத்து அரசாங்கத்தை மிரட்டியும் அதனுடன் பேரம் பேச வைத்தும் அவ்வப்போது ஆதரவுக் கூட்டங்களை நடத்தியும் தனது பலத்தை வெளிப்படுத்த முயன்றபோது, மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து அதிகார ஆசை விட்டுப்போகவில்லை என்பது உறுதியாகிவிட்டது. தனக்கு பிரதமர் பதவியைக் கேட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சு நடத்த அவர் எப்போது தயாரானாரோ, அப்போதே அவர் பிரதமர் பதவிக்காக எதையும் செய்யத் தயாராக இருப்பார் என்பதை உறுதிப்படுத்தமுடிந்தது. இப்போது அவரது பேச்சாளரிடமிருந்து வெளிப்பட்டுள்ள அறிவிப்பு, ஆச்சரியமானவொன்றே அல்ல. ஏனென்றால், இது ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டவொன்று. இனிமேல் மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து வெளிவரப்போகும் அறிவிப்பையும் கூட, நாம் ஆச்சரியத்துடன் பார்க்கவேண்டியிருக்காது. அவர் தாம் ஆட்சியில் இல்லாத காலத்தில் நாட்டில் நிலைமைகள் மோசமடைந்துள்ளதை சுட்டிக்காட்டுவார்.

வடக்கில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்பட்டதையும் நீதிமன்றம் தாக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டுவார். இடைநிறுத்தப்பட்ட சீன அபிவிருத்தித்திட்டங்களால் நாட்டின் பொருளாதாரம் முடங்கிப்போயுள்ளதாக கூறுவார். உயர் பாதுகாப்பு வலயக் காணிகள் விடுவிக்கப்பட்டதால், பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளதாக புலம்புவார். இப்படி தற்போதைய அரசாங்கத்தின் நடவடிக்கைகளையெல்லாம் குறை கூறி, இவற்றினால் நாடு பேராபத்தில் சிக்கியிருப்பதாக கூறப் போகிறார். கடைசியாக, இந்த ஆபத்திலிருந்து நாட்டைப் பாதுகாக்க மீண்டும் அரசியலுக்கு வாருங்கள் என்று மக்களும் மகாசங்கத்தினரும் தன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டதன் பேரிலே, பிரதமர் வேட்பாளராக போட்டியிடத் தீர்மானித்துள்ளதாக கூறுவார். அதாவது தான் பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடாது போனால் நாடே அழிந்துவிடும் என்பதுபோல, அவரது எதிர்கால அறிக்கை ஒன்றையோ பேட்டி ஒன்றையோ நாம் விரைவாக எதிர்பார்க்கலாம். இதுவே, அவரது இரண்டாவது அரசியல் பிரவேசத்துக்காக நடத்தப்படும் நாடகத்தின் நிறைவுக் காட்சியாக இருக்கும். பொதுவாக நாடகங்களில் இத்தகைய இறுதிக் காட்சிகள் எப்போதுமே, பரபரப்பான-தாகவும் எதிர்பாராத திருப்பங்களைக் கொண்டதாகவும் இருக்கும். ஆனால், மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவிக்கான வேட்பாளராக களமிறங்குவதற்கு ஆரம்பித்த நாடகத்தின் இறுதிக்காட்சி அத்தகைய திருப்பங்களை நிறைந்த ஒன்றாகவோ, பரபரப்பானதாகவோ இருக்காது. ஏனென்றால், அது கடைசியில் முன்னைய மகாராஜாவின் வருகையுடன் நிறைவுபெறப் போகிறது. இந்த நாடகத்தின் இரண்டாம் பாகமே சுவையானதாகவும் பரபரப்பு மற்றும் கேள்விகள் நிறைந்ததாகவும் இருக்கப் போகிறது. ஏனென்றால் அதுவே மஹிந்த ராஜபக்ஷவுக்கு பிரதமர் பதவியைப் பெற்றுக்கொடுக்குமா, இல்லையா என்ற உச்சக்கட்ட காட்சியாக முன் எதிர்வுகூற முடியாத ஒன்றாக இருக்கும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவின் தோல்வி என்பது முன் எதிர்வுகூறத்தக்க ஒன்றாக இருந்திருக்கவில்லை என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர்.

ஏனென்றால், அந்தப் போட்டி அந்தளவுக்கு சிக்கலானதாக, கடுமையானதாக, கணிப்புகளுக்கு அப்பாற்பட்ட ஒன்றாகவே இருந்தது. ஆனால், வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவிக்காக, அதனை அடைவதற்காக வகுக்கவுள்ள அரசியல் தந்திரோபாயத் திட்டங்களே, அவருக்கு ஆறுதல் பரிசாக பிரதமர் பதவியையாவது பெற்றுக் கொடுக்குமா என்பதை தீர்மானிக்கும். மஹிந்த ராஜபக்ஷவைப் பொறுத்த வரையில் அவருக்கு அதிகாரத்திலிருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார். மிக உயர்ந்த அதிகாரத்தில் அவர் இருந்திருந்தாலும், இனிமேல் அந்தப் பதவியை அவரால் பிடிக்க முடியாது. அதற்கான சட்டங்கள் எற்கெனவே வகுக்கப்பட்டுள்ளன. எனவே, இனிமேல் பிரதமர் பதவியையாவது பிடிப்போம் என்பதே அவரது இலக்காக இருக்கிறது. உயர் பதவியிலிருந்து விட்டு, அதற்குக் குறைவான பதவியில் அமர்வதைப் பற்றியெல்லாம் அவர் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அதையெல்லாம் பார்த்தால், அதிகாரம் கையை விட்டுப் போய்விடும், தாம் செல்லாக்காசாகி விடுவோம் என்பது அவருக்குத் தெரியும். மீண்டும் அதிகாரத்துக்கு வரவேண்டும் என்பதற்காக அவர் எதையும் செய்யத் தயாராகவிருக்கிறார். எந்த கௌரவத்தை விட்டுக்கொடுக்கவும் தயாராகவிருக்கிறார்.

பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்பாக எழுந்துநிற்க தயாராகவிருக்கிறாரா என்று அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி கேள்வியெழுப்பியிருந்தார். மஹிந்த ராஜபக்சவைப் பொறுத்த வரையில் அத்தகைய கௌரவப் பிரச்சினைகள் ஏதும் இல்லாததாலேயே, அவரால் முன்னைய நிலையிலிருந்து கீழிறங்கி பிரதமர் பதவிக்கு குறி வைக்க முடிந்திருக்கிறது. 2004இல் தன்னைப் பிரதமர் வேட்பாளராக நிறுத்தவேண்டுமென்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் எவ்வாறு பேரம் பேசினாரோ, அதுபோலவே இப்போது தன்னைப் பிரதமர் பதவிக்கான வேட்பாளராக நிறுத்தவேண்டுமென்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் சென்றிருக்கிறார் அவர்.

சந்திரிகாவிடம் அவர் மிரட்டும் தொனியில் பேரம் பேசினார். அப்போது சந்திரிகாவும் வேறுவழியின்றி ஒத்துக்கொள்ள நேரிட்டது. ஆனால், இப்போது அவரால் அவ்வாறு மைத்திரிபால சிறிசேனவிடம் பேரம் பேச முடியவில்லை. இதனையொரு வகையில் கெஞ்சுதல் என்றே கூறவேண்டும். மக்களால் தோற்கடிக்கப்பட்ட அவரை பிரதமர் வேட்பாளராக நிறுத்தமுடியாது என்று முகத்தில் அடித்தால் போல மைத்திரிபால சிறிசேனவால் இப்போது கூறமுடிந்திருக்கிறது. இத்தகைய கட்டத்திலேயே மஹிந்த எவ்வாறு தனது பிரதமர் கனவை நிறைவேற்றப் போகிறார் என்ற கேள்வி எழுந்திருக்கிறது. ஏனென்றால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மூலம் பிரதமர் கனவை நிறைவேற்றுவதே, இருக்கும் வழிகளிலேயே இலகுவானதும் சாத்தியமானதுமாகும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதமர் வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷ நிறுத்தப்பட்டால், ஐ.தே.க. வுக்கு அது ஒரு மிகப்பெரிய சவாலாக மீண்டும் எதிர்க்கட்சி வரிசைக்கு தள்ளிவிடக்கூடிய ஆபத்தை விளைவிக்கும் என்பதில் ஐயமில்லை. ஏனென்றால், மஹிந்த ராஜபக்ஷவுக்கு உள்ள பெரும்பான்மையின மக்களின் ஆதரவும் சுதந்திரக் கட்சியின் பரம்பரை வாக்கு வங்கியும் கூட்டணிக் கட்சிகளின் பலமும் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை மீண்டும் அதிகாரத்துக்கு கொண்டுவரக்கூடிய சாத்தியங்கள் அதிகமாகவே கொண்டுள்ளன. எனவே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் காலில் விழுந்தாவது சுதந்திரக் கட்சியின் பிரதமர் வேட்பாளராகி விடவேண்டும் என்று பார்க்கிறார்.

ஆனால், சனாதிபதி மைத்தரிபால சிறிசேனவோ, மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக நிறுத்தமுடியாது என்பதில் உறுதியாக இருக்கிறார். இந்தக்கட்டத்தில், மஹிந்த ராஜபக்ஷவின் அடுத்த கட்ட அரசியல் திட்டம் எவ்வாறு முன்னகர்த்தப்படும் என்பது கேள்விக் குறியாக உள்ளது. எவ்வாறாயினும், மஹிந்த ராஜபக்ஷவுக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இடமளிக்காது போனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உடையப்போவது மட்டும் உறுதி. ஏனென்றால், மஹிந்த ராஜபக்ஷ தனது பிரதமர் கனவைக் கைவிடவும் தயாரில்லை. அதுபோல அவரை எப்படியாவது பிரதமர் பதவிக்கு முன்னிறுத்தி தம்மைக் காப்பாற்றிக்கொள்ள எத்தனிப்பவர்களும் அந்த முயற்சியைக் கைவிடத் தயாராக இல்லை.

மஹிந்த ராஜபக்ஷ மட்டுமன்றி, மஹிந்த ராஜபக்ஷவை முதலீடாக வைத்து அரசியல் நடத்துபவர்களுக்கும் இது முக்கியமான கட்டம். அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் மஹிந்த ராஜபக்ஷக்கு பிரதமர் வேட்பாளராகப் போட்டியிட இடமளிக்காதுபோனால், இவர்கள் தனியாகப் போட்டியிடப் போவது உறுதி. அதைவிட, இன்னொரு சாத்தியப்பாடும் உள்ளது. அது என்னவென்றால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலரான சுசில் பிரேம ஜயந்தவோ, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளராக இருக்கும் அநுர பிரியதர்சன யாப்பாவோ மஹிந்த ராஜபக்ஷவின் பக்கம் சாய்ந்துவிடாமலும் இருக்கவேண்டும்.

இறுதிக்கட்டத்தில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இடமளித்து, சுசில் பிரேமஜயந்த கையெழுத்திட்டுவிட்டால், சனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதுவும் செய்துவிட முடியாது. ஏனென்றால், தேர்தல் ஆணையாளரிடம் கையளிக்கப்-படும் வேட்பாளர் பட்டியலில் கட்சியின் செயலாளர் தான் ஒப்பமிட வேண்டும்.



மஹிந்த ராஜபக்ஷவை உள்ளடக்கிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் பட்டியலில் சுசில் பிரேம ஜயந்த கையெழுத்திடுவார் என்று அண்மையில் வாசுதேவ நாணயக்கார கூறியிருந்தார். அவ்வாறானதொரு தருணத்தில் சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆதரவாளர்கள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சின்னத்தில் போட்டியிடக்கூடும். அதற்கு அநுர பிரியதர்சன யாப்பாவின் கையெழுத்து தேவைப்படும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேன எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராக போட்டியிடப் போவதாக அறிவித்ததும் உடனடியாக அவரை நீக்கிவிட்டு, அநுர பிரியதர்சன யாப்பாவை அந்தப் பதவிக்கு நியமித்திருந்தார் மஹிந்த ராஜபக்ஷ. தனக்கு விசுவாசமானவர் என்பதாலேயே, அவருக்கு அந்த நியமனம் வழங்கப்பட்டது. மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியான பின்னர், மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளரே என்பதை தெரிந்திருந்தும் அநுர பிரியதர்சன யாப்பாவை கட்சியின் செயலாளர் பதவியிலிருந்து தூக்காமல் விட்டுவைத்திருக்கிறார். இந்த நிலையில் அவர், சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நம்பிக்கையை காப்பாற்றுவாரா- மஹிந்த ராஜபக்ஷவின் நம்பிக்கையைக் காப்பாற்றுவாரா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். இந்தக் கட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி செயலாளர்கள் மஹிந்த ராஜபக்ஷவின் பக்கம் சென்றாலும் கூட, மைத்திரிபால சிறிசேனவின் விசுவாசிகள் தனித்துப் போட்டியிடப் போவது உறுதி.

அவ்வாறான நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உடைந்துவிடும். அதைவிட, மஹிந்த ராஜபக்ஷவுக்கு இடமளிக்கப்படாமல், அவராகவே வேறு ஒரு கட்சியில் போட்டியிட முடிவு செய்தாலும், சுதந்திரக் கட்சியில் உள்ள கணிசமானவர்கள் அவருக்குப் பின்னால் செல்லத் தயாராக இருக்கிறார்கள். எனவே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் அப்போதும் பிளவு ஏற்படுவது உறுதி. எனவே, மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தும் எந்த முயற்சியாக இருந்தாலும், அது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உடைவுக்கே வழி வகுக்கப்போகிறது. இது மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தெரியும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் தெரியும். சந்திரிகா குமாரதுங்கவுக்கும் தெரியும். ஆனாலும், இவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் சிந்திக்கின்றனர். சுயநலன், கட்சிநலன், நாட்டு நலன் என்று இவர்களின் பார்வை மாறுபாடாக உள்ளது. இதில் எந்த நலன் வெல்லப் போகிறது என்பது மஹிந்த ராஜபக்ஷவின் மறு அரசியல் பிரவேசத்தின் இறுதி விளைவிலிருந்து தெரிந்துகொள்ள முடியும்.

– –கே.சஞ்சயன்– –

- www.tamilmirror.com -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. ஒரு கம்பனியின் ஒவ்வொன்றும் ரூபா 10 ஆன பங்குகளை கொள்வனவு செய்வதற்கு ஒருவர் ரூபா 9000 த்தை முதலீடு செய்தார். இப்பங்குகளின் பெயர்மாத்திரையான பெறுமானம் ரூபா 6000 எனின், அவர் ஒரு பங்கை எப்பெறுமானத்திற்கு கொள்வனவு செய்தார்?

02. ஒரு தொட்டியில் 2/3 இனை நிரப்புவதற்கு ஒரு நீர்பம்பி 24 நிமிடம் எடுத்தால், தொட்டியின் அரைவாசியினை நிரப்புவதற்கு பம்பி எடுக்கும் நேரம் எத்தனை நிமிடம்?

03. 1 : 50000 எனும் அளவிடைக்கேற்ப ஒரு தேசப்படம் வரையப்பட்டுள்ளது.

1. சேப்படத்தில் 1செமீ இனால் காட்டப்படும் உண்மைத் தூரம் எத்தனை மீற்றர்?
2. 250மீ எனும் உண்மைத் தூரம் தேசப்படத்தில் எவ்வளவு நீளத்தினால் காட்டப்படுகின்றது?

04. $x - 3 = 5$ எனின், x இன் பெறுமானத்தைக் காண்க.

**பகுதி 02**

01. ஒரு பாடசாலையில் இருக்கும் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும் ஆண் பிள்ளைகளின் எண்ணிக்கைக்கும் இடையேயான விகிதம் 4. : 5 ஆக இருந்தது.
1. பாடசாலையில் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை 800 எனின், பாடசாலையில் இருக்கும் மொத்த பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

2. சில மாதங்களுக்குப் பின்னர் பாடசாலையில் இருக்கும் பிள்ளைகளுக்கு மேலதிகமாக ஒரு குறித்த எண்ணிக்கையில் பெண் பிள்ளைகள் மாத்திரம் சேர்க்கப்பட்டனர். அதன் விளைவாக பெண் எண்ணிக்கைக்கும் ஆண் எண்ணிக்கைக்கும் இடையிலுள்ள விகிதம் 6 : 5 ஆக மாறியது. பாடசாலையில் மேலதிகமாக சேர்ந்த பெண் பிள்ளைகளின் எண்ணிக்கையைக் காண்க.

## பாடம் : வரலாறு

1. பணத்தை முதலீடு செய்யும் முதலாளித்துவ வகுப்பு எனவும் உழைப்பை விற்கும் தொழிலாளர் வகுப்பு எனவும் இரு வகுப்புக்கள் எதன் விளைவாக உருவாகின?
   1. கைத்தொழில் புரட்சியின் விளைவாக
   2. குடியேற்ற முறைமையின் விளைவாக
   3. மறுமலர்ச்சியின் விளைவாக 4. மானிய முறைமையின் விளைவாக

2. கி.பி 6 ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவில் உருவாகிய பதினாறு குடியிருப்புக்களில் குடியரசுகளாக அல்லது கண இராச்சியங்களாகக் கருதப்பட்ட இரு இராச்சியங்கள்
   1. மகத, கோசல ஆகியன 2. அவந்தி, வத்ச ஆகியன
   3. வஜ்ஜி, மல்ல ஆகியன 4. குரு, பாஞ்சாலம் ஆகியன

3. ஆட்கொணர்கை எழுத்தாணியை வழங்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கும் நீதிமன்றம் யாது?
   1. மேல் நீதிமன்றம் 2. உயர் நீதிமன்றம்
   3. மேன்முறையீட்டு நீதிமன்றம் 4. மாவட்ட நீதிமன்றம்

4. இலங்கையின் பல்வேறு இனங்களைச் சேர்ந்த மக்கள் நாட்டின் நலனிற்காக இன, சமய பேதமின்றிச் செயல்பட்ட விதம் பின்வரும் எவ்வியக்கத்தின் மூலம் நன்றாக எடுத்துக் காட்டப்படுகின்றது?
   1. மித நுகர்வு இயக்கம் 2. தேசிய இயக்கம்
   3. தொழிலாளர் இயக்கம் 4. தோட்டப்பயிர்செய்கை இயக்கம்

5. இலங்கையின் வடக்குப் பிரதேசத்தில் மிக ஒழுங்கமைந்த மிசனரிக் கல்வி முறை பின்வரும் எம்மிசனரிக் கம்பனியினால் உருவாக்கப்பட்டது?
   1. லண்டன் மிசன் 2. வெஸ்லியன் - மெதடிஸ்த மிசன்
   3. அமெரிக்கன் மிசன் 4. பப்ரிஸ்ற் மிசன்

6. இலம்பகர்ண வமிசத்தின் தொடக்க ஆட்சியாளர் பின்வருவோரில் எவராவார்?
   1. வசபஅரசர் 2. மகாசேனமன்னன் 3. வலகம்பாஅரசர் 4. மித்சேனஅரசர்

## பாடம் : விஞ்ஞானம்

01. தாவரங்களினால் தொடுக்கப்பட்ட உணவு பின்வரும் எக்கட்டமைப்பினால் கொண்டு செல்லப்படுகின்றன?
   1. காழ் 2. உரியம் 3. மையவிழையம்
   4. லேிக்காற்புடைக் கலவிழையம்

02. $NaHCO_3$, $Ca(OH)_2$, $NH_3$ எனும் மூன்று சேர்கைளுக்கும் பொதுவான இயல்பு யாது?
   1. திண்ம நிலையில் இருத்தல்
   2. மூலமாக இருத்தல் 3. அயன் சேர்வைகளாக இருத்தல்
   4. பங்கீட்டு வலுச்சேர்வைகளாக இருத்தல்

03. பங்கசு இனமும் அல்கா இனமும் ஒன்று சேர்ந்து இலைக்கனை உண்டாக்குகின்றன. இலைக்கனில் அவிரு அங்கி இனங்களுக்கும் இடையே உள்ள தொடர்புக்கு வழங்கும் பெயர்?
   1. ஒன்றிய வாழ்வு 2. ஒட்டுண்ணியியல்பு
   3. ஓரட்டிலிலுண்ணல் 4. இரைகொன்னுண்ணல்

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

### தமிழ் இலக்கணம் எழுத்தியல்

**மகரக் குறுக்கம்**

மகரம் தனக்குரிய அரை மாத்திரையிலிருந்து குறுகி ஒலிப்பது மகரக் குறுக்கம் ஆகும். இதற்குரிய மாத்திரையளவு ¼ ஆகும்.

எடுத்துக்காட்டு - போன்ம்
மருண்ம்
தரும்வளவன்.

- தற்காலத்தில் மகரக் குறுக்கம் வழக்கில் இல்லை .

**ஆய்தக் குறுக்கம்**

ஆய்தம் தனக்குரிய மாத்திரையிலிருந்து ½ இலிருந்து குறுகி ஒலிப்பது ஆய்தக் குறுக்கமாகும். இதற்குரிய மாத்திரை ¼ ஆகும். சொற்புணர்ச்சியின் போது லகர, ளகர ஈற்றுச் சொற்களின் முன் தகரம் வரின் லகர, ளகர ஈறுகள் ஆய்தமாக திரிந்து குறுகி ஒலிக்கும்.

கல் + தீது = க.்.றீது.
முள் + தீது = மு.்.டீது
அல் + திணை = அ.்.றிணை

தற்காலத் தமிழில் லகர ளகர ஈறுகள் தகரத்தின் முன் வரும் போது ஆய்தமாகத் திரிவதில்லை.

எடுத்துக்காட்டு - பல்+துறை = பல்துறை



**தமிழ் இலக்கியத் தொகுப்பு**
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## Grammar

Ex 01: ***Underline the most suitable word in the brackets.***

It is a well known fact that an advertisement must be (1) ...................... (attractive / attract / attraction ). It must get the (2) ...................... \9attend / attention / attendant) of the reader or the viewer.

The language of an advertisement must be clear and (3) ...................... (easily / easiness / easy) understood.

The reader or the viewer must be able to (4) ...................... (response / respondent / respond) to the advertisement.

So (5) .............. (beauty / beautiful / beautify ) words are a must in an advertisement.

An advertisement which doesn't persuade people to buy a product is a (6) ........................... (fail / failing / failure).

***You have purchased a book at a recent book fair in your town. When you started reading the book you realized that 20 pages were missing. You have paid Rs. 400 for the book and now you are disappointed.***

*Write a letter to the publisher of the book. H.A. Publishers, 2nd lane, Colombo. Use about 100 words*

04.
- ஹெக்சேன், ஹெப்ரேன் எனும் தூய திரவங்கள் ஒன்றோடொன்று கலந்து ஏகவினத்திரவக் கலவையை உண்டாக்குகின்றன.
- ஹெக்சேனில் அயடீன் நன்றாக கரைகின்றது

மேற்குறித்த தகவல்களுக்கு ஏற்ப ஹெக்ரோனில் அயடீன்
   1. நன்றாக கரைய வேண்டும் 2. சிறிதளவில் கரையவேண்டும்
   3. கரையாமல் இருக்க வேண்டும் 4. படிவு வீழ்த்தப்பட வேண்டும்

05. உயர்வெப்பநிலைகளுக்கும் அமுக்கங்களுக்கும் உட்படுவதனாலும் நில நடுக்கம் காரணமாகவும் பாறைகள் மாற்றங்களுக்கு ஆளாகின்றன. இதன் விளைவாக எப்பாறை கை உருவாகின்றது?
   1. தீப்பாறை 2. அடையற்பாறை 3. உருமாறிய பாறை
   4. கருங்கல்

06. மனிதச் செயற்பாடுகள் காரணமாக இயற்கைச் சூழலின் சமநிலை விரைவாக மாறிப் பாதக விளைவாக வளிமண்டல ஓசோன் படையில் துவாரம் ஏற்பட்டிருப்பதைக் குறிப்பிடலாம். இதனால் மனிதனில் நேரடியாக ஏற்படும் பாதக விளைவு எது?
   1. பூகோளம் வெப்பமாதல் 2. கடல்நீர் மட்டம் உயர்தல்
   3. சுவாச நோய்களுக்கு ஆளாதல்
   4. தோல் புற்றுநோய்க்கு ஆளாதல்

07. யூரியா $CO(NH_2)_2$ மூலக்கூறு ஒன்றில் உள்ள காபன், ஒட்சிசன் நைதரசன், ஐதரசன் அணுக்களின் எண்ணிக்கைகள் முறையே,
   1. 1, 1, 1, 2 ஆகும் 2. 2, 2, 2, 4 ஆகும் 3. 1 1, 2, 4 ஆகும்
   4. 1, 1 2, 2 ஆகும்

08. இலங்கையில் டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதற்குப் பற்றீரியா இனம் ஒன்றைப் பயன்படுத்தல் பற்றி அண்மையில் சுகாதார அலுவலர்களின் கவனம் ஈர்க்கப்பட்டிருந்தது. இக்கட்டுப்பாட்டு முறைக்கு உதாரணம்?
   1. இரசாயனக் கட்டுப்பாடு 2. உயிரியல் கட்டுப்பாடு
   3. பௌதீகக் கட்டுப்பாடு 4. படுகொலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 23

01. பின்வரும் தாவர இலைகளில் அளவில் பெரியது
i. வல்லாரை ii. பசளி iii. சேம்பு iv. தோடை

02. பின்வரும் சமயத்தலங்களில் பொலன்நறுவையில் காணப்படும்
I. சீகிரியா ii. கல்விகாரை iii. அம்பக்கை
iv. ருவன்வெளிசாய

03. அகத்தி இலையின் வடிவத்தை ஒத்த வடிவமுள்ள இலைகள் இருக்கும் தாவரம்?
i. வல்லாரை ii. பொன்னாங்கண்ணி
iii. தொட்டாற் சுருங்கி iv. வாகை

04. தானிய வகைகளில் அதிகமாக காணப்படும் போசணைச்சத்து
I. மாச்சத்து ii. விற்றமின் iii. கனியுப்பு
iv. புரதம்

05. சுதந்திரம் கிடைத்த பின்னர் இலங்கை எத்தனையாம் ஆண்டு குடியரசானது
i. 1948 ii. 1815 iii. 1972 iv. 1796

06. பழப்புளியைப் பயன்படுத்தி துப்பரவு செய்யக்கூடிய பாத்திரம்
i. அலுமியப்பாத்திரம் ii. பித்தளைப்பாத்திரம்
iii. களிமண் பாத்திரம் iv. இரும்புப்பாத்திரம்

07. கொழுப்பு, யாழ்ப்பாணநகரங்களை இணைக்கும் வீதி
i. A1 ii. A9 iii. A3 iv. A6

08. தேசப்படங்களில் புகையிரத வீதிகளைக்குறிக்கும் நிறம்
i. சிவப்பு ii. மஞ்சள் iii. பச்சை iv. நீலம்

09. இலங்கைக்கே உரிய தாவரம்
i. வேம்பு ii. வாகை iii. எண்ணை iv. பலா

10. மரப்பொந்தினுள் முட்டை இட்டு தனது இனத்தை பெருக்கும் பிராணி
i. கிளி ii. மயில் iii. கொக்கு iv. கழுகு

11. விவசாயிகளுக்கு உதவாத பிராணி
i. மண்புழு ii. நெல்சு iii. தேனீ iv. ஆந்தை

12. நடுவதற்கு உகந்த விதத்தில் இருக்க வேண்டிய ஓர் இயல்பாக இருக்க முடியாதது?
i. உள்ளீடு நிரம்பி இருத்தல் ii. முதிராத வித்தாக இருத்தல்
iii. காயங்கள் இல்லாதிருத்தல்
iv. நன்கு முதிர்ச்சியடைந்திருத்தல்

**பகுதி – 02**

01. தொடர் வாக்கியத்தை தனிவாக்கியங்களாக மாற்றி எழுது
i. ஆசிரியர் வகுப்பறைக்கு வந்து பாடம் கற்பித்தார்
..............................................................................
ii. கடும் காற்று வீச மழை பொழிந்தது
..............................................................................

02. பழமொழிகளின் கருத்தினை எழுதுக
i. கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா?
..............................................................................
ii. காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்
..............................................................................

03. தொடர்மொழிக்குரிய தனிச்சொல்லை எழுதுக.
I. நீரால் சூழப்பட்ட பெரிய நிலப்பரப்பு
..............................................................................
ii. வீண் செலவு செய்பவன்
..............................................................................



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

# சிறுவர் முரசு






## குட்டிக்கதை
## சேவலும் இரத்தினக் கல்லும்


அது ஒரு அழகிய பனிக்காலம். சேவல் ஒன்று வழக்கம் போல் காலையில் எழுந்து அதற்கான உணவைத்தேட தன் நண்பர்களுடன் கிளம்பியது. அந்த சேவல் தொலைவில் ஒரு குப்பைக் கிடங்கை கண்டது.

அந்த குப்பைக் கிடங்கில் ஏதாவது உணவு கிடைக்குமா என்ற எண்ணத்துடன் கிளற ஆரம்பித்தது. அப்போது அந்த சேவலுக்கு விலை மதிப்பில்லாத இரத்தினக்கல் ஒன்று கிடைத்தது.

அந்தக் கல்லை சேவல் திருப்பித் திருப்பிப் போட்டது. அதைக் கண்ட மற்றொரு சேவல் வருத்தமுடன் இந்த கல் நமக்கு கிடைத்து என்ன பயன்? ஒரு இரத்தின வியாபாரியின் கையில் இது கிடைத்திருந்தால் அவனுக்கு இதன் மதிப்பு தெரியும். நமக்கோ இந்த கல்லை விட சிறிது தானியம் கிடைத்திருந்தால் அதுவே விலை மதிப்பில்லாத பொருளாக இருந்திருக்கும். இந்த கல் நமக்கு உதவாது எனக் கூறியது.



- xUtUf;Fg; gad;gLk; nghUNs mtUf;F rpwe;jjhFk;



ம.பூஜா, தரம் - 09



ஸ்ரீராமவரன்.ஸ்ரீ, தரம் - 06.



பென்சில் வரைபு – வீ.மதுரன்

## விடுகதைகளும் விடைகளும்

**விடைகள்**
1. நாக்கு
2. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு
3. அடுப்பு
4. ஆட்டோ
5. தேங்காய்

ம.டிலான்
தரம் - 09,
புனித சூசையப்பர் கல்லூரி

**சிந்திக்க ...**
அறிவுரை தேவைப்படும் போது தான் ஆணவம் கண்ணை மறைக்கும்!

1. மூன்றெழுத்துக்காரனுக்கு முப்பத்திரெண்டு எதிரிகள். அது என்ன?

2. மூன்று நிறக் கிளிகளாம், அவை கூண்டில் போனால் ஒரே நிறமாம். அது என்ன?

3. மூன்று கால் யானை தின்பதெல்லாம் கரும்பு அது என்ன?

4. மூன்று காலால் ஓடும். முன்னால் ஒரு கண் இருக்கும். தாண்டிக் குதித்து ஓடும். தடதடவென சத்தமிடும். அது என்ன?

5. மூன்று கண் இருக்கும். சிவனும் இல்லை. குடுமி இருக்கும் பெண்ணும் இல்லை. தண்ணீர் இருக்கும் கிணறும் இல்லை. அது என்ன?

## பிறந்தநாள் கொண்டாட்டம்




என்னுடைய பெயர் சாரண்யா. 01.06.2015 அன்று என்னுடைய பிறந்ததினம். எனது பிறந்த-தினத்தை எனது பெற்றோர் வெகு விமரிசையாக வீட்டில் கொண்டாடினார்கள். எனது மாமா, மாமி, சிற்றப்பா என அனைவரும் வந்திருந்தனர். எனக்கு அவர்கள் நிறைய பரிசில்கள் தந்தார்கள்.

நானும், அம்மாவும், அப்பாவும் சேர்ந்து நின்று எனது பிறந்ததின கேக்கை வெட்டி-னோம். இது எனது ஆறாவது பிறந்ததினம். இக் கொண்டாட்டத்திற்கு எனது நண்பர்களும் வந்திருந்தனர். நான் மிகவும் சந்தோசமாக எனது பிறந்ததினத்தை கொண்டாடினேன்.

## பொது அறிவு – 25

இப்பொது அறிவு வினா விடை ஓர் போட்டியை நோக்காகக் கொண்டு தரப்படுகின்றது. போட்டிப் பரீட்சை தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

01. 2014 இல் அதிக பத்திரிகை வாங்கும் நாடுகள் எவை? ஜப்பான், அமெரிக்கா

02. இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு எச்சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது?
1987ம் ஆண்டு 36ம் இலக்க பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டம்

03. உலகின் முதல் சுற்றுச் சூழல் நட்பான சுரங்கப் பாதை எங்குள்ளது?
பிரான்சின் லியான் நகரில்

04. அறிவைத் தேடுவோருக்கு அற்புத வாய்ப்பாக உள்ள இணையக்கலைக் களஞ்சியம் எது?
விக்கிபீடியா

05. ஒரு வணிகத்தின் வெற்றிக்காக முகாமையாளர் பின்பற்றும் தத்துவம் யாது?
சிக்கனத்துவம் (புச்சியவிரயம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றாடல் தின கண்காட்சி

கழிவுப்பொருட்களைக் கொண்டு மாணவர்களினால் தயாரிக்கப்பட்ட பொருட்களின் கைவினைத்திறன் கண்காட்சி, மட்டக்களப்பு, வின்சன்ட் மகளிர் உயர் தேசிய பாடசாலை மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு, "ஏழு பில்லியன் கனவுகள், ஒரே உலகம் மற்றும் அவதானமாக நுகர்வோம்" எனும் தொனிப்பொருளில் இக்கண்காட்சி கல்லூரியின் அதிபர் ஆர்.கனகசிங்கம் தலைமையில் நடைபெற்றது. யுனொப்ஸ் மற்றும் மட்டக்களப்பு மாநகரசபை என்பன இணைந்து இப்பொருட்காட்சியை ஏற்பாடு செய்திருந்தன. மீள் சுழற்சிக்குரிய பிளாஸ்டிக், கண்ணாடிப் போத்தல்கள், உக்கக்கூடிய பொருட்கள், சிரட்டை மற்றும் ரெஜிபோம் என்வற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பொருட்கள் இதன்போது காட்சிக்கு வைக்கப்பட்டன. யுனொப்ஸ் திட்ட முகாமையாளர் எம்.உஸ். சிம்ஒன்டா, ஐ.எப்சி சிரேஷ்ட இயக்க உத்தியோகஸ்தர் கிறேம் ஹாரிஸ், மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் எம். உதயகுமார் ஆகியோர் கலந்துகொண்டு பொருட்களைப் பார்வையிட்டனர்.







## பொங்கல் உற்சவம்

பாலம்போட்டாறில் அமைந்துள்ள அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் கடந்த திங்கட் கிழமை நடைபெற்றது. அடியார்கள் பல்வேறு வகையான காவடிகள், மற்றும் கற்பூரச் சட்டி எடுத்து தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர். அத்துடன் அக்கோவிலின் விசேட நிகழ்வாக தூக்குக் காவடி எடுக்கும் நிகழ்வும் கூட இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் பூ மிதித்தலும் இடம்பெற்றது. அங்கு இடம்பெற்ற பூசை மற்றும் ஆராதனைகளில் பல பக்தர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





## சான்றிதழ் வழங்கும் வைபவம்

தம்பலகாமம் (முள்ளிப்பொத்தானை) பிரதேச சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கிங் உயர் கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட கீழ் காணும் ஒரு வருட பாடநெறி பூர்த்தி செய்த மாணவ மாணவிகளுக்கு தலைவர் எஸ்.எம்.சபாகிர் தலைமையில் சுமார் 70 மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபத்தில் பிரதம விருந்தினராக கிண்ணியா கோட்டக் கல்வி அதிகாரி ஏ.நசுவர்காண் அவர்களும் கௌரவ விருந்தினராக தம்பலகாமம் பிரதேச சபை செயலாளர் தே.ஜெய விஷ்னு அவர்களும் பங்கேற்றனர்.

டிப்லோமா ஜடி ஸ்போகின் இங்கிலிஸ் கொம்பியுடர் பாட நெறி முடித்தவர்களுக்கான சான்றிதழ்கள் பிரதம விருந்தினராலும் கௌரவ விருந்தினராலும் வழங்கப்பட்டன.





## நாடகப் போட்டி – இரண்டாம் இடம்

கொழும்பு றோயல் கல்லூரியினால் நடத்தப்பட்ட திருகோணமலை மாவட்டத்தில் சிறுவர் நாடகப் போட்டியில் தி/ஸ்ரீவாணி வித்தியாலயம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. இந்நாடகத்தை பயிற்றுவித்தவர்கள் திருமதி.இ.விக்னேஸ்வரன் மற்றும் செல்வி.எஸ்.ஏஞ்சலின் ஆசிரியைகள் ஆவர். அத்துடன் அப்பாடசாலையின் அதிபர் அவர்களின் ஒத்துழைப்புடனே இவ்வெற்றி பெறப்பட்டுள்ளது.



## மகுடம் பௌர்ணமி தின நிகழ்வு

தொடர் அமர்வாக இடம்பெற்றுவரும் பௌர்ணமி தின "மகுடம்" நிகழ்வு மட்டக்களப்பு மாநகர சபையின் அனுசரணையுடன் நாளை 07.06.2015 அன்று மாலை 4.30 மணியளவில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வானது கலை இலக்கிய வட்டத்தின் தலைமையில் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கவிஞர்.வீ.மைக்கல் கொலின் அவர்களின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும் இந் நிகழ்வில் "சொல் யாராக இருக்கலாம் நான் எனும் நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது. அத்துடன் கவிஞர் கி.பி.அரவிந்தன் அவர்களின் நினைவிடை தோய்தலும் இடம்பெறவுள்ளது.

அனைவரையும் அழைக்கின்றனர் விழா ஏற்பாட்டாளர்கள்.


பௌர்ணமி நிகழ்வின் தொடர் அமர்வு - 12
"மானுடம் சிறக்க உழைப்பது மகுடம்
தானதுவாகி தழைப்பதும் மகுடம்"
மட்/ மாநகரசபையின் அனுசரணையுடன்

மகுடம்

கலை இலக்கிய வட்டம் நடாத்தும்
கவிஞர் கி.பி.அரவிந்தன் (தோழர் சுந்தர்)
அவர்களின்
நினைவிடை தோய்தலும்
பாலசுகுமார் தொகுத்த
சொல் யாராக இருக்கலாம் நான்
அரவிந்தன் நினைவுப் பதிவுகள்
நூல் வெளியீடும்

காலம் : 07.06.2015 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மாலை 4.30 மணி
இடம் : மட்/பொதுநூலக கேட்போர்கூடம்

வரவேற்புரை
கவிஞர். வீ. மைக்கல் கொலின்
(தலைவர், மகுடம் கலை இலக்கிய வட்டம்)

சிறப்புரை
கி.பி. அரவிந்தன்
வெம்பலாகாமல் தோளணைவால் கனிந்தவன்
ஆகவே - ஜபார்

தலைமை
பேராசிரியர் செ. யோகராசா

முன்னிலை
திரு. மா. உதயகுமார்
(மாநகர ஆணையாளர், மாநகரசபை, மட்டக்களப்பு)

நிகழ்ச்சித் தொகுப்பு:
திரு. ஆ.கி. பிரான்சிஸ்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்


## நீங்களும் எழுதலாம்

பௌர்ணமி தினத்தை முன்னிட்டு ஒவ்வொரு மாதமும் இடம்பெற்று வரும் நீங்களும் எழுதலாம் நிகழ்வு கடந்த 02.06.2015 (செவ்வாய்க்கிழமை) அன்று திரு.தனபாலசிங்கம் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் ஜெயகாந்தன் நாகூர் ஹனிபா ஆகியோரின் நினைவு கூறலும் கவியரங்கும் இடம்பெற்றது. அதில் முதல் கவிதை திரு.கெஜதர்மா அவர்களால் வாசிக்கப்பட்டது. அக்கவிதை எதிர்வரும் வாரம் கவிமுரசில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கவியரங்கின் தலைவராக திரு.யாழவன் செயற்பட்டார். ஈறுதி நிகழ்வாக பெண்களுக்கு எதிரான வன்முறை பற்றி எஸ்தர் உரையாற்றினார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கில்...

அத்துடன், சனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தின் பிரதியை பிரதமர் மற்றும் ஊடகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

கரையோர மாவட்ட கோரிக்கையை நிறைவேற்றத் தாமதமானால் குறைந்தபட்சம் தமிழ் பேசும் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட பகுதிகளை உள்ளடக்கிய முழு அதிகாரம் கொண்ட மேலதிக அரசாங்க அதிபர் பணிமனையையாவது நிறுவித் தருமாறு கேட்டுள்ள அவர் கிழக்கு மாகாண தமிழர்களின் பிரதான கோரிக்கையான சம்பூர் காணிப் பிரச்சினை தொடர்பில் காட்டிய கரிசனைக்காக சனாதிபதிக்கு நன்றிகூறக் கடமைப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அம்பாறை கரையோர மாவட்டத்திற்கு முன்னோடியாக முழு அதிகாரம் பொருந்திய மேலதிக அரச அதிபர் பணிமனையை ஸ்தாபிப்பதற்கான பொருத்தக் கடிதத்தை கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது அப்போதைய சனாதிபதி மஹிந்த ராசபக்ஸ வழங்குவதற்கு தயார் நிலையில் இருந்ததாக பஷீர் சேகுதாவூத் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவின் ஆட்சிக் காலத்தில் கிளிநொச்சி மாவட்டமும் கல்முனை மாவட்டமும் உருவாக்கப்படுவதற்கு எல்லை நிர்ணய ஆணைக்குழு சிபாரிசு முன்வைத்திருந்த போதிலும் 1982 இல் கிளிநொச்சி மாவட்டம் மாத்திரமே உருவாக்கப்பட்டதுடன் அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் உதாசீனப்படுத்தப்பட்டனர். பின்னர் 2002 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் குளியாப்பிட்டி மாவட்டம், மஹியங்கனை மாவட்டம், அம்பாறை கரையோர மாவட்டம் என மூன்று புதிய மாவட்டங்களை உருவாக்க முன்வந்தபோதிலும் இறுதியில் அது நிறைவேறாமல் போனது.

2003 இல் மேற்கொள்ளப்பட்ட புதிய முயற்சியின் பயனாக நிக்கவெரட்டிய மாவட்டம் அம்பாறை கரையோர மாவட்டம் என்பவற்றுக்கான அமைச்சரவைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்ததாகவும் அன்றிலிருந்து இன்று வரை முஸ்லிம் மக்களுக்கான கரையோர மாவட்டக் கோரிக்கையை நிறைவேற்ற முடியாமல் போயிருப்பது குறித்து முஸ்லிம் மக்கள் மிகவும் அதிருப்தியடைந்துள்ளதாக

## கிழக்கில் படைவீரர்...

மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நசீர் அஹமட்- கிழக்கு மாகாண சபை அமைச்சர்கள்- கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து சிறப்பிக்க உள்ளார்கள்.

---

சிவில் சமூக அங்கத்தவர்களான வண. பிரபாகர் அடிகள், மலைமுரசின் ஆசிரியர் இரா.ஸ்ரீஞானேஸ்வரன் மற்றும் ஆசிரியர் மோகன்ராஜ் ஆகியோரிடம் தெரிவித்தார்

குற்றம் புரிந்ததாகக் கூறப்படும் சந்தேக நபர்கள் காவல்துறையின் நடவடிக்கைகளுக்குட்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தமிழ் மக்கள்....

கல்வி முதுமாணிப் படிப்பைத் தொடர்வதற்காக தமக்கு உரிமையுள்ள முழுநேரக் கல்வி விடுமுறையை வழங்க வேண்டும் எனக் கோரியே கிழக்கு மாகாண கல்வி முதுமாணி மாணவர்கள் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்கத் தயாராகி வருகின்றனர்.

இக் கற்கை நெறியானது முழு நேர பாடநெறி என உறுதிப்படுத்தப்பட்ட போதிலும் கல்வி அமைச்சின் சுற்று நிருபம் 26.·.2013ம் இலக்க, பிரிவு 3ன் பிரகாரம் வழங்கப்பட வேண்டிய விடுமுறையை இப் பாடநெறி தொடங்கி நான்கு மாதங்கள் ஆகியும் எங்களுக்கு கிடைக்காமல் இருப்பது மிகவும் கவலை தரும் விடயமாகும். அத்துடன் கிழக்கு மாகாணங்களைத் சேர்ந்தவர்களைத் தவிர ஏனைய மாகாணங்களில் இருந்து வரும் சக மாணவர்களுக்கான முழு நேர விடுமுறையை பெற்றே இப்பாட நெறியினை தொடர்கின்றார்கள். தங்களின் ஏனைய சேவைகளையும் அர்ப்பணிப்புக்களையும் பாராட்டும் அதேவேளை இவ் விடயத்திற்கும் சற்று நேரம் ஒதுக்கி இதற்கான தீர்வு ஒன்றை 10.06.2015ம் திகதிக்கு முன் பெற்றுத்தருமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

எதிர்வரும் 10.06.2015ம் திகதிக்கு முதல் எழுத்து மூலமான முடிவு ஒன்று எங்களுக்கு கிடைக்காத சந்தர்ப்பத்தில் 10.06.2015ம் திகதி ஆசிரியர்களின் நலன்களிலும், அவர்களின் வான்மை விருத்தியிலும் அக்கறையுள்ள ஆசிரியர் சங்கங்கள், கல்விப்புலத்தில் உள்ளோர்கள், கிழக்கின் கல்வி வளர்ச்சியில் அக்கறையுள்ள அரசியல் வாதிகள், தமது பிள்ளைகளின் எதிர்கால கல்வி வளர்ச்சியில் அக்கறையுள்ள பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் ஒன்றிணைத்து ஓர் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நடாத்த தீர்மானித்துள்ளோம் எனஅச்சங்கத்தின் அறிக்கை வெளியாகியுள்ளது.

## கூட்டு....

வெளித்தெரிந்துள்ளது.

தனது கணவனாலும் அவரது நண்பர்களாலும் இருவர் உட்பட மூவரால் அந்த இளம் தாய் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டதாக தெரிவித்தார்.

குறித்த தினத்தில் நண்பர்களுடன் வீட்டுக்கு வருகை...

தந்திருந்த கணவன் தனக்கு குளிர்பானமொன்றைக் குடிக்கத் தந்ததாகவும் அதனை அருந்திய சில மணித்தியாலங்களில் தான் அரைமயக்கத்திற்குச் சென்றதாகவும் அந்தப் பெண் தெரிவித்தார்.

அதனையடுத்து தன்மீது குற்றம் இழைக்கப்பட்டதாகவும் அதனையடுத்து தன் மீது பெற்றோல் ஊற்றி நெருப்பு மூட்டிக் கொலை செய்ய முயற்சி செய்ததாகவும் தெரிவித்தார்.

எனினும் அந்த அனரத்தத்தில் இருந்து தான் தப்பியதாகவும் தற்போது சுமார் நாற்பத்தொன்பது நாட்களாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருப்பதாகவும் தெரிவித்தார்.

குறித்த இளம் தாய் இருபத்தினான்கு வயதானவர் என்பதுடன் அவருக்கு தொடைகள் தொடக்கம் முகத்தின் தாடைப்பகுதி வரை நெருப்புக்காயங்கள் உருவாகி உள்ளன. இதனால் தனது குழந்தைக்குப் பாலூட்ட முடியாத நிலையில் இருப்பதாகவும் அவர் தமிழ்

## திருகோணமலையின்.....

1986ம் ஆண்டில் குருத்துவப் பட்டத்தைப் பெற்றுக்கொண்ட ஆயர் நோயல் அவர்கள் இத்தாலியில் தனது உயர் கல்விப் படிப்பைப் பூர்த்தி செய்திருந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு பேராலயங்களில் பங்குத் தந்தையாகப் பணியாற்றிய இவர் அங்கு மறைமாவட்ட விவலிய, திருவழிபாட்டு மறைக்கல்வி இயக்குனராகவும் இறைபணியாற்றியருந்தார்.

2001ம் ஆண்டு முதல் 2011வரை கண்டியில் உள்ள தேசிய குருமடத்தின் விரிவுரையாளராகவும் இறையியல் மற்றும் மெய்யியல் பீடாதிபதியாகவும் அங்கு பணியாற்றிய பின்னர் திருகோணமலை மாவட்ட ஆயரின் பிரதிநிதியாகவும் திருகோமலை மறை மாவட்ட நிதிப் பொறுப்பாளராகவும் ஆயராக அறிவிக்- கப்படும் வரை பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை மரியாள் கல்லூரி மற்றும் புனித சூசையப்பர் கல்லூரியின் பழைய மாணவரான இவர் திருகோணமலை அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவராகவும் பொதுப் பணி செய்வது குறிப்பிடத்தக்கது.

புதிய ஆயரை திருகோணமலை மாவட்ட தமிழ் சிவில் சமூகத்தின் பிரதிநிதிகள் நேற்று மாலை சந்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன் தமிழ் சிவில் சமூக திருகோணமலை அமைப்பின் தலைமைத்துவப் பொறுப்பையேற்று நடத்தும் படி புதிய ஆயரை வேண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முருக்கையடி....

பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தமது ஆதரவை வழங்கியுள்ளனர்.

கடந்த 3ம்திகதி நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் வாகரை முருக்கையடிமுனை மக்களும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கிழக்கு மாவட்ட அமைப்பாளர்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வாகரைப் பிரதேசச் செயலகத்திற்கு முன்பாக இக்கவனயீர்ப்பு நிகழ்வு நடைபெற்றது. அப்போது வாகரைப் பிரதேசச் செயலாளரிடம் மக்களால் மகஜரொன்றும் கையளிக்கப்பட்டது. அம் மகஜரில் கிழக்கில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட 2006ம் ஆண்டின் மே மாதத்தில் முருக்கையடிமுனைக் கிராமத்தை விட்டு இடம்பெயர்ந்தோம். பின்னர் மார்ச் மாதம் 2007ம் ஆண்டில் நாங்கள் மீள் குடியேறுவதற்காக எமது கிராமத்திற்குத் திரும்பிய போது எமது வாழ்விடங்களில் படையினர் முகாமிட்டிருப்பதைத் தெரிந்துகொண்டோம்.

முருக்கையடிக் கிராமத்தில் வாழ்ந்த எம்மை அங்கு மீளக்குடியமர்த்தாமல் ஊரியன்கட்டு என்ற பிரதேசத்தில் வீடமைப்புக்களைச் செய்து குடியேற்றி உள்ளீர்கள்.

2007ம் ஆண்டில் ஆங்கில மற்றும் சிங்கள மொழியில் எழுதப்பட்ட கடிதங்களைக் கையளித்து எம்மை அச்சுறுத்தி எமது கையொப்பங்களைப் பெற்றுக்கொண்டனர். எமது காணிகள் அக்கடிதங்களைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக, எமது விருப்பத்திற்கு மாறாக கையகப்படுத்தப்பட்டதாக தற்போது அறிகின்றோம்.

எனவே எமது காணிகளை

## கட்சியில் இணைந்தால்...

அடையாளப்படுத்திக்கொண்ட அணியினரே இவ்வாறானதொரு செயலில்' ஈடுபட்டிருப்பதாகத் தெரிகின்றது.

எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என்றும் அதற்காக வாக்களிப்பவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு ரூபா 25,000 வைப்பிலிடப்படும் என்றும் அதற்கான முன் நடவடிக்கையாக கட்சியின் உறுப்பினராகப் பதிவு செய்ய வேண்டும் என்று கூறி அம் மக்களிடம் விண்ணப்பப் படிவங்களை நிரப்பி எடுத்துச் சென்றுள்ளதாகவும் மக்கள் தெரிவிக் - கின்றனர் என சத்தியன் தெரிவித்தார்.

எனினும் இவ்வாறானதொரு விடயம் தொடர்பாக தனக்கு உத்தியோக-

## மீறாவோடை...

காணிகளும் இருப்பதாக முஸ்லிம்கள் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்கள் இக்காணிகள் தொடர்பாக பலதடவைகள் வாழைச்சேனைப் பிரதேசச் செயலகத்தில் முறைப்பாடுகளைச் செய்தும் போராட்டங்களை முன்னெடுத்தும் தமக்கு எவ்வித முடிவுகளும் கிடைக்கவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மக்களின் இந்த ஆர்ப்பாட்டத்தை அடுத்து வருகை தந்திருந்த மாவட்ட ஆணையாளர் திருமதி. சாள்ஸ் அவர்கள் குறித்த காணிகளில் நடைபெறும் அத்து - மீறல்கள் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குகள் இருப்பதால் வழக்கின் தீர்ப்புக்கள் வரும் வரையில் அக் காணிகளுக்குள் யாரும் அத்துமீறிப் பிரவேசிப்பதனைத் தடுப்பதற்குக் காவல்துறையினரை கண்காணிப்பிற்கு ஈடுபடுத்தத் தாம் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்ததை அடுத்து மக்களின் ஆர்ப்பாட்டம் தற்காலிகமாக தணிவடைந்துள்ளது.

## உயர்மட்டக்......

நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்ட - மைப்பு தேர்தலை எதிர்கொள்ளத் தயாராக வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை இன்று திருகோணமலையில் தமிழரசுக் கட்சியின் முக்கிய கூட்டமொன்று நடைபெறவிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இராணுவத்தை...

ஆபத்தான இந்தப் போக்கு சிறிசேன ஆட்சியில் உடனடியாகக் கைவிடப்படும் என்பது சிறுபான்மை மக்களின் எதிர்பார்ப்பாக இருந்தது.டிசம்பர் 2014 முதல் ஜனவரி 2015 வரை அமெரிக்காவின் "ஓக்லாண்ட்" நிறுவனம் நடத்திய ஆய்வுகளின் முடிவுகள், இலங்கை அரசுக்கும் தமிழர்களுக்கும் இடையிலான இணக்கமான நிலைப்பாட்டுக்கு வாய்ப்புகள் இல்லை என்று தெரிவிக்கின்றன என அந் நாளிதழ் தெரிவித்துள்ளது.

---

விடுவியுங்கள் என்ற கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இதேவேளை இராணுவத் தேவைக்காக பாவிக்கப்படும் அக்காணகள் விடுவிக்கப்பட வேண்டும் என கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கோரிக்கையை முன்வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நாடு இரு தேசம்....

## வெற்றுக்கோசமா? அர்த்தமுள்ள கோட்பாடா?

ஒரு நாடு இரு தேசம் என்பது வெற்றுக் கோசமா? அர்த்தமுள்ள கோட்பாடா?

அண்மைய நாட்களில் தமிழ் மக்களது அரசியல் பெருவெளியில் ஒரு நாடு இரு தேசம் "Two Nations - One Country" என்கின்ற கருத்தியல் பற்றிப் பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் □அர்த்தமுள்ள அரசியல் பரவலாக்கம்□ என்ற நிலைப்பாட்டிற்கு மாற்று நிலைப்பாடாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் □ ஒரு நாடு இரு தேசம்□ என்பதனை தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றனர். ஆயினும் அண்மைக் காலம் வரை இந்த அரசியல் நிலைப்பாடு பெருமளவிலான கருத்தியல் முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கவில்லை. கடந்த ஆட்சிக் காலத்தில் நிலவிய அகப்புறச் சூழ்நிலைகளும் அன்று நிலவிய ஒரு இறுக்கமான அரசியல் சூழ்நிலையும் இக்கருத்தியல் மக்கள் முக்கியத்துவப்படுத்தாதற்கான காரணமாக அமைந்திருந்தன எனலாம். தற்போது ஏற்பட்டுள்ள சாதகமான அரசியல் சூழ்நிலைகள் ஒப்பீட்டள-விலான கருத்து நிலைச் சுதந்திரத்தால் தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாசைகள் தொடர்பில் இதுபோன்ற பல்வேறு கலந்துரையாடல்களையூம் கருத்துருவாக்கங்களையூம் மேற்கொள்ளக் கூடிய ஓர் சூழ்நிலை உருப்பெற்று வருகிறது.

**“ தமிழ் மக்களை ஒரு தேசமாக அங்கீகரிக்க வேண்டும் என்ற கருத்து நிலை அண்மையில் உருவானதொன்றல்ல. இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான தமிழ் அரசியல் வெளியில் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வந்த ஒரு கருத்தியல் ஆகும். எனவே இதனை ஒரு வெற்றுக் கோசம் என ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. குறிப்பாக தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் இந்தக் கருத்து நிலை உருவாக்கத்தை முதலில் செய்தவர்களே அவர்கள்தான். எனவே அவர்கள் இதனை ஒரு வெற்றுக் கோசம் என இலகுவில் மறுதலித்துவிட முடியாது. அப்படி அவர்கள் செய்வார்களாயின் தந்தை செல்வநாயகமும் அமிர்தலிங்கமும் தமிழரசுக் கட்சியின் ஏனைய சிரேஷ்ட தலைவர்களும் அன்று செய்தது வெற்றுக் கோசம் என்றாகிவிடும் ”**

இந்நிலையில் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்இ எமது பிரச்சினை ஒரு நாடு இரு தேசம் என்கின்ற அடிப்படையில் அணுகப்பட வேண்டும் எனக் கருத்து வெளியிட்டிருந்தார். முதலமைச்சரின் இருக்கருத்தானது இவ்வெண்ணக்கரு தொடர்பிலான ஒரு பரந்த கவனத்தை ஈர்த்ததுடன் மையவிவாதப் பொருளாகப் பரிணமிக்கக் கூடிய முக்கியத்துவத்தைப் பெற ஆரம்பித்தது. எவ்வாறெனினும் தமிழரசுக் கட்சியின் உயர் தலைமைப் பீடத்தைச் சேர்ந்தவர்கள் இவ்வாறான ஓர் கருத்து நிலை தமிழ் மக்கள் மத்தியில் மீள் உருவாக்கம் பெறுவதை விரும்பாத போக்கும் அது தமது அரசியல் நிலைப்பாடான அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கம் என்பதைப் பாதிக்கும் என அர்த்தம் கொள்கின்ற போக்கும் வெளிப்பட ஆரம்பித்-துள்ளது. இதன் ஓர் அங்கமாக திருகோணமலையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட தமிழரசுக் கட்சியினர்இ ஒரு நாடு இரு தேசம் என்பது ஓர் வெற்றுக் கோசம் எனச் சாடியதுடன் அது நடைமுறைக்குச் சாத்தியமற்ற ஒன்று என விமர்சித்திருந்தனர்.

ஒரு நாடு இரு தேசம் என்பது இன்று நேற்று உருவான கருத்தியல் அல்ல. தமிழரசுக் கட்சியினரது தோற்றத்திற்கு வழிவகுத்ததே இக்கருத்தியல்தான். *1949* ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் *18* ஆம் திகதி மருதானையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் முதலாவது கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய எஸ்.ஜே.வி. செல்வநாயகம் ஒரு நாடு இரு தேசம் என்ற கருத்தியலை முன்வைத்தே உரையினை நிகழ்த்தினார். அதில் இலங்கை ஏன் இரு தேசத்தின் ஒருங்கிணைப்பாகக் கருதப்பட வேண்டும் என்பதனையூம் தமிழ் பேசும் மக்கள் ஏன் ஒரு தேசமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதனையும் காரணங்களோடு தெளிவாகக் கூறியிருந்தார். தந்தை செல்வாவின் இழப்பிற்குப் பின்னர் தமிழரசுக் கட்சியை வழிநடத்திய அமிர்தலிங்கம் *1978* ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தை இலங்கை அரசாங்கம் கொண்டு வர முற்பட்ட வேளையில் பாராளுமன்றத்தில் ஒரு பிரசித்தி வாய்ந்த உரையினை நிகழ்த்தியிருந்தார்.

அதில் கூட ஏன் தமிழ் மக்கள் ஒரு தேசமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பது பற்றி நீண்டதொரு விளக்கம் அளித்திருந்தார். தொடர்ந்து வந்த விடுதலைப் புலிகளின் காலத்தில் கூட ஒரு நாடு இரு தேசம் மற்றும் உள்ளக சுயநிர்ணயம் போன்ற கருத்தியலை முன்வைத்திரந்தனர். தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தமது அரசியல் நிலைப்பாடாக ஒரு நாடு இரு தேசம் என்பதனை முன்வைத்து வருகின்றனர். ஆக தமிழ் மக்களை ஒரு தேசமாக அங்கீகரிக்க வேண்டும் என்ற கருத்து நிலை அண்மையில் உருவானதொன்றல்ல. இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னரான தமிழ் அரசியல் வெளியில் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வந்த ஒரு கருத்தியல் ஆகும். எனவே இதனை ஒரு வெற்றுக் கோசம் என ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. குறிப்பாக தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் இந்தக் கருத்து நிலை உருவாக்கத்தை முதலில் செய்தவர்களே அவர்கள்தான். எனவே அவர்கள் இதனை ஒரு வெற்றுக் கோசம் என இலகுவில் மறுதலித்துவிட முடியாது. அப்படி அவர்கள் செய்வார்களாயின் தந்தை செல்வநாயகமும் அமிர்தலிங்கமும் தமிழரசுக் கட்சியின் ஏனைய சிரேஷ்ட தலைவர்களும் அன்று செய்தது வெற்றுக் கோசம் என்றாகிவிடும்.

இந்நிலையில் உங்களிடம் இயல்பான கேள்வி ஒன்று எழலாம். தேசம் என்பதையூம் நாடு என்பதையூம் ஒரே அர்த்தத்துடன் அன்றாடம் பயன்படுத்தி வரும் நிலையில் இவை இரண்டிற்குமிடையிலான கருத்து நிலை வேறுபாடு என்ன? என்பதே அதுவாகும். தேசம் என்ற வார்த்தையூம் நாடு என்கின்ற வார்த்தையூம் மாறி மாறி பயன்படுத்தி வந்தாலும் இவை இரண்டிற்கும் இடையில் கருத்தியல் வேறுபாடு உள்ளது. ஒரு நாடு என்பது சர்வதேச எல்லைகளைக் கொண்ட சட்ட ரீதியான ஓர் புவியியல் நிலப்பரப்பு எனலாத். இவை மற்றைய நாடுகளுடனான சர்வதேச உறவுகளையும் ஏற்றுமதி இறக்குமதிகளைக் கொண்ட சர்வதேச வர்த்தகங்களையூம் கொண்டிருக்கும் சட்டரீதியான அங்கீகாரம் பெற்ற ஒன்றாகும். உலகில் ஏறத்தாழ *190* நாடுகள் காணப்படுகின்றன.

தேசம் என்பதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வரைவிலணக்கணங்கள் காணப்பட்டாலும் கூட பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிணக்கணத்தின்படி ஒரு இனம் தனக்கென தனியாக மொழிஇ கலாசாரம்இ பண்பாடுஇ பாரம்பரியம் மற்றும் வேறுபடுத்திக் காட்டக் கூடிய தனியான வரலாறு என்பவற்றைக் கொண்டிருப்பதுடன் குறித்த ஓர் நிலப் பகுதியில் பெரும்பான்மையாக வாழ்ந்து வருவார்கள் ஆயின் அவர்களை “தேசம்” (Nation) என அங்கீகரிக்க முடியும். இங்குள்ள மயக்க நிலை என்னவென்றால் தேசம் (Nation) என்பதைத் தனி நாடு என பலர் தவறாக அர்த்தப்படுத்திக் கொள்வது உண்டு. தேசம் என்பது தனி நாடல்ல. தேசம் என்பது மேற்கூறப்பட்ட பண்புகளைக் கொண்ட ஓர் தேசிய இனத்திற்கான அரசியல் அங்கீகாரம் மட்டுமே.

தேசம் என்கின்ற அரசியல் அங்கீகாரத்துக்கான முக்கியத்துவம் என்ன? ஏன் இந்த அரசியல் அங்கீகாரம் வேண்டும்? எனக் கேட்டால் ஒரு தேசமாக அங்கீகரிக்கப்பட்ட இனம் தனது சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைகளை முன்வைக்க முடியூம். ஆக தமிழர்கள் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமது அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் தமிழ் மக்கள் ஓர் தேசமாக அங்கீகரிக்கப்பட வேண்டும். அவ்வாறான அங்கீகாரம் தமிழ் மக்களுக்கான அரசியல் உரிமைகளைப் பெற்றுத் தருவதற்கான அடிப்படயாக அமையூம். மாறாக இலங்கை என்கின்ற ஓர் நாட்டுக்குள் தமிழ் மக்கள் வெறும் சிறுபான்மை-யினர் மாத்திரமே என்பதை ஏற்றுக் கொண்டு 13 ஆவது திருத்தச் சட்டம் போன்றதோர் அதிகாரப் பரவலாக்கத்தைப் பெற்றுக் கொள்வதாக இருந்தால் தமிழர்களுக்கு தேசம் என்கின்ற அங்கீகாரம் தேவையில்லை. “அர்த்தம் உள்ள அதிகாரப் பரவலாக்கம்” என்கின்ற நிலைப்பாடே போதுமானதாகும்.

ஆக நாம் எங்கே சென்றடையப் போகின்றோம், அல்லது தமிழ் மக்களுக்கு எத்தகைய தீர்வூ அவசியமானது என்பதை அடிப்படையாகக் கொண்டே “ஒரு நாடு இரு தேசம்” என்பது வெற்றுக் கோசமா? அல்லது அர்த்தமுள்ள கோட்பாடா என்பதைத் தீர்மானிக்கும்.

**சதுர்வேதி**



ஸ்ரீலங்காவில் சுயாதீன விசாரணை வேண்டும் என்பதை வலியுறுத்தி டெனிஸ் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் 2013 ஏப்ரல் கஜேந்திரகுமார் உரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையில் நடைபெற்ற கரப்பந்தாட்ட போட்டியில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையிலான இரண்டு போட்டிகளிலும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி வெற்றி பெற்றது. யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி ஆர்.மோகனதாஸ் தலைமையில் கோப்பாய் கிறுஸ்தவ கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இப்போட்டி நடைபெற்றது.

## கரப்பந்தாட்டப் போட்டி

இறுதிச் சுற்றில் விளையாடிய கோப்பாய் பிரதேச செயலக ஆண்கள் அணியுடன் மோதிய தெல்லிப்பழை பிரதேச செயலக ஆண்கள் அணி 03 க்கு 02 என்ற அடிப்படையில் தெல்லிப்பழை வெற்றியைத் தனதாக்கிக்கொண்டது.

கரவெட்டி பிரதேச செயலக பெண்கள் அணியும் தெல்லிப்பழை பிரதேச செயலக பெண்கள் அணியும் மோதியதில் 02 க்கு 0 அடிப்படையில் தெல்லிப்பழை அணி முதலாம் இடத்தை தனதாக்கிக்கொண்டது.



# விளையாட்டு முரசு

## 11 வயதிலேயே பல சாதனைகள்

சிங்கப்பூரில் கடந்த 30 ஆம் திகதி ஆரம்பமான ஆசிய பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்கப் (செஸ்) போட்டி-2015 இல் 11 வயது பிரிவுக்கட்பட்ட பிரிவில் கண்டி, புனித திருத்துவ கல்லூரியில் 6ஆம் தரத்தில் பயிலும் மாணவனான கிருபாகர் ஹரிகிஷன், பங்குபற்றினார். இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகள் பலவற்றிலும் நடைபெற்ற சதுரங்கப் போட்டிகளில் தனது திறமையை வெளிப்படுத்தி சாம்பியன் பட்டங்களையும் பதக்கங்களையும் சான்றிதழ்களையும் தம்வசப்படுத்திய இவர், போலந்து, இந்தியா, ரஷ்யா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் நடைபெற்ற சர்வதேச ரீதியிலான சதுங்கப் போட்டிகளில் பங்கேற்று தனது திறமைகளை வெளிபடுத்தியுள்ளார். இரண்டரை வயது முதல் சதுரங்கத்தில் தன்னுடைய திறமையை காண்பித்துவரும் இவர், கடந்த ஆண்டு நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி, கல்லூரிக்கு பெருமை சேர்த்ததோடு, 11 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான கராத்தே போட்டியில் முதன்முறையாக பங்கேற்று சாம்பியன் பட்டத்தை சுவீகரித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



## சதுரங்கப் போட்டி

– கதிரவன்–

கிழக்கு மாகாணகல்வி திணைக்களம் நடத்திய மாகாண நிலை சதுரங்கம் போட்டி கடந்த சனிக்கிழமை மட்டு மகாஜன கல்லூரியில் ஆரம்பமானது. இரண்டு தினங்கள் இப்போட்டி நடத்தப்பட்டது. 15 வயது ஆண்கள் பிரிவில் திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியும். பெண்கள் பிரிவில் மட்டு வின்சன் உயர்தர பாடசாலையும் சம்பியனாகின. திருகோணமலை புனித மரியாள் கல்லூரி மூன்றாம் இடத்தினை சுவீகரித்துக் கொண்டது. 19வயது ஆண்கள் பிரிவில் கல்முனை ஸாகிரா கல்லூரியும், பெண்கள் பிரிவில் ஐயன்கேணி மகா வித்தியாலயமும் சம்பயினாகின. திருகோணமலை சண்முக இந்து மகளீர் கல்லூரி

## பூப்பந்தாட்டப் போட்டி

கடந்த வாரம் மட்டக்களப்பு குருக்கல்மடம் தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கிழக்கு மாகாணமட்ட பூப்பந்தாட்டப் போட்டியில் 15வயது பெண்கள் பிரிவில் ,ரண்டாவது தடவையாகவும் முதலாம் ,டத்தை பெற்று சம்பியனாக வந்து சாதனை படைத்துள்ளனர். அதே நேரம் 19 வயது பெண்கள் பிரிவில் எமது கல்லூரி மாணவிகள் 3ம் ,டத்தையும் பெற்று தேசிய மட்டப் போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ,து எமது பாடசாலையில் முதல் தடவையாக ,டம்பெற்ற ஓர் வரலாற்று சாதனை ஆகும். ,ச் சாதனை படைத்த பூப்பந்தாட்ட வீராங்கனைகளுக்கும், பயிற்றுவித்த ஆசிரியர் திரு.ஆ.நவதீபன் அவர்களுக்கும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் பாடசாலை சமூகத்தினர் அனைவரும் பராட்டுக்களை தெரிவித்துக்கொள்கின்றனர்.



## வி.உபகரணங்கள் கையளிப்பு

திருகோணமலை புனிதவளனார் வித்தியாலயத்திற்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களை முன்னாள் நகராட்சி மன்ற உறுப்பினர் சி.நந்தகுமார் வித்தியாலய அதிபர் திருமதி எஸ். ஞானராஜாவிடம் கையளிப்பதை படத்தில் காணலாம்

– சேனையூர் நிரூபர்–



## அறநெறியுடன் விளையாட்டும்

கூழாவடியில் அமைந்துள்ள விபுலானந்தா அறநெறிப்பாடசாலையின் விளையாட்டு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது. அறநெறிக்கல்வியை மட்டும் போதிக்காது மாணவர்களின் உடல்திறனிலும் அக்கறை செலுத்தும் வகையில் இந்த நிகழ்வு நடாத்தப்பட்டது. கூழாவடி விபுலானந்தா அறநெறிப்பாடசாலையின் அதிபர் ப.யோகராஜா தலைமையில் இந்த நிகழ்வு மாமாங்கேஸ்வரர் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

## மீண்டும் டிராவிட்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ராகுல் டிரவிட், இந்திய 19 வயதுக்குட்பட்ட அணிக்கான பயிற்றுவிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்படுவார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டுள்ள நிலையில் இந்திய நட்சத்திர வீரர்களில் ஒருவரான ட்ராவிட், குறித்த பதவியை பெற்றுக்கொள்ளவுள்ளார். ஆலோசனைக் குழுவில் இவர் இணையவுள்ளார் என்ற செய்தி வெளியாகிய போதும் இளம் வீரர்களுடன் கடமையாற்றும் எண்ணமும் விருப்பம் காரணமாகவுமே இந்த பொறுப்பை ட்ராவிட் தெரிவு செய்துள்ளார்.

## 12 பேருள் 1வர் தமிழர்

சர்வதேச கிரிக்கெட் வாரியம் வெளியிட்டுள்ள எலைட் பேனல் நடுவர் குழு பட்டியலில் 11 ஆண்டுகளுக்கு பிறகு இந்தியர் ஒருவருக்கு இடம் கிடைத்துள்ளது. இந்த குழுவில் ஆண்டுதோறும் 12 பேர் இடம் பெற்றிருப்பார்கள். மிகவும் கவுரவமிக்க இந்த பட்டியலில் இடம் பெறுபவர்களுக்கு தான் உலகக்கிண்ணம் போன்ற பெரிய போட்டிகளுக்கு நடுவராக பணியாற்ற முக்கியத்துவம் அளிக்கப்படும். இந்நிலையில் ஐசிசி வெளியிட்டுள்ள 2015-2016ம் ஆண்டு எலைட் பேனல் நடுவர் குழுவில் இந்தியாவின் சுந்தரம் ரவி இடம் பெற்றுள்ளார்.

## சச்சினின் சாதனை முறியடிப்பு



டெஸ்ட் கிரிக்கெட்டில் குறைந்த வயதில் 9ஆயிரம் ஓட்டங்களைப் பெற்ற சச்சின் டெண்டுல்கரின் சாதனையை அலெஸ்டயர் குக் முறியடித்தார். ஹெடிங்லீயில் நியூஸிலாந்துக்கு எதிரான 2-ஆவது டெஸ்ட் போட்டியில் 30 வயது 159 நாட்களில் அலெஸ்டயர் குக் 9 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார். சச்சின் இந்த சாதனையை 30 வயது 253 நாட்களில் படைத்திருந்தார். தற்போது இந்த சாதனையை குக் 94 நாட்களுக்கு முன்னதாகவே முறியடித்துள்ளார். 31 வயதுக்கு முன்பாகவே டெஸ்டில் 9,000 ஓட்டங்களை எடுத்த வீரர்கள் பட்டியலில் சச்சின் மற்றும் குக் ஆகியோர்தான் உள்ளனர்.

## தலைவராகிறார் விராட்

டெஸ்ட் போட்டிகளில் இருந்து டோனி ஓய்வு அறிவித்ததும் தான் அழுது விட்டதாக விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார். இதைத் தொடர்ந்து துணை அணித்தலைவராக இருந்த விராட் கோஹ்லி அணித்தலைவராக தெரிவு செய்யப்பட்டார். இது பற்றி அவர் கூறுகையில், டோனி தலைமையில் தான் விளையாடினோம். நான் அணித்தலைவரான தருணம் சிறப்பானது. இந்தியாவுக்காக டெஸ்ட் போட்டிகளில் விளையாட வேண்டும் என்பதே எனது ஒரே கனவு என்று கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலையின் புதிய ஆயர் அதி வணக்கத்திற்குரிய அருட்திரு. கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்





திருகோணமலை மறை மாவட்டத்திற்கான புதிய ஆயராக அருட்திரு சிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் அடிகளார் தெரிவாகியுள்ளார்.

அதி. வண. ஆயர் கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் பணிமூப்பின் காரணமாக ஆயர் பணியிலிருந்து ஓய்வு பெற்றுக்கொண்டதை அடுத்தே அடிகள் நோயல் இம்மானுவல் அவர்கள் ஆயராக வத்திக்கான் திருச்சபையால் தேர்வாகியுள்ளார்.

21

## இராணுவத்தை அகற்றினால்தான் தமிழர் தாயகத்தில் சகஜநிலை

### "த ஹிந்து" இந்தியப் பத்திரிகை தெரிவிப்பு

தமிழர்கள் பகுதியில் குவிக்கப் பட்டிருக்கும் இராணுவத்தை விலக்கிக் கொள்வது உள்ளிட்ட வி'யங்களில் தீர்க்கமான முடிவுகள் எட்டப்பட்டால் தான், இலங்கையில் சகஜநிலை திரும்பும் என்பதை அரசு உணர வேண்டும். இவ்வாறு தி இந்து ஆங்கில நாளிதழ் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ராஜபக்ச ஆட்சியின் போது தமிழர்கள் வாழும் பகுதிகளில் வணிக நடவடிக்கைகள், வளர்ச்சித் திட்டங்கள், கல்வி, சுற்றுலா, காவல்துறையின் பணிகள் உட்பட பல்வேறு பணிகளில் ஈடுபட இராணுவத்துக்கு அனுமதியளிக் கப்பட்டது....

21

## கட்சியில் இணைந்தால் ரூபா. 25,000

### பொய் வாக்குறுதிகளைக் கொடுத்து ஆட்சேர்ப்பு நடவடிக்கை

தமிழ் மக்களை பெரும்பான்மைக் கட்சியொன்றில் இணைக்கும் நடவடிக்கைகள் குச்சவெளிப் பிரதேசத்தில் நடைபெறுவதாக பத்மநாபா ஈபிஆர்எல்எவ் கட்சியினர் மலைமுரசிற்குத் தெரிவித்துள்ளனர்.

கடந்தவாரம் குச்சவெளிப் பிரதேசச் செயலகத்தின் இலுப்பங்குளம், பெரியகுளம் மற்றும் திருமால்புறம் ஆகிய கிராமங்களில் உள்ள மக்களைச் சந்திக்கச் சென்ற மேற்படி அணியினரிடம் மக்கள் இத்தகவலைத் தெரிவித்திருப்பதாக அவ்வமைப்பின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் திரு. சத்தியன் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் என த த ம மை

21

## உயர்மட்டக் குழுவை உடனடியாகக் கூட்டுக

### கூட்டணிக் கட்சிகள் சம்பந்தரிடம் கோரிக்கை

### திருமலையில் இன்று கூட்டம்??

நாடாளுமன்றத் தேர்தலுக்குத் தயாராவது குறித்துக் கலந்துரையாடுவதற்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர்மட்டக் குழுவை உடனடியாக கூட்ட வேண்டும் என்று, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் கூட்டணிக் கட்சிகள் கோரிக்கை விடுக்கவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் கடந்த 2ம் நாள் சந்தித்துப் பேசிய, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும், ரெலோ, ஈபிஆர்எல்எவ், புளொட் அகிய கட்சிகளின் தலைவர்கள் இந்த முடிவை எடுத்துள்ளன.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர்களை நிறுத்துவது குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன் நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளத் தயாராகும் வகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர் மட்டக் குழுவை, உடனடியாக கூட்ட வேண்டும் என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் கோரிக்கை விடுக்கவும், இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா நாடாளுமன்றம் விரைவில் கலைக்கப்படக் கூடிய சாத்தியங்கள் உள்ள

21


உ
சிவமயம்

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அன்னை மடியில் 02 01 1962



இறைவன் அடியில் 12 05 2015

அன்புடையீர்,

கடந்த 12.05.2015 செவ்வாய்க்கிழமை (தேய்பிறை தசமி) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி


அமரர் அமிர்தலிங்கம் நிர்மலாதேவி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள்(10.06.2015) புதன் கிழமை கீரிமலையில் அஸ்தி கரைக்கப்பட்டு (11.06.2015) வியாழக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டு கிரியையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இ.அமிர்தலிங்கம்
இல.07.விகாரைவீதி
திருகோணமலை.
T.P 026 2225129,077 4323212

இங்ஙனம்
குடும்பத்தினர்


## வாக்குறுதியை அடுத்து பின்போடப்பட்ட தொண்டர் ஆசிரியர் போராட்டம்



கிழக்கு மாகாணத் தொண்டர் ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்ட சுழற்சிமுறை உணவொறுப்புப் போர் ஆளுனரின் உறுதிமொழியை அடுத்து ஆரம்பிக்கப்பட்ட அன்றே முடிவிற்கு வந்துள்ளது.

தனக்குச் சிறிது கால அவகாசம் தரும்படியும் அதன்படி எதிர்வரும் 10ம் திகதிக்கு முன்பாகத் தொண்டர் ஆசிரியர்கள் தொடர்பான சரியான முடிவினை எடுப்பதாக ஆளுனர் உறுதிமொழி வழங்கியிருப்பதாக திருகோணமலை மாவட்டத் தொண்டராசிரியர் சங்கத் தலைவர் ஜெயமோகன் தெரிவித்தார்.


முதற்தடவையாக திருகோணமலையில் அனைத்து வசதிகளையும் கொண்ட ஒவ்செற் அச்சுப் பதிப்பு நிலையத்தை வாடிக்கையாளரின் வசதி கருதி நிறுவியுள்ளோம்

ஸ்ரீராம் பிறிண்டர்ஸ்
SHRIRAM PRINTERS

தங்களுடைய புத்தகங்கள், திருமண அழைப்பிதழ்கள், சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வாழ்த்துமடல்கள், மற்றும் அனைத்து வகையாக ஒவ்செற் அச்சுப்பதிப்புக்களும் வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப அழகாகவும் வர்ணமயமாகவும் திறம்பட செய்து தரப்படும்.



159A, கடல் முக வீதி.
திருகோணமலை.
0777 555 738



மலைமுரசின் கட்டணமின்றிய திருமண விளம்பரங்களில் உங்களின் விபரங்களும் இடம்பெற வேண்டுமாயின் தகவல் அனுப்புங்கள். அனுப்புபவரின் அடையாள அட்டைப் பிரதி இணைக்கப்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாரப் பத்திரிகை மலைமுரசு நிறுவனத்தினால் இல.159 ஏ, கடல் முக வீதி, திருகோணமலையில் இருந்து 06.06.2015ல் அச்சிட்டு வெளியிடப்படுகின்றது.